19

தொ. 16] ...வேக போதினி [பகுதி, 9-1...

The Viveka Bodhini

The Premier Illustrated Tamil Monthly

The 17th year of its Publication

Vol. XVI] JUNE—JULY—192... [No. ...-10

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No. ......
3 FEB 1925
MADRAS

சந்தாதார்க்குக் குறைந்த விலை

அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதி.—மேனுட்டுக் கதாசிரிய... ளுள் முதன்மை பெற்றவரான "விக்டர் ஹ்யூகோ" என்பவரியற்றிய "லெஸ் மி... பிள்ஸ்" என்னும் சிறந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது. படிக்கப் படிக்கப் ... யூட்டும்வண்ணம் அழகிய நடையில் எழுதப்பட்டது. 4-ஆப்டோன் ... களும் கொண்டது. முதற் பாகம் ... விலை ரூ. 1—...

விவேக போதினிச் சந்தாதார்க்கு மாத்திரம். ... விலை ரூ. 1—...

அக்பர் சக்கரவர்த்தி.—பேபரின் படையெடுப்பு; உமாயூனும் ஆ...பரின் இளமையும்; இந்தியாமீது உமாயூன் படையெடுப்பும், அவன் விடுப்பும்; ஆக்பருக்கு ஆதிபத்திய மளித்த பானிப்பட்டு யுத்தம்; ஆக்பர் சிம்மாஸனமேறிய பொழுது இந்தியா இருந்த நிலைமை; ஆக்பரின் அரசாட்சி; ஆக்பரின் கொள்கைகள்; இவை மிக்க அழகாய் எழுதப்பட்டுள்ளன. ... விலை அணு 12

விவேக போதினிச் சந்தாதார்க்கு மாத்திரம் ... விலை அணு 9

பயிண்ட் செய்த விவேக போதினித் தொகுதிகள்.—8-ம் தொகுதி 14-ம் தொகுதி, 15-ம் தொகுதி.—இவைகளில் பயிண்ட்செய்த தொகுதிகள் தற்சமயம் அதிகமிருப்பதால், சந்தாதார்க்கு மாத்திரம் பைண்ட்செய்த தொகுதி ஒன்று ரூ. 4—0—0 விதம் கொடுக்கப்படும்.

பரதன் அல்லது ப்ராத்ரு சிகாமணி.— ... விலை அணு 12

விவேக போதினிச் சந்தாதார்க்கு மாத்திரம் ... விலை அணு 8

...ாயணம்.—பல அழகிய ஆப்டோன் படங்களுடன் விலை அணு 8

...தா : : உள்நாடுகளுக்கு ரூ. 5 : : வெளிநாடுகளுக்கு ரூ. 6 : : மாதிரி சஞ்சிகை அ. 2.

JL
ym 21, N08UD.
N24. 16.10.
218386.

YOUR BABY IS IN DANGER FROM COW'S MILK.

DO NOT MAKE YOUR BABY STRUGGLE FOR LIFE BY FEEDING HIM WITH RAW COW'S MILK. IT IS HARD TO DIGEST AND FULL OF THE GERMS OF DISEASE.

GIVE YOUR BABY

NESTLE'S FOOD

Rs. 1-6. PER TIN.



Rs. 1-6. PER TIN.

YOUR BABY WILL GROW BIG AND STRONG AND HEALTHY, IF YOU GIVE HIM **NESTLE'S FOOD**, WHICH IS EASILY DIGESTED, FREE FROM ALL HARMFUL GERMS, UNTOUCHED BY HAND, AND CONTAINS ALL THE NOURISHMENT THAT A BABY NEEDS.

உயர்தர நூல்கள்

	ரூ.	அ.
ஷண்முகசுந்தரம் ...	2	0
தனபாக்கியம் ...	2	0
மோகனாங்கி ...	1	4
சிவகுமாரன் ...	1	0
தஞ்சைநாயகர் தாழ்வு ...	1	0
விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் ...	1	0
அக்பர் சக்கரவர்த்தி ...	0	12
பரதன் ...	0	12

குறிப்பு:—போதினி சந்தாதார்க்கு மேற்கண்ட நூல்கள் மிகக் குறைந்த விலைக்கு அகப்படும். 3-ரூபாய்க்கு குறையாத ஆர்டர்களுக்கு போஸ்டேஜ், வி. பி. கமிஷன் சார்ஜ் பண்ணப் ..மாட்டாது.

விலாஸம்:—அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை.

விவேக போதினி

தொ. 16] ஆனி—ஆடிமீ [பகுதி 9-10

விஷய அட்டவணை

முருகன் வழிபாடு 241
சென்னை மாகாணக் கல்வி மகாநாடு ... 242
ஸர் ஜகதீச சந்திர போஸ் 245
ஸ்ரீ கிருஷ்ண கர்ணாமிருதம் ... 248
சித்திரச் சதுரங்கள் 249
நமது சிறு கதை—என் குழந்தை ... 251
சிவாஜி சத்ரபதி 254
லோகநாதன் (துப்பறியும் இனிய நாவல்). 257
சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... 271
பிரபஞ்ச வர்த்தமானம் ... ... ?

சித்திரப்படங்கள்

நால்வர் (அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்.)

(A: No. 2278) **பாலாஜி அண்டு கம்பெனி, காசி**

புதிய சரக்குகள் உடனே எழுதுங்கள் சகாய விலைகள்

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினால் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகைவேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில் ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை.

1. நெ. பெரிய செட் 1-க்கு ரூ. 5—0—0
2. நெ. மத்திம செட் 1-க்கு ரூ. 3—0—0
3. நெ. சிறு செட் 1-க்கு ரூ. 2—8—0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனாம்.

Balajee & Co., Silk Merchants,
Benares City.

Of Interest to

BOOKSELLERS and HEADMASTERS

Exercise Note Books differest sizes, students' Bound Note Books, Ruled or unruled - supplied at rates that defy competition. Names of Institutions and Book-sellers will be printed free on large orders. Drawing and Graph Note books also supplied. Neat execution and prompt delivery guaranteed. Just send a trial order.

THE ALLIANCE COMPANY,
Publishers, Binders etc.
MYLAPORE, MADRAS.

நூதன ரோம சங்காரி

ல்யூனர் டெபிலேடரி சோப்பு

ஆயில் பவுடர் எது வேண்டும்?

சரீரத்தின் எந்த பாகத்திலும் மேற்கண்ட எதையாகிலும் அதில் கண்டபடி உபயோகிக்க ரோமங்களைக் கட்டாயம் நீக்கும். தோலின் வர்ணத்தை மாற்றாமலும் எரிச்சல் இல்லாமலும் இருக்கக் கூடியது. உத்தரவாதம்.

TRADE MARK

எஜெண்டுகள் தேவை. தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

மூன்று கொண்ட பெட்டி 1-க்கு வி. பி. செலவு உள்பட ரூ. **1—8—0.**

என். ல்யூனர் அண்டு கோ.,
தபால் பெட்டி நெ. 543,
பார்க் டவுன், மதராஸ

(A. No 2998.)

ஷண்முகம்

(A. No. 2700)

மூக்குத்தூள்

70 வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும் மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் 13 அணா. 5 பலம் 15 அணா.

ஆர்.கே. பரிமள மூக்குத்தூள் 1-புட்டி அணா 4
மறந்துவிடுமுன் எழுதவும்
(போஸ்டேஜ் உள்பட)

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி லிமிடெட்,
தபாற்பெட்டி நெ. 140, மதராஸ்.

VIVEKA BODHINI

FIFTEEN (15)

ANNUAL BOUND VOLUMES

NOW READY FOR SALE

EACH VOLUME RS. 6

15 VOLUMES TOGETHER RS. 75

Postal or rail charges extra

No packing is charged

Only a few sets available

Apply sharp to:—

THE MANAGER,
THE VIVEKA BODHINI,
Mylapore, Madras.

காலிகோ பைண்ட் ரூ. 2-4-0

பாண்டவ சரித்திரம்

அல்லது

தருமமே ஜயம்

சந்தாதார்க்கு ரூ. 2-0-0

ஐந்தாவது வேதமென கொண்டாடப்பட்டு வரும் ஸ்ரீமக் மஹாபாரதம் மிகப் புண்ணிய கிரந்தமும், நீதிக் களஞ்சியமு மாகும். இதைக் கேட்டாலும், பிறர்க்கு எடுத்துச் சொன்னாலும், இம்மையிலும் மறுமையிலும் க்ஷேமமுண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

இதில் அரும்பொருளடங்கிய புண்ணிய கதைகளும், உத்தம புருஷர்களின் சரித்திரங்களும் நிரம்பப் பெற்றது. இதிலுள்ள விஷயங்களை யாவரும் தெரிந்துகொள்ளல் மிக்க அவசியம். இந்நூலில், பாண்டவர்களின் பிறப்பு, வளர்ப்பு, அவர்கள் முதலில் அடைந்த பலவித கஷ்டங்கள், பாஞ்சால ராஜனுகிய விராடனுடைய சம்பந்தம் பெற்றது, யாதவசிரேஷ்டரான ஸ்ரீகிருஷ்ணபகவானது சகாயத்தால் பாண்டவர் எல்லா ஆபத்துக்களையும் தாண்டி ஜயம் பெற்றது, அவர்கள் தர்மம், தயை, சத்தியம், துஷ்ட நிக்கிரகம், சிஷ்டபரிபாலனம் முதலிய நற்குணங்களோடு கூடினவர்களாய் மன்னுயிரைத் தன்னுயிர்போலப் பாவித்து பிரஜைகளிடம் அன்புபாராட்டி, நியாயமாய்ச் செங்கோல் செலுத்தி இம்மையில் பெரும்புகழும், மறுமையில் பேராநந்தமும் அடைந்தது முதலான அருமையான விஷயங்கள் இந்நூலில் அழகாய் விவரிக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் எவராலும் பிரசுரிக்கப்படவில்லை. மூதநூலின் கௌரவத்துக்கேற்றபடி மிக்க அழகாய் அச்சிட்டு, அழகிய காலிகோ பைண்ட் செய்யப்பெற்றது.

= 400 பக்கங்கள் கொண்டது : : விலை ரூ. 2-4-0 =

= விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் ரூ. 2-0-0 =

மாதிரிப் பக்கம் :—

பார்த்தனும், ஸ்ரீகிருஷ்ணனும் உடனே சங்கநாதஞ் செய்தனர். இதுகண்ட மற்றைய தலைவர்களும் சங்கங்களை ஊதத் தொடங்கினார்கள். தாளம், பேரீ முதலிய வாத்தியங்கள் முழங்கின. இரதங்களின் ‘கட கட’ என்னும் சப்தமும், ஈட்டி முதலிய ஆயுதங்கள் ஒன்றோடொன்று மோதி உண்டாகும் நாதமும் எங்கும் கிளம்பின. கௌரவ சேனைகள் பக்கலிலும் பலவித கோஷங்கள் ஏற்பட்டு, எங்கு பார்த்தாலும் ஒரே யுத்த ஆரவாரம் உண்டாயிற்று. இருபக்கத்துச் சேனைகளும் நெருங்கிக் கைகலந்து போராடும் தருணம் கிட்டியது. யுத்த ஆரம்பநாள் விடிந்தது. பல அபசகுனங்கள் காணப்பட்டன. பெருங்காற் றடித்தது. எரிகொள்ளிகள் சூரியனைநோக்கி விழுந்தன. செங்கதிரோன ஒளி மழுங்கிற்று. பூகம்பம் உண்டாயிற்று. மின்னல் மின்னிற்று. கதையும் கையுமாய் பாண்டவசேனையின் முன்னணியில் நிற்கும் பீமனைப்பார்த்து, அங்குள்ள தலைவர் முதலானோர் உற்சாகங்கொண்டு, கௌரவாதிகளை ஒரு நொடியில் பொடிப்பொடியாக்குவோர்போல் நின்றனர்.

அப்போது அர்ஜுனன் பகவானை நோக்கி, துர்யோதனனுக்குச் சகாயமாய் வந்திருப்பவர்களைக் கண்ணுற்றுப் பார்ப்பதற்காகத் தனது இரதத்தை இருதிறத்தாரது சேனைகளுக்கும் மத்தியில் சௌகரியமான ஓரிடத்திற் கொண்டுபோய் நிறுத்தும்படி வேண்டினன். அவரும் அவ்வாறே செய்தனர். எதிரி சேனைகளைக் கண்ணெடுத்துப்பார்த்தான் பார்த்தன். எங்குநோக்கினும், துரியோதனன் பக்கலில் சாகத் தயாராக விருந்தவர்களனைவரும் தனக்குச் சகோதரர்களும், பாட்டன்மாரும், மைத்துனரும், ஆசிரியர்களும், மற்றைய கிட்டின உறவினர்களும் தம் சிநேகிதர்களுமாக விருப்பதைத் கண்டான். என்னே விந்தை ! அவனது பராக்கிரமமும், க்ஷத்திரியத்தன்மையும் அவனையுமறியாமல் மாயமாய் மறைந்தன. துக்கமும் ஜீவகாருண்யமும் அவன் மனத்திற் குடிகொண்டன. அவன் மதிமயக்கம் கொண்டான். உடனே அவன் ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்து “ஆபத்பந்துவே ! இங்கு போர்புரிய வந்திருக்கும் எனது சுற்றத்தாரைக் கண்டதும் எனது அவயவங்கள் சோர்வடைகின்றன. தேகம் பதறுகிறது. மயிர் சிலிர்க்கிறது. நா உலர்கிறது. மனம் மயங்கித் தடுமாட்டம் அடைகிறது. என்னால் நிற்கக்கூட முடியவில்லை. * * எனக்கு இராஜ்யமும் வேண்டாம். ஐசுவரியங்களும் வேண்டாம். * * * * * *

மாதிரிப் பக்கம் :—

விலாஸம்:—மானேஜர், விவேக போதினி. மயிலாப்பூர், சென்னை.

(A. No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத்

தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவது. ருது அடையகிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு :— தேயிலைக் கரண்டி மருந்தை, உண்டபின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத் தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக் கேட்டாலாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரஸித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறாமல்

RIO CHEMICAL COMPANY NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளி லெங்கும் கிடை[illegible]க்கும்.

அக்பர் = = = சக்கரவர்த்தி

இது பண்டித C. திருசிற்றம்பலம் பிள்ளை அவர்கள் எழுதியது. பேபரின் படையெடுப்பு; உமாயூனும் ஆக்பரின் இளமையும்; இந்தியா மீது உமாயூன் படையெடுப்பும், அவன் விடுப்பும்; ஆக்பருக்கு ஆதிபத்தியமளித்த பானிப்பட்டு யுத்தம்; ஆக்பர் சிம்மாசன மேறிய பொழுது இந்தியா இருந்த நிலைமை; ஆக்பரின் அரசாட்சி; ஆக்பரின் கொள்கைகள்; இவைகள் மிக்க அழகாய் எழுதப்பட்டுள்ளன.

இந்த உபார்ந்த நூலின் விலை அணா **12**.

விலாஸம் :—**அல்லயன்ஸ் கம்பேனி.**
மயிலாப்பூர், சென்னை.

பெரிய கம்பேனி! பெரிய கம்பேனி!!

பட்டு பீதாம்பர கம்பேனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்

சுத்தமான பட்டு ! சகாய விலை !!

உயர்தரமான

பட்டுபீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனும்.

உடனே எழுதுங்கள்.

Adderss:— Manager, (A. No 2914)
Silk Pitamber Co., *Benares City.*
விலாசம் :— மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பேனி, ஸ்ரீகாசி.

"நவசக்தி"! "நவசக்தி"!!

பத்திரிகாசிரியர்: திரு. வி கலியாணசுந்தர முதலியார்.

தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் அளித்த "தேசபக்தன்" ஆசிரிய பதவியில் வீற்றிருந்து தேசசேவை செய்துவந்த ஸ்ரீமான் திரு. **வி. கலியாணசுந்தர முதலியார்** அவர்களைப்பற்றித் தமிழ் நாட்டவர்க்கு விரித்துக் கூறவேண்டுவது அநாவசியம். அவர் சில காரணம்பற்றித் "தேசபக்த"னை விடுத்து நீங்கி, இதுகாலை "நவசக்தி" என்னும் தமிழ் வாரப்பதிப்புப் பத்திரிகையை 1920ஞு அக்டோபர்மீ 22உ முதல் தொடங்கி நடத்திவருகிறார். அப்பத்திரிகையில் ஜனநாயக முறை, தொழிலாளர் இயக்கம், கைத்தொழில் வளர்ச்சி, விவசாய அபிவிருத்தி, தேசபக்தி யூட்டக்கூடிய வேறு பல விடயங்கள் எழுதப்பட்டு வருகின்றன

(A. No. 2927) **தமிழ் வாரப் பதிப்பு**

வருட சந்தா	தபால் செலவுடன்	ரூ. 5
ஆறுமாத சந்தா	சந்தா விவரம்	" 3

"நவசக்தி"க்குச் சந்தாதாரராகச் சேர விரும்புவோர், சந்தாத் தொகையை முன்பணமாகச் செலுத்தித் தம் பெயரைப் பதிவு செய்துகொள்வாராக.

பினாங், சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ. 6.

மானேஜர்—"**நவசக்தி**" ஆபீஸ், 44, பஜார்ரோட், இராயப்பேட்டை, சென்னை.

அலங்காரத்திற்கு — அவசியமானது. ஸ்நானத்திற்கு — சுகமானது.
கூந்தலுக்கு — இன்றியமையாதது. ஸ்திரீகளுக்கு — மனோஹரமானது.

மணித்தைலம்

தற்காலம் வெளிவந்துலவும், நவீன தைலத்தைப்போல் நமது மணித்தைலத்தை எண்ணிவிடக்கூடாது. நமது தைலம் சாஸ்திரோக்தமாகத் தயார்செய்யப்பட்டிருக்கிறது. இந்த மணித்தைலம் நமது ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயத்தில் சுமார் 43 - வருஷங்களாக விற்பனையாகி வருகிறது.

இன்றைக்கே எழுதுங்கள்.

5-துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூபா **1**

கேட்போருக்கு கேட்லாக் இனாம்.

வைத்திய சாஸ்திரி:— மணிசங்கா கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம், போஸ்ட் பாக்ஸ் நெ. **2152**,
26, பிராட்வே, மதராஸ்.



உங்களுக்கு வேண்டாமா ?

இரட்டை அலாரம் டைம்பீஸ்

ஜெர்மன் தேசத்திலிருந்து புதிதாக வரவழைக்கப்பட்டது. என்ன மணி! என்ன சப்தம்! சரியான மணியை காட்டக் கூடியது. மிக்க நேர்த்தியானது. நெடுநாள் உழைக்கக் கூடியது. வரவழைத்துப் பாருங்கள். கடியாரம் 1-க்கு விலை ரூ. **7—0—0**

சிறந்த ஆபரணங்கள் !!



இந்த ஆபரணங்கள் மிக்க உயர்ந்த அமெரிக்கன் கோல்டினால் செய்யப்பட்டு, இத்தேசத்திற்கு ஸ்பெஷலாக வரவழைக்கப்பட்டிருக்கிறது. இதில் புதைக்கப்பட்ட கற்கள் மேன்மையான ரவைகள்போல் காணும். குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உபயோகப்படும்.

கம்மல், பெட்டியுடன்	ரூ.	3—0—0
இங்கிலீஷ் பாட்டர்ன்—லோலாக் ஜதை	,,	1—8—0
டர்கிஷ் பாட்டர்ன்	,,	1—2—0
காரட் கோல்டினால் செய்த லேடீஸ் நெக்லேஸ்—தொங்கடத்துடன்	,,	3—0—0

விலாசம் :—**வீ. எஸ். வாச் கம்பெனி,**

தபால் பெட்டி நெ. **105**, மதராஸ்.

விலை ரூபா ஒன்று தான்



தங்கள் இருப்பிடத்தில் ஒரு ஆகாசவிமானம், குறைந்த விலைக்கு தங்களுக்குக் கிடைப்பதைப்பற்றி தங்களுக்கு சந்தோஷம் உண்டாகாதா? புதிய விமானம், ஜெர்மன் தேசத்தில் செய்யப்பட்டது. மேல் பறக்கும் விதத்தைப் பார்த்தால், மிக்க ஆனந்தமாக இருக்கும். எல்லா விடத்திலும் எந்த ஜாகையிலும் எல்லா ஊர்களிலும் மிக்க சிறப்புடன் உபயோகித்து வருகிறார்கள். உடன் முந்துங்கள்.

தபாற் சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர்,—**ஸ்வான் ஹவுஸ், தபால் பெட்டி 508, பி. டி. மதராஸ்.**

1905-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது

NATIONAL STORES

உயர்ந்த சரக்குகள் ! விலைகள் வெகு நயம் !! திருப்திக்கு காரண்டி !!!

ஷர்ட்டுகள் - 13" முதல் 17"

டுவில் ஷர்ட்	ஸ்ட்ரைப்டு ஷர்ட்	மேடி ஷர்ட்	லாங்கிலாத் ஷர்ட்	காகி ஷர்ட்
2/2, 2, 1/12	2, 1/12, 1/8	2/4, 2/1, 1/14	2/4, 2/2, 2	2/4, 2, 1/10

பனியன்கள் 18" முதல் 40" வரை

கள்ளிக்கோட்டை, பெங்களூர், சேலம் பனியன்கள், பிளெயின், சிறுவலை, பெரிய வலை முதலிய பல ரகங்களிலும், எல்லா சைஸ்களிலும் தயாராயிருக்கின்றன.

இதர சாமான்கள்

ஜமக்காளங்கள், கம்பளிகள், உல்லன் போர்வைகள், துவத்திகள், அங்கவஸ்திரங்கள் பெட்ஷீட்டுகள், ஷர்ட், கோட்துணிகள், வலைத்தொட்டில், வெளுத்த துண்டுகள் இன்னும் அநேக விதமான சாமான்கள் உண்டு.

ரொம்பவும் நயமான புடவைகள்

கலருக்கு உத்தரவாதம். 18 முழச்சேலை சாதாவும், சரிகைபோட்டதும், பெங்களூர் முந்தாணியுடன் எல்லாவிதமான கலர்களிலும், நூலிலும், பம்பாய்ப்பட்டிலும், பட்டிலும், கலப்பிலும் தயாராயிருக்கிறது. விலை 8, 9, 10, 11, 14, 15, 17, 20, 33, 40, 50, 60-வரை உண்டு.

விலாஸம் :—நேஷனல் ஸ்டோர்ஸ், 336, தம்புசெட்டி தெருவு, சென்னை.

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது. ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளியநடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பையிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

பால காண்டம்	ஆரணிய காண்டம்	சுந்தர காண்டம்
அயோத்தியா காண்டம்	கிஷ்கிந்தா காண்டம்	யுத்த காண்டம்

இந்த ஆறு காண்டங்களடங்கிய ஒரு செட்டின் விலை ரூ. 15.
பாராயணத்துக்கு சுந்தரகாண்டம் மாத்திரம் தனியே கொடுக்கப்படும். ரூ. 2-4-0

இன்னும் இதர தமிழ் நாவல்களும் கிடைக்கும்.

K. MAHADEVAN,
NO. 1, RAMASAMI PILLAI STREET,
VEPERY, MADRAS.

(A. No. 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோதில் பஹார் (ரேஜிஸ்டர்ட்)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இந்த ஆடோ டில் பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில்வருமாறு அளவு புட்டிகளில் நிரப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு	(4-டிராம் அல்லது ½-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு ,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம் ,,	(1-டிராம்)	,,	0—12—0
சிறிய புட்டி ,,	(½-டிராம்)	,,	0—8—0
மாதிரி ,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு		,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்பொழுது புட்டிகள்பேரில் ஆடோடில் பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று ஜாக்கிரதையுடன் கவனிக்கவும்.

சோல் ஏஜண்டுகள்:—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸீத், மார்க்கட், பம்பாய்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

தொகுதி XVI | ரக்தாக்ஷி௵ ஆனி-ஆடி௴ : : 1924௵ ஜூன்-ஜூலை௴ | பகுதி ௧-10

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

அழித்துப் பிறக்க வொட்டா
வயில்வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீ
ரெரிமூண்ட தென்ன
விழித்துப் புகையெழப் பொங்கு
வெங்கூற்றன் கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன்றோ
கவி கற்கின்றதே.

2. அழித்து—(மீண்டும் மீண்டும் பூமியிற்பிறந்து உழன்று மரிக்கச்செய்யும் பவ வினையாகிய கருவினையை) அடியோடு நாசஞ்செய்து, பிறக்கவொட்டா-பின்பு ஜனிக்காமல் தடுத்தருள்புவனாகிய, அயில் வேலன் - கையில் வேலாயுதத்தைத் தாங்கிய குமாரக் கடவுளின், கவியை - புகழை யெடுத்துரைக்கும் பாடல்களை, அன்பால்-மெய்யன்போடு, எழுத்துப்பிழையற - எழுத்துப்பிழை (சொற்பிழை) யில்லாமல், கற்கின்றிலீர் - கற்காமல்பொழுதை அவமாக்குகிறீர்கள் (மாநிடர்களே !), பொங்கு வெம் கூற்றன் - கோபம் பொங்கும் கொடிய இயமராஜன், எரிமூண்டதென்ன - தீப்பற்றி யெரிவதுபோல் (ஜ்வலிக்கும் கண்களை), புகையெழ-எங்கும் தீப்பற்றிப் புகையெழும்படி, விழித்து-வெருட்டி விழித்து, விடும் கயிற்றால் - எறியும் பாசக் கயிற்றினால், கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கும் அன்றோ-கழுத்தில் சுருக்கிட்டு (இயமலோகத்துக்கு) இழுக்கும் அன்றைக்கோ, கவி கற்கின்றது-(நீங்கள் முருகப்பெருமான்) திருப்புகழ்ப் பாடல்களைக் கற்றுக்கொள்வது ?

(பொருள்விளக்கம்) சமுசாரம் என்னும் ஆழம் நிலைக்க வொணாத சமுத்திரத்தின் பலதுறைகளிலும் மூழ்கி, பொய்யையே மெய்யென நம்பி, ஈசன் பத மலர்களைத் துதியாமல்,

"தலையான வுடற்பிணி யூறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்திய மாகித் தடுமாறித்
தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திடவே நி னருள்தாராய்!"

என்றார் சுவாமிகள். மீண்டும் மீண்டும் பிறந்து சஞ்சலமடைந்து உழன்று தவிப்பது நீங்கவேண்டுமானால், பிறவியென்னும் நோயை வேருடன் களைந்தெறியும் மருந்தை உட்கொள்ளவேண்டும். முருகப்பெருமானது திருப்புகழை ஓதுவதே அம்மருந்தாகும். எம்பெருமானது திருப்புகழைக் கல்லாதவரை இயமதூதர்கள் கொடிய நரகத்துக்குக் கொண்டுபோய்க் கடுந்தண்டனைகளுக்கு உட்படுத்துவார்கள்.

"வருபவர்க ளோலை கொண்டு
நமனுடைய தூத ரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது
மயலதுபொ லாத வம்பன்
விரகுடைய னாகு மென்று
வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள்
கருவியத னாலெ றிந்து
சதைகள்தனை யேய ரிந்து
கரியபுன லேசொ ரிந்து விடவேதான்
கழுமுனையி லேயி ரென்று
விடுமெனும வேளை கண்டு
கடுகிவர வேணுமென்றன் முனமேதான்"

என்றார் சுவாமிகள். ஜீவர்களுக்கு அவர்கள் இயற்றும் நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்பதுன்பங்கள் உண்டாகச் செய்ய இயமனுக்கு அதிகாரமுண்டேயன்றி, அவர்களை மன்னிக்க அவனுக்கு அதிகாரம் கிடையாது. ஆதலின், நல்வினை தீவினைகளை இயற்றும் அவன் கையிற்சிக்காமல் தப்பித்துக்கொள்ள ஜீவகோடிகள் முயலவேண்டும். ஆகையினால்தான் இயமன் பாசக்கயிற்றினால் கட்டியிழுக்கு முன்னரே முருகப்பெருமான் திருப்புகழைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று உணர்த்தினார் சுவாமிகள்.

 அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம் பூரியார் கண்ணு முள.

விவேக போதினி

தொ. 16] ரக்தாக்ஷி ஸு ஆனி-ஆடி [ப. 9-10

சென்னை மாகாணக் கல்வி மகா நாடு

MADRAS PROVINCIAL EDUCATIONAL CONFERENCE

ஒவ்வொரு தேசத்தாரின் நாகரிகமும், உன்னத பதவியும் பெரும்பான்மையும் அங்கு நடந்தேறிவரும் கல்விப் பிரசார ஏற்பாடுகளைச் சார்ந்திருக்கின்றன. சாதாரண ஞான சம்பாதனம் மாத்திரமல்ல, நல்லொழுக்கம், தெய்வ பக்தி, தேசபக்தி, சுயநல மொழிக்கல் முதலிய நற்குணங்களும் சிறுவர் சிறுமிகளுக்கு இளம் பருவத்திலேயே ஏற்பட்டு, தக்கவயது வந்தக் கால், அவர்கள் மானிடத்தன்மைக்குரிய கடமைகளைச் சரிவர நடத்துவதற்கு முக்கிய சாதனம் கல்வியெனச் சொல்லவேண்டும். இப்போது நம் நாட்டில் நடைபெற்று வரும் கல்விப் பிரசாரமுறைகள், அவ்வளவு திருப்திகரமானவை யல்லவென்பது படித்தவர் பலரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆனால், இது விஷயத்திலுள்ள குறைகளை நிவர்த்தி பண்ணிக் கொள்ளும் விஷயத்தில் உபாத்தியாயர்களோ, மற்றவர்களோ தக்கவாறு முயன்று சரிவர கல்வி புகட்டுவதற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாய்ச் செய்வதாய்த் தோன்றவில்லை. கல்வி விஷயத்தில் இப்போதைய ஈனஸ்திதிக்கு பற்பல காரணங்களுண்டு. 1924-ம் ஸு ஜூன்மீ 5-ம்தேதி திருநெல்வேலியில் நிகழ்ந்த மாகாணக் கல்விமகாநாட்டில் அக்கிராசனம் வகித்த **ஸ்ரீமான் எஸ்.** ஸத்யமூர்த்தி அவர்களின் உபந்நியாசத்தின் ஸாராம்சங்கள் கல்வியில் ஊற்றமுள்ள அனைவராலும் கவனிக்கத்தக்கவை:—

(1) **உபாத்தியாயர்களின் நிலைமை:**—இந்த மாகாணத்தில், உபாத்தியாயர்களின் இப்போதைய நிலைமை சந்தோஷகரமாயில்லை. கல்வி இலாகாவில் உள்ளவர்களுக்கு இருக்கும் சம்பளக்குறைவும், அந்தஸ்துக் குறைவும் பிரசித்தமாய்த் தெரிந்த விஷயங்கள். அதிலும், மற்றைய மாகாணங்களைவிட, சென்னை மாகாணத்தில் இவர்களது நிலைமை கேவலமானது. உபாத்தியாயர்கள் திடகாத்திரர்களாய் நன்கு உழைக்கக்கூடிய காலம் வரையில், அவரது பதவி சாசுவதமில்லை. பாடசாலை சொந்தக்காரர்கள், குறைந்த சம்பளத்துக்கு மற்றவர்கள் கிடைப்பார்களென்று நம்பியோ, விடுமுறை காலத்துக்குரிய சம்பளத்தை மிச்சம் பிடிக்கவேண்டுமென்று கருதியோ, வேறு முகாந்திரங்களாலோ நீடித்து உழைத்து வந்துள்ள உபாத்தியாயர்களைத் திடீரென்று நீக்கிவிடுகிறார்கள். ஆகையால், அவர்கள் அடிக்கடி இடம் மாறவேண்டியிருக்கிறது. உபாத்தியாயர்கள் மேன்மேலும் படித்துத் தங்களது ஞானபாகத்தை விருத்தி செய்துகொண்டு அவைகளை மாணாக்கர்களுக்கு நன்கு பயன்படுமாறு செய்வதற்குரிய சாதனங்கள் மிகவும் குறைந்தவையெனவே சொல்லவேண்டும். இராஜாங்கத்தார் நேரில் நடத்திவரும் உயர்தரக் கல்விச் சாலைகளில் பெருஞ்சம்பளம் பெற்று, ப்ரொபெஸர் என்னும் பதவியடைந்துள்ள சிலருக்கு மாத்திரம் படிப்புக்குரிய சௌகரியங்களும் அந்தஸ்துமுண்டு. ஆரம்பக்கல்வி, நடுத்தரக்கல்வி இவற்றிற்காக ஏற்பட்டுள்ள பாடசாலைகளி லிருக்கும் உபாத்தியாயர்களின் நிலைமை ஈனமானதே. கல்கத்தா யூனிவர்ஸிடி கமிஷன் செய்த சிபார்சுகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டியின் அங்கத்தினரும், திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயருமான **ஸ்ரீமான் பி. ஏ. சுப்பிரமணிய** அய்யர் அவர்கள் சென்னை உபாத்தியாயர்களின நிலைமை விஷயமாய்த் தமது குறிப்புரையில் கண்டுள்ள விஷயங்கள் நன்கு கவனிக்கத்தக்கவை.

உபாத்தியாயருக்குச் சம்பளக்குறைவு மட்டில் இருக்கிறதென்று சொல்வதற்கில்லை. மேனாடுகளில் அவர்களுக்கிருக்கும் அந்தஸ்து இங்குள்ளவர்களுக்குக் கிடையாது. (சர்க்கார் ஆபீஸில் ரூ. 15 அல்லது 20 சம்பளமுள்ளவனுக்கு

இருக்கும் கௌரவங்கூட ரூ 100, 200 வாங்கும் உபாத்தியாயர்களுக்கிருப்பதில்லை.) இதற்கு முக்கியக்காரணம், மேனாடுகளிற்போல் இங்கு உபாத்தியாயர்கள் கட்டுக்கோப்பாய் வேலை செய்வதில்லை. உற்சாகமும், ஒற்றுமையும், சபைகளை ஏற்படுத்திச் சரிவர நடத்துவதற்குரிய நிர்வாகசக்தியும், உபாத்தியாயர்களிடம் குறைவாகவே இருக்கின்றன. ஏதோ கொஞ்சகாலமாய் உபாத்தியாயர்கள் இதுவிஷயமாய் முயன்றுவருகிறார்கள். இது விஷயத்தில் எல்லாத்தவறுகளும் அவர்களது என்று நான் சொல்ல வரவில்லை, அவர்களுக்குள்ள இடையூறுகளும், சாதனக் குறைவுகளும் எனக்குத் தெரியும். ஆனால் இனிச்செய்யவேண்டிய அம்சம் நிறையவிருக்கிறது. இதுவிஷயத்தில் எனக்குச் சிலயோஜனைகள்தோன்றுகின்றன. இந்தமாகாணத்தில கவர்ன்மெண்டாரும், லோகல்போர்ட்டாரும் நடத்திவரும் நடுத்தரப் பாடசாலைகள் அதிகமாயிருக்கின்றன. இவற்றில, சாசுவதமாய் நியமிக்கப்படும் உபாத்தியாயர்களை ஓரேகோஷ்டியாகச் செய்து, சம்பள சம்பந்தமாய் பல வரிசைக் கிரமங்களை (Grades) ஏற்படுத்தி, இவர்களை ஒரு போர்டாரின் விசாரணைக்குட்படுத்தவேண்டும். இந்த போர்டில், கவர்ன்மெண்டாரும், லோகல் போர்டுகளும், மானேஜர்களும் சமமான பிரதிநிதித்வம் பெறவேண்டும். உபாத்தியாயர்கள் இந்த போர்ட்டின ஊழியக்காரர்களாய் எண்ணப்படவேண்டுமே யொழிய, பிரத்தியேகமாய் அந்தந்த மானேஜர் முதலானவர்களுக்குக் கீழ்ப்பட்ட ஊழியக்காரர்களாகவும், அவர்களிஷ்டப்படி நினைத்தமாத்திரத்தில் தள்ளப்படக்கூடியவர்களாயும் இருக்கக்கூடாது. ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குள்ள ரஜா, பென்ஷன் முதலிய உரிமைகள் இவர்களுக்கும் இருக்கவேண்டும். உபாத்தியாயர்களைத் தவறுதல்களுக்குத் தண்டிக்கும் அதிகாரம் மேற்கூறிய பொதுவான போர்ட்டாருக்கே இருக்கவேண்டும். இதன்மேல, கல்வி இலாகா மந்திரிக்கு அப்பீல் செய்துகொள்ள பாத்தியதை இருக்கவேண்டும். இதனால இக்காலத்திய உபாத்தியாயர்களுக்கேற்பட்டுள்ள பலவித அனாவசியமான தொல்லைகளும், உபத்திரவங்களும் ஏற்படாமலிருக்கக்கூடும்.

(2) நமது நாட்டில பூர்வத்தில் உபாத்தியாயர்களுக்கு மிகப் பெருமையும் அந்தஸ்தும் இருந்துவந்தன. இப்போது இவை வெகுவாகக் குன்றியிருக்கின்றன. இதற்கு உபாத்தியாயர்களே முற்றிலும் ஜவாப்தாரிகள் அல்ல; என்றாலும் இவர்கள் தனிப் பிரயத்தினஞ்செய்து பூர்வீக மகிமையையும் கௌரவத்தையும் அடையவேண்டும்; தேசீய முறையில் கல்விப் பிரசாரத்தைத் திருப்ப முயன்றுவரும் பிரபுக்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் உபாத்தியாயர்கள் ஆதரவளிக்கவேண்டும். மேலும், இப்போது தங்களுடைய சம்பளம், உத்தியோக நிபந்தனைகள், ரஜா சுதந்திரம் முதலியவைகளிலுள்ள குறைகளைத் தங்கள் தீர்மானமூலமாகத் தெரியப்படுத்தி, தங்கள் கோரிக்கைகள் ஈடேறும் பொருட்டுச் செய்யவேண்டிய நியாயமான எல்லாவழிகளிலும் கிளர்ச்சி செய்துவர, அவர்களது நிர்வாக சபைக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். இவ்விதக கிளர்ச்சியானது உபாத்தியாயரது சுயநலத்துக்கென்று கருதாமல், பொதுஜன நன்மைக்கென்றும், தேசாபிவிருத்திக்கென்றும் எல்லோரும் கருதவேண்டும். உபாத்தியாயர்களுக்குச் சௌகரியமான நிலை[illegible] ஏற்பட்டாலொழிய, இங்கு சரியான கல்விப் பிரசாரம் ஏற்படாது.

இப்போது சில வருஷங்களாக, கல்வி இலாகாவின் நிர்வாகமானது, சட்டசபைக்கு ஜவாப்தாரியான மந்திரி வசமிருந்து வருகிறது. நம் மாகாணத்தில கல்வி இலாகா ஒரு மந்திரியினிடம் மாற்றப்பட்டும், கல்வித் திருத்தங்கள் ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. ஏதோ சில திட்டங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவை பெரும்பான்மையும் பயன் தருபவைகளாய்க் காணோம். அநேகமாய்க் கல்விப்பிரசாரம் பழைய தோரணையிலேயே நடந்துவருகிறது; பணக்குறைவால, ஜாஸ்தி செய்யமுடியவில்லை என்று ஸால்ஜவாபு சொல்லிவருகிறார்கள். ஏராளமான திரவியம் தேவையில்லாமல் செய்யக்கூடிய காரியங்களெல்லாம் செய்யப்பட்டனவென்று சொல்வதற்கில்லை.

அவசியமான திருத்தங்கள்.—பாலபாடம் முதல், பி. ஏ., எம். ஏ, வகுப்பு வரையிலுமுள்ள பாடங்கள் தாய்ப்பாஷையின் மூலமாகவே கற்பிக்கப்படவேண்டும். இப்படிச் செய்தால்தான, நாட்டில் கல்வி அதிகமாகப் பிரசாரமாகி நல்லறிவு ஏற்படும். இதைச் சட்டசபையார் தீர்மானமூலமாய் ஏற்படுத்திவிடலாம். ஆனால்

இரண்டு வருஷகாலத்திற்குச் சட்டசபையார் இவ்வழியில் பிரவேசிப்பார்களென்று தோன்றவில்லை. இருந்தாலும், உபாத்தியாயர்கள் நடுத்தரப்பாடசாலைகளில் தாய்ப்பாஷைகளைக் கற்பிக்க ஆரம்பித்து, அங்குரார்ப்பணம் செய்யவேண்டும். பொதுவான தாய்ப்பாஷை ஹிந்திதான். ஆரம்பப்பாடசாலைகளில்இதைக்கட்டாயமாய்ப் போதித்துவந்தால் பத்து வருஷங்களில் இது பொதுபாஷை யாகிவிடும். மேலும், நமது கல்விமுறையை இந்தியமயமாகச் செய்யவேண்டும். நமது தேசச்சரித்திரத்தை ஒரு முக்கிய பாடமாகச் செய்யவேண்டும். வேதாந்த சாஸ்திர மாணவர்கள் ஸ்ரீசங்கரர்,ஸ்ரீராமாநுஜர் முதலான பூர்வீகர்களின் வேதாந்த சாஸ்திரங்களைக் கற்கவேண்டும். சாஸ்திரப்பயிற்சி செய்பவர் இந்திய சாஸ்திரங்களைக் கற்கவேண்டும். கல்வி தேசீயமாய்க் கற்பிக்கப்பட வேண்டுமென்று மிஸ்டர் ராம்ஸே மாக்டோனால்டே ஒப்புக்கொண்டிருக்கிறார். தவிர, தற்காலக் கல்விமுறைகள் அதிகப் பணச்செலவை உண்டுபண்ணக் ...யவைகளாயிருக்கின்றன. புத்திவிசாலமும் நல்லொழுக்கங்களும் மாணாக்கர்களுக்கு ஏற்படுவதற்கான சாதனங்கள் குறைந்தனவே. படிப்பின் செலவைக்குறைத்து, எலலோரும் கல்வி பெறக்கடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும்.

ஆரம்பக்கல்வி.—(Primary Education) நமது நாட்டில் படித்தவர்களின் தொகை மிகச் சொற்பமே. ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியானது தக்கவாறு ஏற்படவில்லை யென்பது கவர்ன்மெண்டார் உள்பட எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். கல்விப்பிரசார விஷயத்தில் மந்திரியோ, மற்றச் சபையார்களோ ஆடம்பரமாகச் சட்டங்களை ஏற்படுத்திவிட்டால் மாத்திரம் போதாது. அதற்கு உற்சாகமும், திரவிய சகாயமும் அவசியமவேண்டும். இதுவிஷயததில் சர்க்கார் பணமில்லையென்றுசாலஜவாபு சொல்லிவருவது சரியல்ல; கவர்ன்மெண்டாரின் முதன்மையான கடமைக்கு இது அழகல்ல; கலவியிலாகா மந்திரி, இதற்கும்வேண்டிய செலவுக்கு முன்பாத்தியம் தேடவேண்டும். கல்வி கறபிப்பதற்காக ஆங்காங்கு தனி வரிகளைப்போட்டு ஜனங்களை இம்சித்தால், இது கல்விப் பிரசாரத்திற்குச் சாதகமாகாது. நமது சிறுவர் சிறுமிகள் நிர்ப்பந்தமாய்க் கலவி பெற வேண்டுமென்றால், அவாகளுக்கு வேண்டிய ஸௌகரியங்கள் செய்துகொடுத்து அபிவிருத்தி பண்ணவேண்டும். கிராமப் பஞ்சாயத்தார்களிடம் பள்ளிக்கூடங்களை விடவேண்டும். பாடசாலை நேரங்கள் மாற்றப்படவேண்டும். ஆடம்பரமான மேஜை,நாற்காலி, கட்டிடங்கள் தேவையில்லை. நமது தேச பழைய சம்பிரதாயத்தை யனுசரித்தே இப்பாடசாலைகளை நடத்தக்கூடும். சிறுவர்களுக்கு மாத்திரமல்லாமல், எழுத்துவாசனை யில்லாமலிருக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் கல்வி புகட்ட வழி தேடவேண்டும்.

நடுத்தரக்கல்வி.— (Secondary Education):—பரீக்ஷை முறைகளால் நடுத்தரப் பாடசாலைகள் வருத்தப்படுகின்றன. சரியான ஞானம் ஏற்படுவதில்லை. ஸ்கூல் பைனல் பரீக்ஷை பயனற்றதென்று அனுபவத்தில் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். வேறுவழியைக் கண்டுபிடிக்கவேண்டும். சாதாரணக் கலவியையும், தொழிற்கல்வியையும் கலந்து குழப்பினால் இரண்டும் பயனற்றவையாகும். தொழிறகலவியைத் தனிமையான பாடசாலைகளிற் கற்பிக்கவேண்டும்.

உயர்தரக்கல்வி.—(Collegiate Education) சர்வகலாசாலைப் புதுச்சட்டம் (University Act) ஏற்பட்டதினால், செலவு அதிகரித்ததேயொழிய வேறு பிரயோஜனத்தைக்காணோம். இவ்விதக் கல்வியை, தனிகர்களைத் தவிர மற்றவர்கள் பெறுதவண்ணம், சம்பளம், பரீக்ஷைக் கட்டணம் முதலிய செலவுகள் அதிகமாக ஆகவேண்டியதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அவசியமான திருத்தங்கள்.— கிராண்டு (Grant-in-aid) சட்டததை மாற்றவேண்டும். இப்போதைய சட்ட விதிகள், பாதிரிமார்களின் பாடசாலைகளுக்கு அனுகூலமாகவும், இதர பள்ளிக்கூடங்களுக்கு விரோதமாகவு மிருக்கின்றன. எல்லா இந்தியர்களும் ஸம்ஸ்கிருதம் கற்கவேண்டும். பெண்கலவி விஷயமாக யோசனை செய்ய ஒரு கமிஷன் ஏற்படவேண்டும். அவர்களுக்கு போதிக்கப்படும் கல்வி அவர்களது நிலைமைக்கும், மனப்பாங்குக்கும் ஒத்ததாயிருககவேண்டும். பெருஞ் செலவுசெய்து, மேற்பார்வை பார்க்கும் இன்ஸ்பெக்டர் முதலான உத்தியோகஸ்தாகளைக் கல்வி இலாகாவில் வைததிருப்பது ஒழியவேண்டும்.''

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப தன்னுயி ரஞ்சும் வினை.

ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி அவர்களால் மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்கள் மிகவும் கவனிக்கத்தக்கவை. நம் நாட்டில் கல்விப்பிரசாரத்திற்கு முக்கியமான தடை ஒன்றுண்டு. அதாவது, கல்வி சம்பந்தமான ஒவ்வொரு விஷயத்திலும் சர்க்காருடைய கல்வி யிலாகாவின் அதிகாரமே மேலிட்டிருக்கிறது; ஜனங்கள் தங்கள் நோக்கங்களுக்கு ஏற்றவாறு ஞானப் பிரசாரஞ்செய்வதற்கான சாதனங்கள் குறைவாயிருக்கின்றன. இராஜ்யதந்திர விஷயமாயுள்ள குழப்பங்களோ, மாறுதல்களோ, கல்விப் பிரசார ஏற்பாடுகளையும் பீடிக்கின்றன. உபாத்தியாயர்கள், கிளிப்பிள்ளைகள்போல் கல்வியிலாகா உத்திரவுகளை அனுசரித்து பாடங்கள் முதலியவற்றைக் கற்பித்து வருகிறார்களே ஒழிய, மாணாக்கர்களுக்கு சாசுவதமாய்ப் பயனுள்ள விஷயங்களைப் போதிக்க அவர்களுக்கு உரிமையே கிடையாது. கல்வி இலாகாவும், அவர்கள்மீது மேன்மேலும் சந்தேகம் பாராட்டி, அவர்கள் எவ்விதத்திலும் தன் ஆதீனத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் புதிது புதிதாய் உண்டாக்கி வருகின்றது. இவ்விதத் தாழ்மையான ஸ்திதி மாறினால்தான், கல்விப் பிரசாரம் நன்கு ஏற்படும். இது விஷயத்தில் உபாத்தியாயர்கள் தாங்களே வெகுவாறு முயற்சி செய்யவேண்டும். "சுய ஒத்தாசை செய்பவருக்குக் கடவுளும் உதவி செய்வார்" என்னும் பழமொழி உபாத்தியாயர் விஷயத்திலும் பொருந்தும். கல்விவிஷயத்தில் ஸர் ஸிட்னி வேல் (Sir Sydney Well) என்னும் வித்வான் கூறியுள்ளது எல்லோராலும் கவனிக்கத்தக்கது:—"கல்வி, ஞானம் பயன்படவேண்டுமானால், இவை ராஜ்யதந்திர வியவஹாரங்களிலிருந்து பிரத்தியேகமா யிருக்கவேண்டும். அரசாங்கத்தார் கல்விப்பிரசார சம்பந்தமான போஷணையும் உதவியையும் செய்யவேண்டுமேயன்றி, அதைத் தனக்குட்படுத்தி அமுல் நடத்தக்கூடாது."

அருமையான நீதி நூல்கள்

ஆரியமத உபாக்கியானம்.—இரண்டு பாகங்கள்.—ஒவ்வொரு பாகத்துக்கும் அழகிய ஆப்டோன் படங்கள் உண்டு.—இந்நூல் சுமார் லக்ஷம் பிரதிகள் செலவாகியிருக்கின்றன. 2-பாகங்களும் ரூ 1-2-0.

ஸர் ஜகதீச சந்திர போஸ்

SIR JAGADIS CHUNDER BOSE

முன் ஸஞ்சிகையில் கூறிய பிரகாரம், ஸ்ரீமான் போஸ், செடிகளில் விசைத்தாக்கு முதலிய உத்தீபனங்களால் உண்டாகக்கூடிய மாறுதல்களைக் காட்டக்கூடிய கருவியின் அமைப்பைப் பற்றி வெகுவாறு கவனஞ்செலுத்திவந்தார். கடைசியில், அவர் தமது விடாமுயற்சியினாலும், பொறுமையினாலும் காரிய சித்தி பெற்றுக் களிப்புற்றார். ரேஸோனன்டு அண்டு ஆஸிலேடிங் ரிகார்டர்ஸ் (Resonant and Oscillating Recorders) என்னும் கருவி விசேஷத்தைக்கொண்டு, ஒரு செடியானது தன்னிடமுண்டாகும் மாறுதல்களைத் தானே நன்கு எடுத்துக் காட்டக்கூடியதாயிற்று. இத்தகைய சாதனத்தால், ஸ்ரீமான போஸ் அநேக புதிய தத்வங்களைப் பரீக்ஷணமூலமாய்க் கண்டறிந்து வெளியிட ஆரம்பித்தார். இவற்றுள் சிலவற்றை மட்டில் சுருக்கமாய் இங்குக் குறிப்பிடுவோம்.

(1) இதுகாறும், ஸ்தாவர சாஸ்திர வித்வான்கள், செடிகளை **உணர்ச்சியுள்ளவை, உணர்ச்சியற்றவை** என இருவகையாகப் பிரித்துக் கூறிவந்தனர். தொட்டாற்சுருங்கி போன்ற செடிகள், உணர்ச்சியுள்ளவை யென்றும், இவை மின்சாரசக்தி அல்லது வேறுவித உத்தீபனங்களுக்குத் தக்கவாறு, பிரதியுத்தர ரூபமான மாறுதலகளை யடையக் கூடுமென்றும், இவ்வித சக்தி மற்றைய செடிகொடிகளுக்கில்லையென்றும் நினைக்கப்பட்டு வந்தது. உணர்ச்சி விஷயத்தில் இவ்வித பேதம் இருப்பதாக மேனாட்டு வித்வான்கள் கூறிவந்ததற்குக் காரணம் அவர்கள் செய்துள்ள பரீக்ஷணங்களின் குறைவுதான் என்று கூறவேண்டுமென்று போஸ் நிரூபித்தார்.

உஷ்ணம் (Heat), க்ளோரபாரம் (Chloroform, மதுசாரம (Alcohol) முதலிய உத்தீபனங்களை செடிகள்மீது சரிவர உபயோகப்படுத்தினால், அவைகளுக்கேற்ற உணர்ச்சி செடிகளின் நரம்புகள் வழியே பரவிச் செல்லுகின்றன வென்பதைப் பரீக்ஷணரூபமாய் ஸ்தாபித்தார். மதுசாரத்தால் உற்சாகரூபமான உணர்ச்சியும், க்ளோரபாரத்தின் ஆவியால் கிளர்ச்சிக் குறை

வும், உஷ்ணத்தால் உணர்ச்சிப் பிரசாரத்தின் வேகமதிகரித்தலும், விஷவஸ்துவின் பிரயோகத்தால் மேற்கூறிய பிரசாரம் தடைபட்டு நிற்றலும், இவை முதலியன செடி தானே காண்பிக்கும் குறிப்புகளால் நன்கு கண்டறியக்கூடியவைகளாய் ஏற்பட்டன.

(2) பாரிசவாயு (Paralysis) முதலிய ரோகங்களில் நரம்புகளில் தடை ஏற்பட்டு, அவைகளில் உணர்ச்சியோ, சலனமோ உண்டாகாமலிருப்பதுபோல் செடிகளின் நரம்புகளிலும் தடை ஏற்படுத்தி, உணர்ச்சி பரவாமல் செய்யக்கூடுமென்றும், பின்னர் தகுந்த சிகித்ஸை மூலமாய் மேற்கூறிய அவட்டம்பத்தை சுவஸ்தப்படுத்தக்கூடுமென்றும் போஸ் கண்டுபிடித்தார். இவ்வித தத்துவ ரகசியத்தின் அருமையைப்பற்றி ஸயன்டிபிக் அமேரிக்கன் (Scientific American) என்னும் பத்திரிகையின் பத்திராதிபர் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.—

"ஸ்ரீமான் போஸ் என்பவர், வேறு விஷயங்களைக் கண்டுபிடிக்காமல், இவ்வருமையான தத்துவம் ஒன்றைமட்டில் கண்டுபிடித்திருந்தாலும், பௌதிக சாஸ்திரங்களின் அபிவிருத்தி சரித்திர சம்பந்தமாய், ஒருநாளும் அழிவில்லாப் புகழைப்பெற்றிருப்பார். மானிட சரீரத்தில் ஏற்படும் பக்ஷவாயு சம்பந்தமாய் நமக்குள்ள ஞானம் மிகவும் ஸ்வல்பம். அதன் காரணத்தைப்பற்றி அநேகமாய் ஒன்றும் தெரியாதென்றே சொல்லலாம். உயர்தரப் பிராணிகளில் நரம்புக்கூட்டத்தின் அமைப்பு, வியாபாரங்கள் முதலியன வெகு சிக்கலானவையாதலால் அவை கெடுவதன் காரணம் முதலியவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வது மிகவும் கடினமான விஷயம். மனிதசரீரத்தின் நரம்பைப் பிரித்தெடுத்தால், அதுகெட்டு உணர்ச்சியற்றதாகிவிடுகிறது......செடிகளின் நரம்போ வெகு சுலபமான அமைப்புள்ளது. இதுவிஷயமாயுள்ள ஞானம் நமக்கு நன்கு ஏற்பட்டால், பக்ஷவாயு முதலியரோகத்தால் எவ்வாறு நமது கைகால்கள் அசைக்கமுடியாமற் போகின்றன வென்பதைப்பற்றி நாம் அறிந்துகொள்ள இடமுண்டாகும். செடிகளுக்கு நரம்பு ஜாலம் உண்டென்பதும், இந்நரம்புகளில் தக்க காரணங்களால் அவட்டம்பம் உண்டாகி, பின்னர் அதை நிவர்த்தி செய்யக்கூடுமென்பதும், இவை சம்பந்தமான பரீக்ஷணங்களால், புதிய தத்துவ இரகசியங்களைக் கண்டுபிடித்து, இவை மூலமாய், இப்போது சொஸ்தப்படுத்தமுடியாத வியாதி என்று சொல்லப்பட்ட பாரிசவாயுவின் (Paralysis) பலவித பேதங்களுக்கு, வைத்தியர்கள் ஹேதுவாதத்தையும், நுட்பமான ஊகத்தையும் கைப்பிடித்து, தக்கவாறு சிகித்ஸை செய்வதற்குவேண்டிய சாதனமேற்படும்."

(3) வெளி உத்தீபனங்களால் மனிதசரீரத்திலுள்ள நரம்புகளிலும் ஒரேவிதமான உணர்ச்சி, சலனம் முதலிய விகாரங்கள் ஏற்படுகின்றன என்று ஸ்தாபித்தது மல்லாமல், மனிதனோ, செடிகளோ, உலகத்திலுள்ள மற்றப் பிராணிகள் வஸ்துக்கள் இவைகளின் சம்பந்தமின்றில், தனிமையின் வளர்வதாலுண்டாகும் கெடுதலிலும் ஒரேதன்மையுள்ளது என்று போஸ் கண்டறிந்தார். "ஒரு செடியை ஒருகண்ணாடிப் பாத்திரத்தில் வைத்து, வெளிப்படையான விசைத்தாக்கம் அதன்மேல் ஏற்படாவண்ணம் வளர்த்து வந்தால், அது செழித்துப் புஷ்டியுள்ளதாய்த்தோன்றும். ஆனால், அதன் நரம்புகளின் உயர்தரத் தொழில் க்ஷயமடைந்ததாய்க் காணப்படும்; இவ்வாறு சிதைந்து ஊதிப்போன அச்செடியின்மீது, ஒன்றன் மீதொன்றாகத் தொடர்ச்சியான விசைத்தாக்கங்கள் ஏற்பட்டால், இவற்றால் அச்செடியில் புதியநரம்புப்பிரசாரங்கள் உண்டாகி, தாழ்வுற்றிருந்த அதன்சுபாவத்தை உயர்வுற்று ஓங்கச்செய்யும். இதுபோலவே, கஷ்டகாலத்திலுண்டாகும் துக்கானுபவங்களே வாஸ்தவமான மானிடத்தன்மையை வளர்த்து விருத்திசெய்யக் கூடியவை என்று அறிந்துகொள்ளலாம். தேகத்தை வெகு செல்வமாயும் விசேஷ ஆடை, கம்பளிகள் முதலியவற்றால் சீதோஷ்ணாதிகள் மேற்படாமல் வெகு ஜாக்கிரதையாய் வளர்ப்பது உயர்தர ஸ்வபாவ அபிவிருத்திக்கு அவ்வளவு பயன்படாது" என்று ஸ்ரீமான் போஸே கூறியுள்ளார்.

(4) பிராணிகளுக்குக் காரணங்களுக்கேற்றவாறு, கோபம் முதலிய மனோவிகாரங்கள் உண்டாவதுபோல, செடிகளுக்கும் அவ்வாறே உணர்ச்சிபேதங்கள் ஏற்படுகின்றன. இரவும் பகலும் உத்தீபனங்களால் தாக்கப்பட்டுள்ள மனிதன் செய்வதுபோல, செடியும் காலையில் மெல்ல எழுந்து, வரவர உற்சாக மதிகரித்து, மத்தியானத்தில் மிகச் சுறுசுறுப்புள்ளதாகி

பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி யல்லவை செய்தொழுகு வார்.

மீண்டும் நிசிராத்திரிக்குப் பின்னர்தான் தூக்கமடையக் கூடியது என்னும் மிக அபூர்வமான சங்கதியைக் கண்டுபிடித்து, பிராணி வர்க்கத்திற்கும் செடிவர்க்கத்திற்கு முள்ள ஒற்றுமையை நன்கு ஸ்தாபித்தார்.

போஸ் மேற்கூறிய அரிய விஷயங்களைச் சிறு புத்தகங்கள் ரூபமாய்ப் பிரசுரம் செய்ததுமல்லாமல், ராயல் ஸோஸைடியாருக்கும் தாம் கண்டுபிடித்துள்ள அற்புதத் தத்துவங்களைப் பற்றி எழுதியனுப்பினர். முன்னர், இவர்மீது அசூயை பாராட்டிவந்த அனைவரும், இனியும் அவ்வாறு செய்து, இவரது மகிமையை வெளியிடாது மறைத்துவைப்பது அசாத்தியமென அறிந்தனர்; ஆகவே மேற்கண்ட சபையார், 1913-ஷ மார்ச்சுமீ போஸ் எழுதியனுப்பிய விஷயங்களைத் தங்கள் கூட்டத்தில் படித்து, அவற்றைப் புகழ்ந்து பேசலாயினர். அச்சபையாரின் பிரசுரப் பத்திரிகைகளில் இவ் விஷயங்கள் வெளியிடப்பட்டன. இதற்குள் இந்தியா கவர்ன்மெண்டாரும் இவர் கண்டுபிடித்துள்ள ஞானபாகங்களைப்பற்றி மெச்சி, 1911-ம் ஷத்தில் டில்லிமாநகரில் நிகழ்ந்த காரனேஷன் தர்பாரில் (Coronation Durbar), அவருக்கு ஸி. எஸ். ஐ. (C. S. I.) பட்டம் அளித்துக் கௌரவித்தனர்.

இதன் பிறகு வங்காள தேசத்து ஜனங்களும், வித்தியாசங்கத்தினர்களும் இவரைக் கௌரவிக்கத் தொடங்கினர். 1911-ம்ஷ ஏப்ரல்மீத்தில் மிமென்ஸிங் (Mymensing) என்னும் ஊரில் நடந்தேறியபங்காள லிடரேரி கான்பரென்ஸ் என்னும் ஒரு பெருங்கூட்டத்தில், ஸ்ரீமான் போஸ் அக்கிராஸனாதிபத்யம் வகித்து, தாம் கண்டுபிடித்துள்ள அரிய தத்துவங்களைக் குறித்து பங்காளி பாஷையில் சிறந்ததோர் உபந்நியாஸம் செய்தார்.

1912-ஷத்தில் கல்கத்தா ஸர்வகலா சபையார் அவருக்கு டி. எஸ். ஸி. (D. Sc.) என்னும் கௌரவபட்டம் அளித்தனர். 1913-ஷ பஞ்சாப் ஸர்வகலா சாலையாரும் அவரது சூழ்ச்சிகளைப்பற்றி அநேக உபந்நியாசங்கள் செய்யும்படி அவரை வேண்டிக்கொண்டனர்.

டாக்டர் போஸின் கோட்பாடுகளை மேனாட்டுப் பௌதிகசாஸ்திர வித்வான்கள் அநேகர் அங்கீகரிக்கலாயினர் என்றாலும், செடிக்கும் மனிதனுக்குமுள்ள ஒற்றுமையை எல்லா ஜனங்களும் நன்கு அறியும்படி செய்யவேண்டுமென்று போஸ் மிக்க அவாக்கொண்டார். ஆகையால், உலகில் பல தேசங்களிலுள்ள பௌதிக சாஸ்திர சபையார்களின் முன்பாக தாம் கண்டுபிடித்துள்ள அரிய விஷயங்களைக்குறித்து பற்பல உபந்நியாஸங்கள் செய்து பரவச்செய்யக் கருதி, அதற்குத் தக்க சமயம் எப்போது நேரிடுமென்று எதிர் பார்த்திருந்தார். அவ்வாறிருக்கையில், இங்கிலாந்திலுள்ள ராயல் ஸோஸைடியார், அவரது சூழ்ச்சிகளைப் பற்றி "வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்" செய்யுமாறு அவரை வேண்டிக்கொண்டனர். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஸர்வகலா சபையார்களும், (Universities of Oxford and Cambridge) அவ்வாறே கேட்டுக்கொண்டனர். இந்தியா கவர்ன்மெண்டாரும் அவர் கண்டுபிடித்துள்ள தத்துவஞானம் பிரசாரமாகும் பொருட்டு, அவரைத் தங்கள் பிரதிநிதியாக வெளியூர்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்துவரும்படி நியமித்து அனுப்பினர். ஸ்ரீமான் போஸும் அவ்வாறே புறப்பட்டு, 1914-ஷ ஏப்ரல்மீ முதல் 1915-ஷ ஜூன்மீ வரையில், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா தேசங்கள், ஜப்பான் முதலிய இடங்களுக்குச்சென்று, ஆங்காங்கு தக்க உபந்நியாஸங்கள் செய்து, தமது கோட்பாடுகளைப் பிரசுரம் செய்துவந்தார்.

நாகமல்லி.—இது இந்தியாவில் எங்கும் பயிராகக் கூடிய ஒரு செடி. இதன் புஷ்பம் வெண்மையாயிருக்கும். (1) இதன் வேரையும் இலைகளையும் புதிதாகக் கொண்டுவந்து இடித்து, நன்றாகத் துவைத்து சிறிது மிளகுப் பொடியையும், எலுமிச்சம்பழச் சாற்றையும் சேர்த்துக் கலந்து, எவ்விதமான சிரங்குகளுக்கும், படைக்கும் மேற்பூச்சாக உபயோகிக்க, சீக்கிரத்தில் நற்குணம் உண்டாகுமென்று அனுபவத்தில் அறியப்பட்டிருக்கிறது. (2) இதன் வேரை ஒன்றிரண்டாய் உடைத்து, பாலில் சேர்த்துக் காய்ச்சி, அடிக்கடி பருகிவந்தால் தாதுபுஷ்டி ஏற்படும். (3) இந்தியாவின் சில பாகங்களில் இதன் வேரை ஸர்ப்ப விஷத்திற்கு முறிவாக உபயோகப்படுத்துவது வழக்கமென்றும், ஆகவே இதற்கு நாகமல்லி என்று பெயர் கிடைத்ததென்றும் அறிகிறோம். (வை. சி.)

ஸ்ரீகிருஷ்ண கர்ணாமிருதம்

SRI KRISHNA KARNAMRUTAM

त्रिभुवनकमनंतमालवर्णं रविकरगौरवराम्बरं दधाने।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या॥

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததானே||
வபு ரளக குலாவ்ருதானனாப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா ||"

---

31. அபிநவ நவநீத ஸ்நிக்தமாபீத துக்தம்
ததிகணபரிஷிக்தம் முக்தமங்கம் முராரே:|
திசது புவனக்ருச்சரச் சேஹிதா பிஞ்சகுச்சச்
சவி நவசிகி பிஞ்சாலாஞ்சிதம் வாஞ்சிதம் ந:||

"புதிதாய்க் கடைந்துள்ள வெண்ணெயால் பளபளப்புள்ளதும், பாலைக் குடித்தும் குடியாததுமாயுள்ளதும், எங்கும் தயிர்த்திவலைகள் தெளிக்கப்பட்டதும், மயில் தோகையால் அலங்கரிக்கப் பெற்றதும், மயில்தோகையின் சோபையோடு கூடினதும், உலகிலுள்ள சகல துரிதங்களைப் போக்க வல்லமையுடையதும், இவ்வித வைபவம்நிரம்பிய ஸ்ரீகண்ணபிரானது தேகமானது நமது அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யக்கடவது". எல்லாவிதத்திலும் மனோக்யமாயுள்ள கார்வண்ணனது தேக சௌந்தரியத் தியானத்தால், நமது ஸம்ஸார துக்கங்கள் ஒழிந்து, சாசுவதமான ஆநந்தபதவி கிடைக்குமென்பது கருத்து.

32. யாம் த்ருஷ்ட்வா யமுனாம் பிபாஸுரநிசம் வ்யூஹோ கவாம் காஹதே, வித்யுத்வானிதி நீலகண்டநிவஹோ யாம் த்ரஷ்டுமுத் கண்டதே|. உத்தம்ஸாய தமாலபல்லவமிதிச் சிந்தந்தி யாம் கோபிகா:, காந்தி: காளிய சாஸனஸ்ய வபுஷ: ஸா பாவநீ பாது ந:||

ஸ்ரீ பகவானுடைய தேககாந்தியின் பெருமையை உத்ப்ரேக்ஷித்துக் கூறுகிறார். "எந்தத் தேககாந்தியைப் பார்த்து பசுக்கூட்டங்கள் யமுனையின் ஜலமென்று நினைத்து, அதில் தங்கள் தாகவிடாயைத் தீர்த்துக்கொள்ள விரும்புகின்றனவோ, எதை நீருண்ட மேகமெனக் கருதி மயில்கூட்டங்கள் எப்போதும்கண்ணாரக்கண்டு களிக்க ஆசைப்படுகின்றனவோ, எதைக்கண்டு கோபிகைகள் சிரோபூஷணமாக உதவக்கூடிய தமால விருக்ஷத்தளிர் எனக் கொய்ய நினைக்கிறார்களோ, துஷ்ட காளிங்கனது கொழுப்பை யடக்கின கார்வண்ணனது அவ்வித சரீரகாந்தியானது சர்வபாவங்களைப்போக்கி நம்மைப் பரிசுத்தமாக்கி இரக்ஷிக்கட்டும்"

33. மாதர்நாத:பரமனுசிதம் யத்கலாநாம் புரஸ்தாதாசங்கம் ஜடரபிடரீபூர்த்தயே நர்த்திதாஸி|. தத்க்ஷந்தவ்யம் ஸஹஜஸரலே வத்ஸலேவாணி குர்யாம்ப்ராய: சித்தம் குணகணநயா கோபவேஷஸ்ய விஷ்ணோ:||.

"ஏ வாக்குத்தேவியே, இதுவரையில் நான் செய்துவந்தது மிகவும் தகாத காரியம்; பானை போன்றபாழும் உதரபோஷணத்திற்காக, துஷ்டப் பிரபுக்கள்முன் பயந்துநின்று, அவர்களைப் பொய் ஸ்துதிசெய்து திருப்தி செய்விப்பதில் எனது வாக்குச் சாதுரியத்தை உபயோகப்படுத்தி வந்துள்ளேன். கருணைநிறைந்த அன்னையே! நான் இவ்வாறு உன்னை வீண்காரியத்தில் உபயோகித்ததற்கு என்னை மன்னித்தருளவேண்டும். இவ்வித அகாரியத்திற்கு நான் பிராயச்சித்தம் செய்யத் தயாராகவிருக்கிறேன். நந்த கோகுலத்தில் கோபால வேஷந்தரித்து விளங்கிய திருமாலின்பற்பல குணாதிசயங்களை இடைவிடாது வர்ணித்துக் கிருதார்த்தனாவேனாக!" பகவதருளால் ஒருவனுக்குக் கிடைத்து[illegible]வர்ணனாசக்தி,கவிபாடுந் திறமை முதலி[illegible]வற்றைக் கேவலம் நரஸ்துதிசெய்வதில் உபயோகப்படுத்தாமல், பகவானுடைய திவ்விய குணங்களை எடுத்துரைப்பதில் செலவிட்டு நற்கதி பெறவேண்டுமென்று லீலாசுகர் வற்புறுத்துகிறார்.

34. மந்தம் மந்தம் மதுரநிநதைர் வேணுமாபூரயந்தம், ப்ருந்தம் ப்ருந்தாவனபுவி கவாம் சாரயந்தம் சரந்தம்|. சந்தோபாகே சதமக முகத்வம்ஸிநாம். தாநவாநாம், ஹந்தாரம் தம் கதய ரஸனே கோபகன்யா புஜங்கம்||.

"ஏ வாக்கே, புல்லாங்குழலில் மெல்லமெல்ல ஊதி இனிய கான விசேஷங்களைச் செய்பவரும், பிருந்தாவன பிரதேசத்தில் பசுக்கூட்டங்களை மேய்த்து வருபவரும், வேதத்தில் கூறியவாறு இந்திரன் முதலானோரை வருத்திய அஸுரர்களை ஸம்ஹரித்தவரும், கோபஸ்திரீகளுக்குப் பிரிய நாயகனுமான கார்வண்ணனை வர்ணிப்பாயாக!"

35. வேணீமூலே விரசித கனச்யாம பிஞ்சாவசூடோ, வித்யுல்லேகா வலயித இவ ஸ்நிக்த பீதாம்பரேண|. மாமாலிங்கந் மரகத மணிஸ்தம்பகம்பீரபாஹு: ஸ்வப்னே த்ருஷ்டஸ்தருண துளஸீபூஷணோ நீலமேக:||.

"நீருண்ட மேகம்போன்ற மயில்தோகைகளால் அலங்கரிக்கப்பெற்றகூந்தல் முடிச்சோடு

கூடினவரும், இடுப்பில் மின்னல்போல் ஒளிரும் அழகிய பீதாம்பரம் தரித்துள்ளவரும், மரகதமணி இழைக்கப்பெற்ற ஸ்தம்பம் போன்ற கைகளையுடையவரும், இளந்துளவீமாலையை ஆபரணமா யணிந்துள்ளவருமான கார்வண்ணன் என்னைக் காடாலிங்கனஞ் செய்தருள்வதாய் நான் சொப்பனங்கண்டேன்". லீலாசுகர் ஸதா பகவத்தியானத்தி லாழ்ந்து, ததேக சித்தராய் இருந்ததால், அவருக்கு இவ்வாறு அனுபவம் கிடைத்ததாய்ச் சொல்வது அதிசயோக்தி யாகாது.

36. அபி ஜனுஷி பரஸ்மிந்நாத்த புண்யோ பவேயம்
தடபுவி யமுனாயா: தாத்ருசோ வம்சநாள:|
அனுபவதி ய ஏஷ: ஸ்ரீமதாபீரஸூநோ:
அதரமணி ஸமீபந்யாஸ தன்யாமவஸ்தாம்||

"மறு ஜன்மத்திலாவது யமுனை தீரத்தில் அவ்வித மூங்கிலாகப் பிறக்கும் அவ்வளவு பாக்கியம் எனக்குக் கிடைக்குமா? அந்த மூங்கிலின் பாக்கியம் என்னே! அதனாலுண்டான புல்லாங்குழல் பகவானுடைய திவ்விய அதரங்களுக்குச் சமீபத்திலிருக்கும் பெரும் பாக்கியம் பெற்றதே. [illegible]சேதன வஸ்துவானாலும் பகவானது ஸ்பரிசத்தினால், நற்கதி யடைந்து விடுமென்று கூறுகிறார். இனி ஜன்மமே ஒழிந்து, ஸம்ஸார துக்கம் நீங்கவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டியவர், அடுத்த ஜன்மத்தில் ஒரு புல்லாங்குழலாக ஆகவேண்டுமென்று சொல்வதால், அதுவே பரமானந்தமென்றும், மோக்ஷத்துக்கும் மேலானதென்றும் அவர் நினைக்கிறார்.

38. அயி பரிசினு சேத: ப்ராதரம்போஜநேத்ரம்
கபர கலிதசஞ்சத் பிஞ்ச தாமாபிராமம்|
டலிபிதுபலநீலம் வல்லவீ பாகதேயம்
நிகில நிகமவல்லீ மூலகந்தம் முகுந்தம்||

"ஏ மனமே! காலையில் மலர்ந்துள்ள தாமரை புஷ்பம்போன்ற திருக்கண்களுடையவரும், கொண்டையில் கட்டப்பட்டு அசைந்தாடும் மயில் தோகையின் ஒளியால் மனோக்யமாய் விளங்குபவரும், இந்திரநீலக்கல்போல் நீலமான தேக காந்தியுடையவரும், கோபிகைகளின்பாக்கியமே உருவெடுத்திருப்பதுபோல் பிரகாசிப்பவரும், எல்லா வேதங்களுமாகிற கொடிகளுக்கு ஆதாரமாயுள்ள ஒரு மூலக்கிழங்கு ரூபமாயுள்ளவருமான ஸ்ரீமுகுந்தனை சதாத் தியானித்து அடைவாயாக!" வேதங்களுக்கு ஆதிகாரணனும், அவரால் பிரதிபாதிக்கப்படும் பரமபுருஷனுமான கார்வண்ணனைத் தியானித்து அவரது நேத்திராதி அவயவங்களில் ஈடுபட்டுப் பரமானந்தமடையும்படி லீலாசுகர் தம் மனத்தைச் சிட்சிக்கிறார்.

சித்திரச் சதுரங்கள்

MAGIC SQUARES

1. இந்தப் படம் ஒரு சதுரக் கட்டம். இது நீளத்தில் 3, அகலத்தில் 3, ஆக $3 \times 3 = 9$ அறைகள் கொண்டது. இவ்வறைகளில் 1-முதல் 9-வரையில் எண்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. நீளத்திலாவது, அகலத்திலாவது, குறுக்காகவாவது வரிசையாயுள்ள மூன்று எண்களைக் கூட்ட 15 வருகிறது. உதாரணம் $9+5+1=15$, $8+1+6=15$, $4+5+6=15$. இவ் விசித்திர நம்பர் அடைப்புள்ள சதுரத்திற்கு கணன சித்திரச் சதுரம் என்று பெயரிடுவோம். ஆங்கில பாஷையில் இதை(Magic Square) மாஜிக் ஸ்கொயர் என்பர்.

2	7	6
9	5	1
4	3	8

படம் 1

2. மேலேகாட்டியசித்திரத்தில் மூன்றறைகள் கொண்ட மூன்றடுக்குகள் இருக்கிறபடியால், அதற்கு மூன்றடுக்கு சதுரம் என்று பெயர்.

இச்சதுரம் 1 முதல் 16 வரையில் எண்கள் அடைக்கப்பட்ட அறைகளடங்கிய நான்கடுக்குச் சதுரம். இதில் அகலத்திலும், நீளத்திலும் குறுக்காகவும் வரிசையாயுள்ள நம்பர்களைக் கூட்ட 34 வருகிறது.

16	2	3	13
5	10	11	8
9	6	7	12
4	15	14	1

படம் 2

இவ்விதமே 5, 6, 7,... அடுக்குச் சித்திரச் சதுரங்கள் உண்டாக்கலாம். அதற்கேற்பட்ட முறைகளில் சிலவற்றை பின் எழுதுவோம்.

3. இவ்விதச் சித்திரச் சதுரங்கள் ஆதிகாலம் முதற்கொண்டே இந்தியாவில் வேடிக்கையாகப் பொழுதுபோக்க ஸாதனங்களாயிருந்ததாகத் தெரியவருகிறது.

அல்லாமலும், முன்னோர்கள் எத்தேசத்தினராயினும், எண்களுக்கு ஒருவித மந்திர சக்தி உண்டென்றும், அவைகளிற் சிலவற்றைச் சக்கரங்களிலடைத்து ஓலைகளிலாவது, செம்பு, வெள்ளி முதலிய உலோகத்தகடுகளிலாவது வரைந்து ரக்ஷைகளாக உபயோகித்தால்

தோஷ நிவர்த்தி, சரீர ஆரோக்யம் முதலிய ஸௌகரியங்கள் ஏற்படுமென்று நம்பியிருந்தார்கள். தற்காலத்திலும் நமது பரதகண்டத்தில் இவ்வித ரக்ஷாபந்தனங்கள் உபயோகப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

ஓரறை சதுரம் ஸர்வேசுவரனுக்கு ப்ரீதிகரமென்றும், இரண்டடுக்குச் சதுரம் (அதன் அறைகளில் மேற்சொன்ன விதமாய் நம்பர்களை அடைக்க முடியாதாகையால்) பிருதிவி, அப்பு,தேஜஸ், வாயு ஆகிய நான்கு பூதங்களின் நிலையின்மையைக் குறிப்பதாகவும், 3, 4, 5, 6, 7, 8, 9, அடுக்குச் சதுரங்கள் முறையே சனி, குரு, அங்காரகன், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய கிரகங்களுக்குச் சொந்தமாய் அக்கிரகங்களின் அனுக்கிரகத்தைக் கொடுக்குமென்றும் ஜனங்களின் நம்பிக்கை.

4. காலம் செல்லச்செல்ல, சித்திரச் சதுரங்கள் இவ்விதமாய் மனிதனுக்கு மந்திரசக்தி மூலமான சிகித்ஸைகளைச் செய்யக்கூடுமென்கிற நம்பிக்கை குறைவுபட்டது. பல நூற்றாண்டுகளில் கணிதவித்வான்களின் ஆராய்ச்சிக்குப் பாத்திரமாய், தற்காலத்தில் கணிதசாஸ்திரத்தில் ஒரு பாகமாய், இவை பொழுது போக்காக கவனிக்கப்பட்டுவருகின்றன.

5. சித்திரச்சதுரங்கள் வரைய யுக்திகளைச் சொல்வதற்கு முன், அவை சம்பந்தமான சில பரிபாஷைகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இரண்டாவது படம் பார்க்க.

16, 2, 3, 13 அடங்கியது முதல் வரிசை. இப்படியே இரண்டாவது, மூன்றாவது...... வரிசைகள்.

16, 5, 9, 4 அடங்கியது முதல் அடுக்கு. இவ்விதமே, இரண்டாவது, மூன்றாவது...... அடுக்குகள்.

16, 10, 7, 1 அடங்கியது இடது விட்டம்.

4, 6, 11, 13 அடங்கியது வலது விட்டம்.

(1, வ. 4) என்பது முதல்வரிசை 4-வது எண்ணைக்குறிக்கும். அதாவது 13

(3, அ. 2) என்பது மூன்றாவது அடுக்கில் இரண்டாவது எண்ணைக் குறிக்கும். அதாவது 11.

(இ. வி. 3) என்பது இடது விட்டத்தில் 3-வது எண்ணைக்குறிக்கும். அதாவது 7.

(வ. வி. 2.) என்பது வலது விட்டத்தில் 2-வது எண்ணைக் குறிக்கும். அதாவது 6.

சித்திரச்சதுரங்கள் ஒற்றைப்படை, இரட்டைப்படை என இருவகைப்படும்.

ஒற்றைப்படை சித்திரச் சதுரங்கள் 1,3, 5, 7,...ஆகிய ஒற்றைப்படையான அறைவரிசைகளுள்ளன. இவற்றில் முறையே 1, 9, 25, 49,...... அறைகளுண்டு.

இம்மாதிரியே 2, 4, 6, 8, ... ஆகிய இரட்டைப்படையான அறை வரிசைகளுள்ளவை இரட்டைப்படை சித்திரச்சதுரங்கள் எனப்படும்.

6. **எண்அடைப்புமுறை** (ஒற்றைப்படைச் சதுரம்) 5-அடுக்குச்சதுரமொன்றில் எண்களை அடைப்போம். நம்பர் 1 ஐ மேல் வரிசை நடு அறையிலிடவும். அடுத்த நம்பர்களை மேனோக்கிக்குறுக்காகப்பதியவேண்டும். அவ்வாறு செய்கையில் மேல்வரியை எட்டிவிட்டால், அடுத்த எண் அடிவரியில் முன் அடுக்கிற்கு அடுத்த அடுக்கைச்சேர்ந்த அறையில் பதியப்படும். அல்லது வலது பக்க ஓரமான அடுக்கை எட்டிவிட்டால், எட்டிய அறைக்கு அடுத்த மேல்வரிசையைச் சேர்ந்த, இடதுபக்கத்துக் கோடியிலுள்ள அறையில் அடுத்த எண் பதியப்படும். இப்படிக் குறுக்காகப் பதிந்துகொண்டே போகையில், ஏற்கெனவே நம்பர் அடைத்த அறை தடைசெய்தால், உடனே அடுத்த எண்ணானது தனக்குமுன் சென்ற எண்ணின்கீழ் இறங்கிப் பதிவுபெறும்.

17	24	1	8	15
23	5	7	14	16
4	6	13	20	22
10	12	19	21	3
11	18	25	2	9

படம் 3.

இந்த உபாயங்கள் மேற்காட்டிய சதுரத்தைப் பரிசோதித்தால் நன்கு விளங்கும். இத்துடன் 7-அடுக்குச் சதுரமும் மற்றொரு உதாரணமாய் வரைந்திருக்கிறது. ஆனால் 5-அடுக்குச்சதுரத்தில் மொத்த தொகை 65. 7-அடுக்குச்சதுரத்தின் மொத்தத் தொகை 175.

வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின் மெலியார்மேற் செல்லு மிடத்து.

30	39	48	1	10	19	28
38	47	7	9	18	27	29
46	6	8	17	26	35	37
5	14	16	25	34	36	45
13	15	24	33	42	44	4
21	23	32	41	43	3	12
22	31	40	49	2	11	20

படம் 4

7. அறைகளில் அடைபடும் எண்கள் 1 முதல்தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதில்லை. எந்த நம்பரிலாவது ஆரம்பித்துத்தொடர்ச்சியாய்ஏற வேண்டுவதுதான். இந்த 3-அடுக்குச் சதுரத்தில் நம்பர்கள் 28-லிருந்து தொடர்ச்சியாக பதியப் பெற்றன. கூட்டுத்தொகை 96.

[illegible]	28	33
30	32	34
31	36	29

படம் 5

8. ஏதாவதொருநம்பரில் ஆரம்பித்துத் தொடர்ச்சியாக ஒவ்வொன்ருக அதிகப்படுத்தி 28, 29, 30,...என்பவற்றுக்குப் பதிலாக, 2,2 ஆகவோ, 3, 3,...ஆகவோ, அல்லது எந்த எண் விட்டு விட்டோ, நம்பர் மாலிகை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணம்:மேற்காட்டிய 3-அடுக்குச் சதுரத்துக்கு 28, 30, 32,...44 (வித்தியாசம் 2) அல்லது 28, 35, 42, 49, 56, 63,70, 77, 84 (வித்தியாசம் 7) போன்ற தொடர்களை உபயோகிக்கலாம்.

9. மேற்சொல்லிய விதிகளிலடங்கிய ரகஸியத்தை நன்கறிந்தோர் அவரவர்களுக்குத் தோன்றியபடி புதிய விதியை ஏற்படுத்துக்கொண்டு சதுரங்கள் கட்டலாம்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

(230-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பொழுதுதான் கோதையின் துஷ்டத்தனம் தெரிந்தது. குடும்பத்தைக் கலைத்து, தனக்கும் தன் புருஷனுக்குமிருந்த நேசத்தைக் குலைத்துவிடுவாளோ என சந்தேகம் பிறந்தது. அழுகையை நிறுத்திக் கொஞ்சம் ஆலோசிக்கத் தலைப்பட்டாள். அப்பொழுது கோதை,"வாடி! என்னம்மா? கொஞ்சம் சாப்பிடு. அப்போதே சாப்பிட எழுந்திருந்தாயே. அந்தச் தீசல் எமன் அல்லவா குறுக்கிட்டது" எனச் சொன்னாள். அப்பொழுது சண்பகத்துக்குக் கோதையினிடம்அளவில்லாத அருவருப்புண்டாயிற்று. கொட்டிக் கொட்டித் தன்மயமாக்கும் குளவி போல், இவள் நம்மையும் துஷ்டையாக்குவாளோ என ஒரு தோற்றம் ஏற்பட்டது. இதுவரையில் அவள்பேரிலிருந்த நல்லெண்ணமும் மாறிவிட்டது. "போதும் உபசாரம். பசித்த போது நான் சாப்பிட்டுக்கொள்ளுகிறேன்" என்று சலிப்புடன் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள். கோதைக்கு அது புரியவில்லை;"சாப்பிடலாம் அம்மா! மாப்பிள்ளை எங்கேயாவது வழியில் சாப்பிட்டுவிட்டுத்தான் வருவார். அந்த லாயர்வீட்டுக்குப் போயிருக்கிருர். எந்த லாப்படி அந்த தௌஷ்ட்யம் பேசினுன் என்று விசாரித்து வருவார். அவருக்காக நீ பட்டினி இருந்து கட்டுமா? எல்லாம் சாப்பிடலாம், வா" என்ருள். இவ்வார்த்தைகளைச் சண்பகத்தின் செவி பொறுக்கவில்லை. சுள் என்று கோபித்துக்கொண்டு, "போதும், போதும், புதிது புதிதாயிருக்கிறது நியாயமெல்லாம். எனக்குப் பசியில்லை. புருஷன் பட்டினியாயிருக்கும் போது நான் சாப்பிடமுடியாது" என்று ஒரு பக்கத்தில் போய்ப் படுத்துக்கொண்டாள்.

பார்த்தாள் கோதை."ஏது இவள் புருஷனிடமுள்ள வாத்ஸல்யத்தால், உள்ளதைச் சொல்லிவிடுவாள்போ லிருக்கிறது. எப்படியாவது நாம் தப்பித்துக்கொள்ளவேண்டும். இவளைக் கொஞ்சம் பயமுறுத்தினல்தான் சாத்தியப்படும்" என்று கண்டு, "ஏனம்மா சண்பகம்! என்ன ரொம்பக் கோபமாயிருக்கிருய்போல் இருக்குதே! நான் என்னசெய்தேன் உனக்குத் தீங்கு? மூத்தாள் பெண்ணை, நானு வேண்டாமென

றேன்? என்னமோ அந்தக் குழந்தை இருந்தது. நீ அதட்டினாய், அது அழுதது. நான் சற்றுக் கடுமையாய் அழாதே என்று சொன்னேன். கிடக்கட்டும்; மாப்பிள்ளை வந்தால் கோபித்துக் கொள்வாரே, என்ன செய்வாய் என்று கொஞ்சம் இரங்கினேன். பட்டினி கிடந்து முகம் வாடியிருக்கிறதே என்று சாப்பிடக்கூப்பிட்டேன். என்பேரில் ஏன் ஆத்திரப்படவேண்டும்? நான் ஏதாவது தப்பிதம் செய்தேனா?'' என்று நிஷ்டூரத்துடன் பேசினாள்.

பார்த்தாள் சண்பகம்; 'என்ன பொய்! என்ன தைர்யம்' என்று நினைத்தாள்; "ஆமாம் அம்மா! நான்தான் எல்லாம் செய்தேன். உன்னையொன்றும் சொல்லவில்லையே. எதற்காக இந்த வார்த்தைக்கட்டெல்லாம்?'' என்றாள். கோதைக்குச் சரியான சமயம் வாய்த்தது. "யாரைப்பார்த்து வார்த்தைக்கட்டு என்று சொன்னாயடீ? உங்காத்துக்காரர் துபாஷியாயிருந்தால் உன்மட்டும். துபாஷி பெண்டாட்டியெல்லாம் பொய் சொல்லுகிறது இல்லையோ? அவாளுக்கு எல்லாம் தன்குழந்தை மூத்தாள் குழந்தை இல்லையோ? நான் ஏன்வந்தேன் இந்த வீட்டுக்கு? என் ஆம்படையானும் உயிரோடிருந்தால்-'' என்று சொல்லியபோதே அழ ஆரம்பித்து, "இத்தனைநாள் துப்ட்டி கலெக்டர் பண்ணுவன்'' என்று சொல்லுமுன் பெருத்த குரலுடன் புலம்பத் தலைப்பட்டாள்.

பார்த்தாள் சண்பகம்; 'இதேது? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே; போன புருஷன் திரும்பிவந்தால் என்னசெய்கிறது? வீட்டில் இவ்வளவு அமளி நடந்தால் மனதில் சந்தோஷம் எப்படி ஏற்படும்?'' என்று பயந்து, எப்படியாவது இவள் குரலை நிறுத்துவோம் என நினைத்து, "அத்தே! அழுவானேன்? ஏற்கெனவே கோபித்துக்கொண்டுபோன புருஷன், இங்கே இப்படி இருப்பதைப்பார்த்தால் மிகவும் கோபிப்பர். மேலும் நாமிருவரும் ஒன்று என அவர் நினைத்திருக்க, நாம் சண்டைபோட்டால் அவருக்கு நம்மிடத்தில் கௌரவம் எப்படி உண்டாகும்? உங்களுக்கு இங்கிருக்க இஷ்டமில்லை என்று தெரிகிறது. அப்படியானால் உடனே உங்களை ஊருக்கு அனுப்ப ஏற்பாடுசெய்கிறேன். நமக்குள்ள பாந்தவ்யத்தைக் கண்டாவது நாம் ஒருவரையொருவர் தூஷிக்காமலிருப்போம்'' என்று சொல்லி தைரியத்தைக் கடைப்பிடித்து, "யாரப்பா அங்கே?'' என்று ஒரு ஆளைக் கூப்பிட்டு, "இப்பொழுது மணி ஏழாகிறது. எட்டுக்கெல்லாம் உங்கள் ஊருக்குப் போகும் வண்டி எழும்பூரிலிருந்து புறப்படும். இதோ வண்டி கொண்டுவரச் சொல்லுகிறேன்'' என்று, கோதை சொன்ன வார்த்தைகளையும் காதில்போட்டுக்கொள்ளாமல் உள்ளேசென்று பெட்டியைத் திறந்து பணப்பையை எடுத்துவந்து இருபத்தைந்து ரூபாயை அவள் முன்னில் வைத்து, "இதுஇருக்கட்டும்செலவுக்கு''என்றுசொல்லி, அங்குவந்த ஆளைப்பார்த்து, "நாராயணா! அம்மாளைக் கொண்டுபோய் ரயிலில்ஏற்றிவிட்டு வா. இதோ இந்த ஐந்துரூபாயைக்கொண்டு வண்டிக்குச்சத்தங்கொடுத்து ரயிலுக்கும்டிக்கெட்ஒன்று வாங்கிக் கொடுத்துவிடு'' என்று உத்திரவிட்டு சரேலென மெத்தைக்குப் போய்விட்டாள்.

சண்பகம் இவ்வளவு சாமர்த்தியமாய்க் காரியம் செய்வாள் என்று கோதை நினைக்கவே இல்லை. சண்டைபிடித்து அவளைத் தன்னிடம் பயப்படச் செய்யலாமென்று நினைத்திருந்தாள். இப்படி நிச்சயமாய் தனக்குச் செலவுகொடுக்கு ஊருக்குப் போகும்படி சொன்னது அவளை திடுக்கிடச் செய்தது. "இல்லையடி சண்பகம்! நான் என்ன சொன்னேன்? ஏன் அவ்வளவு கோபித்துக் கொள்ளுகிறாய்? ஊரில் போய் என்ன செய்யப்போகிறேன்? இங்கேயாவது உனக்குப் பேச்சுத்துணையாக இருக்கலாம்'' என்று சொல்லிக்கொண்டுவரும்போதே, நாராயணன், "எழுந்திருங்கள் அம்மா! உங்கள் மூட்டை முடிச்சுகளை எடுத்துக்கொள்ளுங்கள். எஜமானி அப்போதே மேல்மெத்தைக்குப் போய்விட்டார்கள். நீங்கள் சொல்வது ஒன்றும் அவர்கள் காதுக்குக் கேட்காது. நேரமாகிறது. போவோம். வாருங்கள்'' என்றான்.

கோதைக்கோ ஊருக்குப்போக எண்ணமில்லை. "உன் காரியத்தைப்பாரடா அடிமாண்டு போவானே!'' என்பதாக அதட்டிவிட்டு மெத்தையை நோக்கிச் சென்றாள்.

கதவோ தாளிட்டிருந்தது. 2,3, இடி இடித்தும் திறக்கவில்லை. வண்டி கொண்டுவந்த நாராயணன், முதலில் மரியாதையாகவும், ஒருவகையாய்ச் சமாசாரம் தெரிந்தபிறகு சற்றுக் கடுமையாகவும் தனது எஜமான், எஜமானிகளுடைய வார்த்தையைத் தட்டுவது பிசகு என்று சொல்லிக், "கடைசியாய்ச் சொல்லு

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

கிறேன், கேளுங்களம்மா! மணியோ ஆய்விட்டது. ஐயாவின் கோபம் சாதாரணமாய்ப் பொறுப்பது கடினம். தங்கள் பேரில் குற்றம் அதிக மிருக்கிறதெனத் தோன்றுகிறது. உடனே புறப்படுங்கள். இல்லாவிடில், அம்மாள் தங்களுக்குத் தயவுடனீந்த பணமும் போய் விடும். வாசலிலனுப்பிக் கதவைச் சாத்திக் கொள்வார்'' என பயமுறுத்தினுன். முன்பின் அனுபவத்தால் அவன் சொல்லுவது சரியென உணர்ந்த கோதை, அவனையும் வைது வீட்டையும் வீட்டுக்காரர்களையும் அவர்களுடைய மூத்தாள் பெண், தான், இறந்த தன் அகமுடையான், தன்னைச் சிருஷ்டித்த பிரமன் எல்லாரையும் வாயார வைதுகொண்டு, தன்னுடைய சில துணி மூட்டை முடிச்சுகளைச் சுருட்டிக் கொண்டு வண்டியில் ஏறினுள். வண்டியும் பங்களா வாயிலைத் தாண்டிற்று. அப்போது வேகமாய் வந்த ஒரு மோட்டார் சரேலென்று வேகந்தணிந்து வண்டியில் மோதாமல் நின்றது. அதில் உட்கார்ந்திருந்த ராஜலட்சுமி வண்டியில் கோதையைக் கண்டதும், பேயைக் கண்டவள்போல, "ஐயோ!" என அலறி விழ, மிகுந்த கோபத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டே கோவிந்தாச்சாரியார் பங்களாவுக்குள் போனுர்.

கோதையின் அதிருஷ்டம் வண்டி சீக்கிரமே அவளை ரயிலில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது. நமது கதையில் சம்பந்தப்பட்ட யாரும் அதுமுதல் அப்பெண்மணியைப்பார்க்கவில்லை.

V

கோவிந்தாச்சாரியார் மோட்டாரை விட்டு இறங்கிவரும்பொழுது வழக்கம்போல் அவரை எதிர்கொள்ளவேண்டுமென்று சண்பகவல்லி வாயிலில் நின்றுள். ஆனுல் அவள் எண்ணம் சித்திக்கவில்லை. உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டு வாய்குளறி ஏதோ பிதற்றிக்கொண்டிருந்த குழந்தை ராஜத்தை மெதுவாய் எடுத்து மார்போடணைத்துக்கொண்டு அவள் இருக்கும் பக்கம் திரும்பாமல் கோவிந்தாச்சாரியார் மெத்தைக்குப் போய்விட்டார். அங்கே தன் அறையில் ஒரு சிறிய கட்டிலில் குழந்தையை விட்டு அதன் பக்கத்திலுட்கார்ந்து கொண்டு "அம்மா அழாதே. நானிருக்கிறேன். பயப்படாதே'' என்று பலவிதயாய்க் குழந்தையை தேற்றிக்கொண்டிருந்தார்.

சண்பகவல்லிக்கு சமீபத்தில் போக பயம். இவ்வளவு அன்பான புருஷன் தன் பக்கங்கூட நாடாமற்போகின்றுரே! என்ன கோபமோஎன நடுங்கினுள்; குழந்தை ராஜம், கோதை வண்டியைப் பார்த்து அலறியதையும், மோட்டாரை விட்டு இறங்கும்பொழுது நடுங்கியதையும் பார்த்தவளாதலால், அன்று காலையில் நடந்த சங்கதிகளில் தான் கலந்திருந்ததைப் பற்றி நடுங்கினுள். வெளுத்துச் சுருங்கின முகமும் மிரண்டவிழியும் நடுக்குண்டதேகமும் தழுதழுத்த வார்த்தைகளும் ராஜத்துக்கு ஏதோ பலமான உடம்பு அசௌக்கியம் வந்துவிட்டதென்று அவளுக்குத் தெரிவித்தன. நிஜமாகவே அந்தக் குழந்தையினிடத்தில் விரோத பாவம் இல்லாதவளாகையால் அதைக்கண்டு மனம்பரிதபித்தாள். தான்போய் அதற்கு ஆறுதல் சொல்லி, அதைக் காப்பாற்றவேண்டுமென்று அதிகமான ஆசை உண்டாயிற்று. ஆயினும் என்ன செய்கிறது. புருஷன் இடம் கொடுத்தாலல்லவோ ஏதும் செய்யத்துணியலாம்? அவர் அவ்வளவு கண்டிப்பாய் இருக்கும்போது எப்படி அணுகுகிறது என நினைத்து அந்த அறைவரையில் போவாள். திரும்பவும் கீழ்இறங்குவாள். இப்படி யாது செயவதென்றுஅறியாது தடுமாறினுள். அப்பொழுது மற்றொரு மோட்டாரும் பங்களாவுக்குள் வர, அதில யார் வந்திறங்கினதெனப்பார்த்தாள். 'நல்லவேளை டாக்டர் மாணிக்கம் வருகிறுர். அவர் போகும்பொழுதாவது கூடப்போவோம். அதைச்செய், இதைச் செய் என்று சொன்னுல் செய்து கொஞ்சங் கொஞ்சமாக புருஷனைச் சாந்தப்படுத்துவோம்' என நினைத்து அவர் வரும்வழியில் நின்றுள். டாக்டர் வரும்போதே "அம்மா சௌக்கியமா? யாருக்கு என்னஉடம்பு? அவஸரமாகச் சொல்லியனுப்பினுரே. வீட்டில்நானில்லை. கேட்டதும்வந்தேன்'' என்ச் சொல்லிக்கொண்டே மெத்தையில ஏறினுர். சண்பகந்தான் என்ன பதில் சொல்லுவாள். குழந்தைக்கு என்றுஆரம்பித்து முடிக்க முடியாமலநின்றுள். 'எந்தக்குழந்தை!யாராவது வந்திருக்கிறுர்களா என்ன! ஓ! பேபி(Baby) யா! இப்பொழுது இங்கிருக்கிறதா? என்று பதுல எதிர்பாராமலே முன் நடந்தும்பானுர். நடந்து போய் கோவிந்தாச்சாரியார் இருந்த அறையில நுழைந்து, "என்ன? தங்கள் குழந்தைக்கா?'' என்று கேட்டுக்கொண்டு அவர்பககத்திலபோய்

உட்கார்ந்தார். கூடவந்த சண்பகமோ கிட்ட நெருங்கமுடியவில்லை. டாக்டர் வருவதைத் திரும்பிப்பார்த்த தன் புருஷன் அவரை வாருங்களென்றுகூடச்சொல்லாது தன்னைப்பார்த்த கடும்பார்வை அவளைக் கதவினிடமே ஸ்தம்பித்து நிற்கச் செய்துவிட்டது. பதில் சொல்லாமல் சிறிது நேரம் நின்றுவிட்டு நடுங்கிக்கீழே வந்துவிட்டாள்.

சிறிது நேரங்கழித்துவந்த டாக்டர், "குழந்தைக்கு தாபஜ்ஜுரம் 103°-இருக்கிறது. பதைபதைக்கும் நெஞ்சையும், குளறின வார்த்தையையும் பார்த்தால் குழந்தை எங்கேயே பயந்துகொண்டிருக்கிறாள்போல இருக்கிறது. வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். மருந்து கொடுத்தனுப்புகிறேன்" என்று சொல்லிபபோனார். அவர் வார்த்தையிலிருந்து நடந்த சங்கதி முழுவதும் தெரியாமலிருந்தபோதிலும் தாங்களிருவரும் நடந்துகொண்ட மாதிரிஏதோ ஸந்தேகத்தை உண்டுபண்ணிவிட்டதெனத் தெரிந்தது. அந்யோன்யமான தன் குடும்பத்தில் பிறர் பார்த்து சங்கிக்கும்படியான ஒரு கலக்கம் நேர்ந்ததே என நினைத்து வெட்கினாள்; சண்பகம், 'எல்லாம் ஈசன்செயல்' என நினைத்து நல்லவேளை எப்போ வருமோ எனத் தெய்வத்தை நினைத்துக்கொண்டு ஓரிடத்தில் படுத்துக்கொண்டாள்.

அன்று அவள் சாப்பிடவில்லை. பசியினாலும் துக்கத்தினாலும் தூக்கம் பிடிக்கவே இல்லை. வீட்டிலுள்ள வேலைக்காரர், வேலைக்காரிகளெல்லோரும் எஜமான் ஆக்ஞைகளைச் சிரமேற்கொண்டு அங்குமிங்கும் ஓடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

மாங்கொட்டை.—இதன் பருப்பை உலர்த்தித் தூள் செய்து 20 முதல் 30 நெல் எடைவரைக்கும் தேனில் அல்லது வெல்லத்தில் கலந்து கொடுத்தால், வயிற்றில் சேர்ந்திருக்கும் கிருமிகள் வெளியாகும். மூலத்திலிருந்து இரத்தம் அதிகமாய் வடிவதை நிறுத்தும். மாதவிடாயை ஒழுங்குபடுத்தும். சீதபேதியிலும, இரத்தக்கடுப்பிலும் இதைக் குழம்பாக்கி அன்னத்துடன் கலந்து உபயோகிப்பது நாட்டு வழக்கம். இதனால் சீதபேதி முதலியவற்றில் நற்குணம் பிறப்பதாயும் அனுபவத்தில் அறியப்பட்டிருக்கிறது.

(வை. க.)

சிவாஜி சத்ரபதி

SHIVAJI THE GREAT

மூன்றாம் அங்கம்—முதற் காட்சி

இடம்.—டில்லி அரண்மனையைச் சேர்ந்த சிறைச்சாலை.

காலம்.—மாலை.

பாத்திரங்கள்.—சிவாஜி, படேகான், சிறைக்காப்பாளன்.

(சிவாஜி காராக்கிரகத்தினுள்ளிருந்து புலம்பல்)

யான் எண்ணியிருந்த எண்ணம் யாவும் ஈடேறாமற் போகுமென்பதைக் கனவிலுங் கருதவில்லையே. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைப்பது போலாகுமென்பது எனக்குக் கண்கண்ட காட்சியாயிற்றே. அன்னியர்களுக்குப் புறம்பாக இராச்சியமொன்றமைத்து, எல்லா சாதியாரையும் அணைத்து ஆதரித்து, சிறந்த இராஜ தந்திரத்துடன் கோல் கோணாது நீதி புரிந்துவரவேண்டுமென்று பேரவாக் கொண்டிருந்த நம்மைப் பகவான் இவ்வழிவிட்டாரே. ஆ! தெய்வமே! இதுவும் உன் திருவருளோ. ஜயஸிங்கர் பன்னிப்பன்னிப் பன்முறை டில்லிக்குப் போகும்படி கூறினரே. பாதுஷா தக்க மரியாதையுடன் ஏற்பார் எனக் கூறினரே. இதுதானா சிவாஜிக்குச் செய்யும் மரியாதை! இதுவும் ஒரு சூழ்ச்சியோ. மனமே! ஜயஸிங்கர் அப்படி செய்யார். ராம்ஸிங் நம்பொருட்டுப் படாதபாடெல்லாம் படுகிறான். மிக்க வருந்துகிறான், பாவம்! பாதுஷாவின் மனதைச் சாந்தபபடுத்தி வரும்படி குருமூர்த்தியும் கூறினரே. என் சிறைவாசத்தைக் கேட்கும் அன்னை உயிர்நீங்குவளே. பத்துமாதம் சுமந்துபெற்றுக் கடைசியில் கண்ட பலன் இதுதானா என்று ஏங்கி உயிர்துடிப்பளே. ஐயோ! என் உயிர்க்காதலி ஸஹீமணி ஆவியிழப்பளே. அவளைத் தேற்றுவார் யார்? என்ன கஷ்டம்! யான் கஷ்டத்திற்குத்தானா பிள்ளையாகப் பிறந்தேன். தெய்வ அருளால்-பவானி கிருபையால் எல்லோர் கண்முன்பாக மண்டலாதிபதியாக இருக்கவேண்டிய ஆசையைப் பற்றறச் செய்தாயே! இதெல்லாம் வினைப்பயனன்றோ? ஊழ்வினைகடத்தல் கடல் கடத்தலினும் அரிதன்றோ. விதியை மதியால் வெல்லலாமென்பார்களே. முற்றுமுணர்ந்த முனிவர்களும் விதியைக் கடக்கமுடியாமல் தியங்கினரன்றோ. ஹரிஹரப் பிரம்மாதிகளும்விதியைக் கடக்க வில்லையே. தேவேந்திராதி சுரர்களும் விதியினால் மதியிழந்து மயங்கவில்லையா! சததியத்தைக் கடைப்பிடித்த ஹரிச்சந்திரனும் தருமத்தைக் கைப்பற்றின ஸ்ரீராமபிரானும், பாண்டவர் ஐவரும், மற்றுமுள்ள மன்னர்களும் விதியினால் பட்ட தொல்லைக்கு எல்லையுமுண்டோ? மகா பக்திமான்களான ராமதா

ஸர், பட்டினத்தடிகள் முதலாயினோர் விதிக்கூட்டில் அடைபட்டனரன்றோ. அவர்களுடைய பாததூளி விலை பெறாத யான் விதிக்குட்படுவதும் ஓர் அதிசயமா? விதியை நினைத்துப் புலம்புதல் என்ன பலனைத்தரும்? விதியைக்கடக்க வழியொன்றை நாடுவோம். ஏ! மனமே! தைரியமாயிரு. உன் கோலத்தைக் காண்பிக்காதே. உன்னை யறிவேன். காவலா! உன் எசமானர் எங்கே? யான் அவரைப் பார்க்கவேண்டுமென்று கூறு.

காவ.—நல்லது. அவர் வரும் சமயமுமாயிற்று.

சிவா.—நீ சென்று அவரை அழைத்துவரலாகாதா?

காவ.—யான் எப்படிச் செல்வது? காவலைவிட்டு நீங்கலாமா? கடமையை வழுவுதல் மடமையன்றோ!

சிவா.—வாஸ்தவம். மனிதர் அவரவர் கடமை வழுவுதல் கூடாது.

காவ.—அதோ வருகிறார். போலட்கான்.

(போலட்கான் ப்ரவேசம்)

போல.—காவலா! என்ன செய்கிறாய்? நீ காப்பது காவல்தானா? சிறைவாசியினிடம் என்ன உரையாடுகிறாய்? சிறைவாசியினிடம் உரையாடுவது சட்டப்படி குற்றமென்பதை யறியாய்போலும். இனி அப்படிச் செய்யாதே. உஷார்!

காவ.—சுபேதார்ஜீ! உங்களைப் பார்க்கவேண்டுமென்று என்னிடம் அவர் தெரிவித்தார். அதன் பொருட்டு யான் அவரிடம் உரையாட நேர்ந்தது.

படே.—நல்லது. (சிவாஜியைப் பார்த்து) ஐயா! உமக்கு என்னவேண்டும்?

சிவா.—ஐயா படேகான்! இவ்வாறு வஞ்சிப்பாரும் உண்டோ! இது உங்கள் செங்கோலுக்கு அழகோ? ஏறவிட்டு, ஏணியைவாங்கும் வழியன்றோ இது?

படே.—அதெல்லாம் என்னிடம் கூறுவதில் பிரயோசனமில்லை. எனக்கு இட்ட கட்டளையைச் செய்கிறேன். உமக்கு என்னவேண்டும்?

சிவா.—இனி என் செய்வது? ஒருவழியாக யானும் தேறுதல் கொண்டேன். என்னுடன் வந்தவர்களுக்கு மகாராஷ்டிர உணவு அனுப்பவேண்டுவதால், என் வேலைக்காரனை நித்தம் இக்கூடையில் உணவு கொண்டுபோய்க் கொடுத்துவரும்படி உத்திரவு கொடுக்கவேண்டும்.

படே.—நல்லது அப்படியே. (ஆத்மகதமாய்) மகாராஷ்டிரர்கள் எப்பொழுதும் உணவையே பெரிதாகக் கொண்டிருக்கிறார்கள். எந்த உணவை உண்டால் என்ன? (காவலனை நோக்கி) காவலா! சிவாஜியின் வேலைக்காரன் உணவுகொண்டுபோக உத்திரவிடு.

(நிஷ்கிரமித்தல்)

காவ.—அப்படியே!

சிவாஜி.—(ஆத்மகதமாய்) இனித் தாமதிக்கக் கூடாது. நாளை இரவு பத்து நாழிகைக்குச் சரியாக வெளிக்கிளம்ப வேண்டுமென்று ஓலை விடுத்தேன். அசுவம் தயாராயிருக்கும். நாளைக்கு உணவு எடுத்துச் செல்லும் கூடையில் உட்கார்ந்துகொண்டு தப்பவேண்டும். எல்லாம் ஈசன் செயல்! நம்மால் ஆகுங் காரிய மொன்றுமில்லை.

காவ.—முதல்பாரா உஷார்!

(காட்சி முடிவு).

மூன்றாம் அங்கம்—இரண்டாம் காட்சி

இடம்.—டில்லி நகருக்குப் புறத்தேயுள்ள தனிப் பாதை.

காலம்.—நள்ளிரவு.

பாத்திரம்.—சிவாஜி, ரகுநாத பண்ட்.

சிவாஜி.—இனிக் காலதாமதஞ் செய்யொணாது. இக்கோலத்துடன் செல்வது உனக்கு உலைவாக முடியும். தாடி முதலியவைகளைச் சேதித்து காஷாய உடைதரித்து சந்நியாசிக் கோலங்கொண்டு செல்வதே உத்தமம். யாரங்கே? (உற்றுநோக்கி) ரகுநாத்!

ரகு.—மகாராஜ்.

சிவாஜி.—அசுவம் எங்கே? யான் பரதேசிக்கோலங் கொண்டு ஊர்போய்ச் சேருகிறேன். என்னுடன் சாம்பாஜி வருதல் நன்மையல்ல. நீ அவனை வெகு ஜாக்கிரதையாக அழைத்துவா. யான் போகிறேன். உஷார்! யாராகிலும் வந்து உளவறியக்கூடும். காரிய மனைத்தும் சிதறிப்போகும். சர்வ ஜாக்கிரதையுடன் காரியத்தை நிறைவேற்று. எனக்கு விடைகொடு.

ரகு.—அப்படியே, பிரபு! (சிவாஜி ஒருபுறமாகவும், ரகுநாதர் மற்றொரு பக்கமாகவும் நிஷ்கிரமித்தல்.)

(காட்சி முடிவு)

மூன்றாம் அங்கம்—மூன்றாம் காட்சி

இடம்.—மகாராஷ்டிர இராஜதானி. சிவாஜியின் அரண்மனை.

காலம்.—காலை.

பாத்திரங்கள், ஜீஜா, ஸஹீபாய், ராமதாசர், சிவாஜி, சாம்பாஜீ, ரகுநாதர், சேவகன் முதலாயினோர்.

(ஜீஜா, ஸஹீபாய் சோகத்துடன் இருத்தல்.)

ஸஹீ.—என் உயிர்க்காதல! மகாராஷ்டிர குல திலக!! அந்நாளில் அழற்கடவுள் சான்றாக, மங்கல நாண் பூட்டி என்னைக் கைப்பற்றிய காலத்து, இனி எந்நாளும் பிரியேன் என்று இசைத்தனையே; அவ்வாய்மையை மறந்து என்னைத் தனியேயிருந்து தவிக்கவிட்டேகல் முறையோ? என் கணவா! என் செய்வேன்! அந்தோ!

ஜீஜா.—மகனே! நம்பினோரை நட்டாற்றிற் கைவிடுவார்போல் எம்மை இவ்வயதில் தன்னந்தனியே தவிக்கவிட்டாயே. ஆதரவற்ற யாங்கள் எவரைத் துணைகொண்டு உயிர்வாழ்வோம், மைந்தா!

(மூர்ச்சித்தல்)

ஸஹீ.—என் வலத்தோளும் வலக்கண்ணும் அப்பொழுதே துடித்தனவே. கேடு வருவதற்குமுன், மதி

கெட்டுவேருவதுபோ லாயிற்றே. ஆண்களுக்கு வலப்புரமும் பெண்களுக்கு இடப்பக்கமும் துடிக்கின் நன்மை பயக்கும் என்பார்கள். ஐயோ விதியே! கற்புடைய மகளிர்க்குக் கணவனையன்றி உயிர் வேறுள்ளதோ? என் உயிர்த் துணைவர் என்னாயினரோ! என் அரும் செல்வ மகன் என்னாயினனே! அச்சோ! ஹா!

(மூர்ச்சித்தல்)

(இராமதாஸர் பிரவேசித்தல்)

ராம.—ஈதென்ன கோலம்? சிவாஜியைப் பிரிந்த துயரத்தால் உடல் மெலிந்து, உள்ள நெக்குருகிக் கண்ணீர் வார அழுது வருந்தி மூர்ச்சியாயினர் போலும். வாழ்வாவது மாயம்; அது மாறுவது திண்ணம். ஏ! ஜீஜா! ஸஹீ!

(அவர்கள் திடுக்கென எழுந்திருத்தல்)

ஸஹீ.—ஜீஜா! குருஸ்வாமி நமஸ்காரம். எங்கள் தலையில் இடிவிழுந்தது. யாங்கள் இன்றுடன் அற்றோம்.

ராம.—விசனமுறுதீர்கள். உயிர்கள் செய்யும் நல்வினைகளுக் கேற்ற பயனைக் காலமறிந்து ஊட்டுதல் கடவுளன்றோ. செய்தவினை யிருப்பத் தெய்வத்தை நொந்தால் ஆவதென்னே? வென்றவருளரோ மேலை விதியினை?

ஸஹீ.—'தீவினை யாம் பலசெய்யத்தீர்விலா, வீவிலை முறைமுறை விளைவ மெய்ம்மையா, நீயிவை துடைத்து நின்றளிக்க நேர்ந்ததால், ஆயினுமன்பினால் யான செய் மாதவம்'

"குருஸ்வாமி! கடும்பசியால் வருந்துவோனுக்கு பாயசம் அகப்பட்டதுபோலவும், அலைகடலில் தத்தளிக்கும் ஒருவனுக்கு நாவாய் அகப்பட்டதுபோலவும், கண்ணுழையாக் காட்டில் திக்குத் திசைதெரியாமல் தியங்கு மொருவனுக்கு வழியகப்பட்டது போலவும் நீங்கள் எங்களின் ஆராத் துயரை யொழிக்கச் சமய சஞ்சீவியாய் வரலானீர். ஸ்வாமி எங்கள் துயரம் நீங்கும் காலமு முளதோ?

ராம.—ஸஹீ! பயப்படாதே. உன் காதலருக்கு ஒரு தீங்கும் உண்டாகாது. சீக்கிரமே அவர் வருவார்.

ஸஹீ.—குருஸ்வாமி! என் கணவர் வருவாரா? (நமஸ்கரித்தல்.)

ராம.—உனக்கு ஒருகுறையு முண்டாகாது. நல்ல பாக்கியசாலியாய்ப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாய். என்ன சத்தங்கேட்கிறது? (அம்மணீ! அம்மணீ!!) யாரோ கூப்பிடுகின்றனர்.

(சேவகன் பிரவேசம்.)

சேவ.—அம்மணீ! நம் மகாராஜா வருகிறார். கோட்டையைக் கடந்துவிட்டார். இன்னும் சற்று நேரத்தில் இங்கு வருவார்.

ஸஹீ.—(வெகு சந்தோஷத்துடன்) சேவகா! என் காதலரா! நற்செய்தி கொண்டுவந்ததற்குப் பரிசாக இதை வைத்துக்கொள் (ஆரத்தைகொடுக்கல்) தாயே! தாயே! உமது மகன் வருகிறாராம். குருஸ்வாமி! எல்லாம் தங்கள் ஆசீர்வாதமே.

(சிவாஜியின் பிரவேசம்)

ஆ. நாதா! (கிட்ட நெருங்கித் தழுவுதல்)

சிவாஜி.—குருஸ்வாமி! நமஸ்காரம் (வணங்குதல்) இவர்கள் என்னவாயினர்?

ராம.—சிவாஜி! 'இழந்தமணி புற்றரவெதிர்ந்த தெனலானாள், டழந்தன மிழந்தன படைத்தவரை யெரித்தாள், குழந்தையை யுயிர்த்த மலடிக்குவமை கொண்டாள், உழந்து விழிபெற்ற தொருயிர்ப் பொறையுமொத்தாள்.

(ஜீஜாவைப்பார்த்து) ஜீஜா! இதோ உன் மைந்தன்! இனியாகிலும் துயரொழிக. இனிச் சோகமற்றிரு. (சிவாஜியைப்பார்த்து) சிவாஜி! இனி உனக்கு இவ்வுலகில் துன்பம் விளைவிப்பவர் ஒருவருமில்லை. உனக்கு இடர் விளைவித்தவர் 'தன்வினைத் தன்னைச் சுடும்' என்றாவர்.

ஜீஜா.—மைந்தா—சாம்பாஜீ எங்கே?

சிவா.—என்னுடன் வரவேண்டாமென்று கூறினேன். ரகுநாதர் அழைத்துவருகிறார். வருங்காலமுமாயிற்று.

ஜீஜா.—பிள்ளாய்! பால்மணம் மாறாச் சிறுவனை இப்படியும் விட்டுவரலாமா? அவனுக்கு ஏதாகிலும் இடுக்கண் விளைந்தால்-

சிவா.—ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

(சேவகன் வருகிறான்)

சே.—மகாராஜா! சின்னராஜாவும் சுபேதாருமா வாராங்க.

எல்.—ஆநந்தம். தலைக்கு வந்தது குல்லாயுடன் போயிற்று.

(சாம்பாஜீயும் ரகுநாதரும் பிரவேசித்தல்)

சாம்.—தந்தாய்! இதோ வந்தேன். அன்னையாரிருவரும் ஏன் வாட்டத்துடன் இருக்கிறார்கள்? குருஸ்வாமி! (நமஸ்கரித்தல்).

ராம.—அப்பா சாம்பாஜீ! அன்னையாரிருவரும் உன்னைப்பற்றியே விசாரங்கொண்டனர். நீயும் வந்தனை. விசாரமு மொழிந்தது.

சாம்.—என்னைப்பற்றியா—நன்று, நன்று. அதோ பிங்களரும் வருகிறார்.

(பிங்களர்-ஆத்ரேயர் முதலாயினோர் பிரவேசம்)

ராம.—பிங்களரே! எல்லாம் சுகமே முடிந்தது. சிவாஜிக்கு க்ஷத்திரிய தர்மத்தை முன்னிட்டு, சம்பிரதாய வழியையும்பற்றி பட்டாபிஷேகம் செய்யவேண்டும். உங்கள் அபிப்பிராயம் என்ன?

பிங்:—குருஸ்வாமி! அதற்குத் தடைசொல்வாருமுண்டோ. இனித் தாமதிக்கவொண்ணாது. நாளையே செய்யவேண்டும்.

ஆத்.—பட்டாபிஷேக மகோற்சவம் இம்மைக்கும் மறுமைக்கும் பயனைக்கொடுப்பதன்றோ குருஸ்வாமி!

தினற்பொருட்டார் கொல்லா துலகெனின் யாரும் விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

ராம.—நண்பர்களே! நாளைய பட்டாபிஷேக மகோற்சவத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய யான் செல்கிறேன். காசிக்ஷேத்திரத்திலிருந்து கங்கா பட்டர் என்னும் புரோகிதர் ஒருவர் பஞ்சவடிக்கு வந்திருக்கிறார். அவரைச் சீககிரம் அழைத்துவரச் சொல்லுங்கள். சிற்றரசர் முதலாயினோருக்கு இன்றே ஓலை விடுங்கள். நல்லது, யான்போகிறேன். (நிஷ்கிரமித்தல்)

சிவா.—பிங்களரே! மொகலாயர்களுக்கும் நமக்குமுண்டான உடன்படிக்கை இனிச் செல்லாது. நாம் அவர்களுக்குக் கொடுத்த துர்க்கங்களைக் கைவசப்படுத்த இப்பொழுதே நல்ல வீரர்களை யனுப்பும்.

வா! சாம்பாஜி நாம் செல்வோம்.

(பிங்களர் ஆத்ரேயர் நீங்கலாக அனைவரும் நிஷ்கிரமித்தல்)

ஆத்.—பிங்களரே! பஞ்சவடிக்கு யாரை யனுப்புவது?

பிங்.—நீரே செல்லல்வேண்டும். ஊர்முழுவதும் நாளைக்குப் பட்டாபிஷேகமென்று பறைசாற்றுவிக்க வேண்டும்.

ஆத்.—பிங்களரே! யானே செல்கிறேன். இங்கு நடக்கவேண்டிய காரியங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள். (நிஷ்கிரமித்தல்)

பிங்.—புரந்தரன்கோட்டை, ஜாவலி, சாக்கன் துர்க்கம் இவைகளைக் கைவசப்படுத்த வீரர்களை யனுப்பச் சொன்னார். நல்லது. யஸோஜியை யனுப்புவோம். அவனே தக்கவன். இனிக் காலதாமதஞ் செய்யொணாது. யாம் செல்வோம். (நிஷ்கிரமித்தல்)

(காட்சி முடிவு)

லோகநாதன்

துப்பறியும் ஓர் இனிய நாவல்

AN INTERESTING DETECTIVE NOVEL

பதின்மூன்றாம் அத்தியாயம்

மலையாள பகவதி

அன்றிரவு நுங்கம்பாக்கத்தில் சுந்தரிவிலாஸத்தில் இரவு ஒன்பதுமணிக்குக் காவற்காரன் வாசற்கதவைப் பாதி சாத்தி வைத்துக்கொண்டு வெகு மும்முரமாய்க் காவல்காத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் முன் ஒருவன் தோன்றினான். வந்தவனுக்கு முன்குடுமி; மேலே அங்கி யொன்றுமில்லை; ஒரு நேரியல் வேஷ்டியால் அவயவங்களைப் போர்த்துக்கொண்டிருந்தான்; அறையில் ஒரு மலையாளிபோல் ஒத்தைச்சுற்றாக நாலுமுழ மல் கட்டிக்கொண்டிருந்தான்; கௌபீனத்தின் வால் கொஞ்சம் நீட்டியிருந்தது. பாதரக்ஷைமீது நடந்துவந்தான்.

காவற்காரனிடம் வந்து "இவடே, ஸுந்தரி விலாஸமுண்டோ?" என்றான். "இதுதான்" என்று காவற்காரன் பதிற் சொல்லுமுன்னர், "அமிர்தம்ன பொம்ளையே விளிக்கணும். முக்கியமான சமாசாரம்" என்றான். காவற்காரன் போய் அமிருதத்தனிடஞ் சொல்லி அழைத்து வந்தான். "என்னடா அன்னிக்கு ஒரு நாடோடிப் பயல் வந்து நம்பளை வெறட்டினான். இன்னிக்கொரு மலையாளி நம்பளைப் பார்த்து முழிக்கிறான். புஷ்பவல்லி என் இந்த வூட்டுக்கு வந்தா! எழவெல்லாம் அவளாலேதான். நான் சிவனேனு கிடப்பேன்" என்று சொல்லிக்கொண்டே அவள் மலையாளியுடன் போனாள்; "என்னவிசேஷம்?" என்று அவள் கேட்டாள்.

"ஞான் பகவதி உபாஸகன். அறியுமோ? திருவல்லிக்கேணியிலே வீரராகவ முதலித் தெருவோடே நடக்கு. அவடே ஒருஇல்லத்திலே மூர்த்தியுண்டோன்னு ஸம்சயிச்சு. அறியுமோ? ஞான் உடம்பு குளிச்சு. மந்திரம் ஜபிச்சு. பகவதி பிரஸன்னமாயு. மூர்த்தியுண்டுன்னு நிச்சயிச்சு. ஞான் அவடே இல்லத்திலே யார் வஷிச்சுன்னு ஸம்ஸாரிச்சு. அப்போ ஒரு நாடோடி, எந்த சோதா சோம்பேரி சுப்பராயனோ என்னோ நாமதேயம், என்னை இவடே அமிர்தமுண்டெனினு பரஞ்சு அவளை ஸம்ஸாரிக்கணம்ன்ன பரஞ்ஞு. ஞான் இவடே வரு. இப்போ பகவதி பிரஸன்னம். எந்த, அர்த்த ராத்திரியிலே ஜபிச்சாக்கே எந்த மூர்த்தியும் எரிஞ்சுடும். பகவதி முன்னே எந்த மூர்த்தி நிக்கும்? இப்போ போனக்கே ஞான் மூர்த்தியை ஒழிச்சூடும் மணி ஒம்பதாயு. இப்பவே போகணம். இப்பவே நீ வரணம் ஞானும் கூடவரும். அவடேபோய் ஓரிடம் சொல்லும். அவடே அர்த்த ராத்திரியிலே ஒரு முகூர்த்த காலம் ஜபிச்சு அந்த மூர்த்தியே அடியோடே

எரிச்சுடும். மன்ஷிலே கேரியோ? ஞான் நாளைத் தங்காது. இந்த பரோபகாரமில்லாட்டாக்கே என் தபஸ் வியர்த்தமில்லையோ? எந்த, கூடவரணுமே?"

"நான் போய் உத்தரவு வாங்கிக்கிட்டு வரேன்' என்று சொல்லி விட்டு அமிர்தம் போய் பத்து நிமிஷங்களில் திரும்பிவந்தாள். மலையாள மந்திரவாதி காத்திருந்தான். இருவரும் ஆயிரவிளக்கு வரை நடந்து சென்று, அங்கிருந்து ஒரு வண்டி பிடித்துக்கொண்டு வீரராகவ முதலித்தெரு 415 நெம்பர் வீட்டையடைந்தார்கள். அமிர்தம் கதவைத் தட்டினுள். மரகதாச்சி கதவைத் திறந்ததும், எல்லோரும் உள்ளே சென்றனர்.

"இவடே, குட்டிச்சாத்தான் செய்யும் விஷமங்களென்னே. ஞான் ஸம்ஸாரிக்கிறேன்னு தோஷப்படக்கூடாது. ஞான் அறியணும். இவடே எல்லாம் பார்க்கணும்."

அதற்குள் அமிர்தம் மரகதாச்சியிடம் மந்திரவாதியின் விசேஷ சக்தியைப்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தாள். தெருவோடு நடந்து போய்க்கொண் டிருக்கும்பொழுதே எப்படி ஏவலிருக்கிறது தெரியுமென்று எல்லோரு மாச்சரியப்பட்டார்கள். இதற்குள் மந்திரவாதி முழுதுஞ் சுற்றிப் பார்த்துவிட்டு "குட்டிச்சாத்தான் ஒளிந்து மறையு. ஞான் ஜபிச்சு சக்தியினுலே அவனைக்கட்டி இழுக்கும். அப்புறம் எரிக்கும். எந்தா சேஷ்டை எல்லாம் செஞ்சு?"

மரகதாச்சி பதில் சொன்னுள். "என் கிளி போன்ற பெண்ணை ஓரிடத்திலே குடுத்தேன். அவாநாசமாய்ப் போக! என்பெண்ணை யறுத்துப்போகும்படி பண்ணிப்புட்டா.எனக்குமாத்திரஞ் சந்தேகமிருக்கு. நீங்களுமுறுதி பண்ணுடுங்க. நான் உசிறு வெச்சிருக்கிறவரையிலே அவள் ஆம்படையானேடு வாழ்வதைப் பார்த்து விடுகிறேன். ஏவலா வெக்கணும்? என் ஆம்படையான் நீரழவு வந்து செத்தான். என் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கிறேன்னு நாலுநாளைக்கு முன்னே பாலய்யா வந்தான்...."

"இவடெயா வந்தான்?"

"ஆமாம் பாலய்யாவும் சுப்பய்யாவும் வந்தார்கள். தக்கொலை பண்ணிக்கிட்டானே அதுக்கு முதநாளைக்கு முதநாள் சாயங்காலம். எம்பெண்ணைக் கண்டு மயங்கிட்டான். அவளைக் கல்லியாணம் பண்ணிக்கிறேன்னன். தற்கொலை பண்ணிக்கிற அன்னிக்கு மூணு மணிக்கு இங்கே வந்தூட்டு ராத்திரி இங்கேயேஇருக்கிறதாய்ச் சொல்லிவிட்டுப் போனனே. இரண்டு மணிக்கே தக்கொலை பண்ணிக்கிட்டான். போதாத்துக்கு அது தக்கொலை இல்லையாம். துப்பறிவானே - அவன் மகாலிங்கம் - அவன் சாக்ஷி சொல்லியிருக்காரும். தக்கொலை இல்லை. பூட்டின பெட்டியிலேயிருந்து துப்பாக்கிதானகவே வெளியில்வந்து அவனைச் சுட்டுப்புட்டுதாம். இது ஏவலில்லாத வேறென்ன? எம் பொண்ணைக் கல்லியாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லாதிருந்தான்னு சாவமாட்டான்!"

"சத்தியம். அது குட்டிச்சாத்தான். எரித்துப்புடும், ஞான் ஜபிக்கணும், மாடியிலே போய்க் கதவைச் சாத்திக்கும், ஒரு முகூர்த்த நேரத்துக்கெல்லாம் கீழேவரும். வந்ததும் பேசாது. நேரே ருத்திரபூமிக்குப் போய் புரண்டு குளிச்சு ஜபிக்கணும். காலையிலே வரும். பத்து ரூபாய் பெற்றுப் போகும்" என்று மாடியேறிப்போய் கதவைச் சாத்திக்கொண்டான்.

சுமார் இரண்டு மணிக்குமேல் மந்திரவாதி கீழே இறங்கினுன். அவன் முகம் பால்போல் தெளிந்திருந்தது. வயிறு மாத்திரம் உப்பியிருந்தது. எல்லோரும் விழித்தார்கள். கையில் கொஞ்சம்சாம்பல்வைத்திருந்தான். வாயையே திறக்காமல் பாதரக்ஷையைப் போட்டுக்கொண்டு வெளியே போய்விட்டான்.

ஒருமணிநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு புஷ்பவல்லிதான் ஏவல்வைத்திருப்பாளென்று முடிவுசெய்துகொண்டதும், அமிர்தம் நுங்கம்பாக்கத்துக்குக் காலையில் போகலாமென்று தீர்மானஞ்செய்துகொண்டு படுத்துத் தூங்கிவிட்டாள். மரகதாச்சியும் கவலை களைந்தவளாய்த் தூங்கிவிட்டாள். பூங்காவனத்துக்குமட்டில் தூக்கம்பிடிக்கவில்லை. எழுந்திருந்து ஒருவிளக்கை எடுத்துக்கொண்டு மாடிக்கேறினுள். சென்றதும், அவளடைந்த ஆச்சரியத்துக்கு அளவேயில்லை. மாடியில் சுவரோடு சுவராய் கதவில்லாமல் இரகசிய விசைபால் திறக்கும் அறையொன்றிருந்தது. மந்திரவாதி அவ்விசையைக் கண்டுபிடித்து அறையைத் திறந்துவிட்டான். மூடக்கூடவில்லை. திறந்தபடியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டான். அறையிலிருந்த ஒரு அழுக்

கடைந்த சட்டையும் ஒரு வேஷ்டியும் பெரிய தலைப்பாகை கட்டக்கூடிய துப்பட்டியையுங் காணோம். "இது பெரிய மந்திரமாயிருக்கிறதே, நல்லது நாம் ஏமாந்து விட்டோம். காலையில் பணத்துக்கு மந்திரவாதி வருவான், பார்த்துக் கொள்ளுவோம்" என்று தீர்மானித்துக்கொண்டு அறையை மூடிவிட்டு மாடியையும் அடைத்துவிட்டுக் கீழேவந்து எப்பொழுது மந்திரவாதி வருவானென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். பொழுது விடிந்ததும், அமிர்தம் போய்விட்டாள். ஆனால் பத்துமணிவரை காத்திருந்தும் மந்திரவாதியைக் காணவில்லை. அவர் அமிருதத்தினிடம் சொன்னபடி அன்று காலையிலேயே சென்னையைவிட்டுப் புறப்பட்டாரோ தெரியவில்லை. இருந்தாலும் பூங்காவனத்துக்கு பொறுக்கமுடியவில்லை. ஆனால் நாம் பொறுமையுட னிருக்கலாமல்லவா?

பதினான்காம் அத்தியாயம்
குற்றவாளி

பூங்காவனத்தின்வீட்டிலுள்ள குட்டிச்சாத்தான் எரிக்கப்பட்ட தினத்துக்கு மறுநாள் ஒன்பதுமணிக்கு சுப்பய்யாவுக்கு ஒருகடிதம் வந்தது. ஊருமில்லை, தேதியுமில்லை, கையொப்பமுமில்லை. அதிற்கண்ட விஷயங்களை வாசித்ததும் சுப்பய்யாவின்முகம் நன்ருய்க்கறுத்துவிட்டது. "இருந்தாலும் யார்விட்டது?" என்று தன்னுள்ளேயே சொல்லிக்கொண்டிருந்தான். மறுபடியும் கடிதத்தைப் படித்தான். முகம் சுண்டிவிட்டது. இதைப் படிப்போர், கடிதத்தில் என்ன எழுதியிருந்தது என்றுஅறிய ஆவலாயிருப்பார்களாதலால், தாமதமின்றிக் கடிதத்தை அப்படியே கீழே வரைவோம்.

அன்புள்ள சுப்பய்யா,

உன்னுடைய நன்மையைக் கோருகின்றபடியால் உனக்குக் கடிதமெழுதுகிறேன். நீ எச்சரிக்கையா யிருக்கவேண்டும். இந்தக் கடிதத்தைநீ பார்த்தநாளைக்கு மறுநாள் உன்வீட்டைப் போலீஸார் தேடப்போகிருர்கள். சில போர்ஜரி நோட்டுக்கள் பாலய்யாவிடமிருந்து வெளியே பரவியதாய் ருஜுவாயிருக்கிறது. பாலய்யா இறந்துவிட்டார். ஆகையால் அவர் நண்பனுகிய உன்மேலும் சந்தேகமேற்பட்டுவிட்டது. நாளை இரவுக்குமுன் போலீஸார் சோதனை செய்து விடும்பக்ஷத்தில் நீ துரதிருஷ்டசாலி. இல்லையேல், எல்லாவற்றையும் மறைத்துவிட்டு எச்சரிக்கையாயிரு. நல்ல புத்திசாலிக்கு ஒருவார்த்தை போதுமல்லவா?

இப்படிக்கு,
உன் நண்பன்.

அதேசமயத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பண்ணுவுக்கும் ஒருகடிதம் வந்தது. அதற்கும் தேதி இல்லை, ஊரில்லை, கையொப்பமுமில்லை.

அன்புள்ள இன்ஸ்பெக்டரவர்களுக்கு,

பக்காத்திருடன் சென்னையில் சுற்றித்திரியும் பொழுது தாங்கள் சும்மாவிருத்தல் பிழையாகும். அவன் கொலைநடந்தவீட்டில், அல்ல நான் எழுதியது பிழை, பாலய்யாவீட்டில் கொள்ளையடிக்க முயலுகிருன். தங்கள் கான்ஸ்டேபிள்களுக்கெல்லாந் தெரியும். வேண்டுமென்ருல் தாங்கள் அவர்களைக் கேட்கலாம். இரண்டு நாட்களுக்குமுன் பாலய்யாவின்பிசாசைக் கண்டார்கள். அந்த விஷயம் தங்கள் காதில் பட்டதும் எவனோ ஒருவன் தங்கள் காவலைக்கடந்து உள்ளேசெல்ல முயலுகிருனென அறியவில்லையா? இன்னும் தங்களுக்கு மாசிலாமணிபிள்ளை வீட்டில் திருடிய பாதகனை-புஷ்பவல்லியைத் தூக்கிச்சென்ற பாதகனை - தப்புநோட்டு போர்ஜரி செய்யும்பாதகனை - காணவேண்டுமென்ற அவா இருக்கும் பக்ஷத்தில், இக்கடிதங்கண்ட அன்றிரவே பாலய்யாவீட்டுத் தோட்டத்தில் பதினைந்து கான்ஸ்டேபிள்களுடன் சந்தடியற்று மறைந்திருந்தால் கட்டாயமாய்ப் பாதகனைக் கண்டுவிடலாம். உடனே உண்மை எல்லாம் புலப்படும்.

இப்படிக்கு,
நியாய விசுவாஸன்.

இன்ஸ்பெக்டருக்கு இக்கடிதத்தில் நம்பிக்கையே இல்லை. இரண்டு நாட்களுக்குமுன் பாலய்யாவீட்டில் காவலாயிருந்த கான்ஸ்டேபிள்களை வரவழைத்து விசாரித்தார். அவர்கள் வெருட்டப்பட்டதும், விசாரணையன்று பாலய்யாவின் பிசாசைக்கண்ட உண்மையை ஒப்புக்கொண்டார்கள். உடனே இன்ஸ்பெக்டர் அன்றிரவு தானே போய்க் காவலாயிருப்பதாயும் பதினைந்து கான்ஸ்டேபிள்கள் கூட நிற்க வேண்டுமென்றும் உத்தரவுசெய்தார்.

பாலய்யா வீட்டுப் பின்பக்கத் தோட்டத்தில் இரவு பதினொருமணிக்கு சந்தடியற்று இருந்தது. எல்லோரும் அயர்ந்து தூங்கினார்கள் போலும்! அப்பொழுது ஓர் நிழல் நள்ளிருட்டில் பதுங்கிக்கொண்டே வந்தது. திரும்பித் திரும்பிப்பார்த்தது. தோட்டத்திலோரிடத்தில் கையாலேயே தோண்டி மண்ணை வாரி வாரி எடுத்துக் கொண்டிருந்தது. ஒருமணிநேர மெடுத்தபிறகு ஒரு பெட்டி தோன்றியது. அதைத்திறந்து தன் கையிற்கொண்டுவந்தபெட்டியை உள்ளேவைத்தது. இரவில்வேலைசெய்துகொண்டிருந்த நிழல் சுற்று முற்றும் பார்த்துவிட்டு பையிலிருந்து ஒரு கண்ணாடியை எடுத்துக் கையில்வைத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தது. "இதுவென்ன அநியாயம்! அடே நீ செத்துவிட்டாயடா. இங்கெங்கடா வந்தாய்?" என்று திடீரென்று கத்தியது. அப்பொழுது கிணீர் என்ற சப்தத்தில் விடை கிளம்பியது: "என்னைக் கொன்ற பாதகா! உன்னை நான் தப்பிக்க விடுவேனா? சுப்பய்யா! உன்னை நான் சும்மா விடமாட்டேன். அடே! தீவட்டி சுப்பய்யா! என்னை நீ கொன்றுவிட்டாய். உன்னை நான் சும்மா விடமாட்டேன். என்னைக்கொன்ற கருவிகளை மறைக்காதே. ஏனெனில், என்னுருவம் உன் விழிப்பிலும் உறக்கத்திலும் உன்னை விடாது. நான் நிச்சயம் வஞ்சந்தீர்த்துக் கொள்வேன்."

சப்தங்கேட்டதும், சுப்பய்யா தனக்கு நிழலேபோல் பதுங்கிக்கிடந்தசோமுவின்சப்தம்வந்த இடத்தை நோக்கினான். இடுப்புக்குக் கீழ் வெள்ளையாயும் முகம்மட்டில் பாலய்யா வுடையதாய்க் கொண்ட உருவத்தை நோக்கினான்; சந்தோஷத்துடன் எழுந்து நின்றுகொண்டான்.

சுப்பய்யா மூன்று நிமிஷங்கள் தியங்கினான். "அன்று போலீஸார்கூட இந்தப் பேயைப் பார்த்தார்கள். ஆனால் குரல் பாலய்யாவுடையது அல்ல. ஆகையால் இது பேயா யிருந்தாலும் அதைக் கொன்றுவிடுவேன். மனிதனானாலும் கொன்றுவிடுவேன்" என்று தன் மார்பில் ஒளித்துவைத்திருந்த ஈட்டியை எடுத்துக்கொண்டு, பேய் நின்ற பக்கம் பாய்ந்தான். அப்பொழுது பின்னாலிருந்து இரண்டு விஸ்லில்கள் கேட்டன. சுப்பய்யா திரும்பினான். ஓர் ஆள் நின்றான். புதருக்குப்புதர் மனிதராகிவிடுமென அச்சப்பட்டுக்கொண்டு நின்றான். இருபுதகஜத்துக்கப்பாலிருந்து கான்ஸ்டேபிள்களும் இன்ஸ்பெக்டரும் ஓடி வந்தனர். சுப்பய்யா அவர்களைப்பார்த்ததும் பேய்ப்பக்கம் திரும்பினான். பேயின் இரண்டுகைகளிலும் இரண்டு ரிவால்வர்கள் மின்னின. ஈட்டியை அப்படியே திருப்பிக்கொண்டு தன்னைக் குத்திக்கொள்ள யத்தனித்தான். ஒரு திடமான கை அவன் கையைப் பற்றியது. ஆனால் குத்தப்போன ஈட்டியைக் குத்தாமல் நிறுத்த முடியவில்லை. மார்புக்கு நேராய்வந்த ஈட்டி விலா எலும்புகளுக்கிடையே பாய்ந்துவிட்டது. அப்படியே சுப்பய்யா கீழே விழுந்துவிட்டான். ஆனால் மூர்ச்சையுமடையவில்லை, நினைவும் போகவில்லை. இன்ஸ்பெக்டர் முதலியோர் உடனே ஓடிவந்தார்கள். பேய் வடிவத்துடன் கையில் ரிவால்வர்களை வைத்துநின்ற மகாலிங்கத்தைக்கண்டு அஞ்சினார்கள். உடனே மகாலிங்கம் மேலிருந்த அங்கிகளைக் கழற்றிவிட்டுக் கிட்ட வந்தார். எல்லோரும் சுப்பய்யாவிடம் நெருங்கினார்கள். சுப்பய்யா உடனே, "நான் இனிப் பிழைத்திருத்தலாகாது. ஈட்டிமார்பில் பாயவில்லையே. விலாவில்தானே பாய்ந்திருக்கிறது" என்றான். இன்ஸ்பெக்டர் உடனே அவனை யணுகி, "ஏன் தற்கொலை செய்துகொண்டாய்?" என்று வினவினார்." "ஒன்றும் விசேஷமில்லை. நான் வெகு அற்புதமான விதங்களில் குற்றஞ்செய்தேன். அவைகளெல்லாங் கண்டுபிடிக்கப்பட்டன. நான் வெகு நிம்மதியுடன் இறப்பேன். நிச்சயமாய் நானிறப்பேனா?" என்று மகாலிங்கத்தைக்கேட்டான். மகாலிங்கம்உடனே "அதை டாக்டரைக் கேட்கவேண்டும். கான்ஸ்டேபிள்களே! இவனை அப்படியே வீட்டுக்குள் தூக்கிக்கொண்டுபோய்க் கீழே ஒருபடுக்கையில் கிடத்திவிட்டு சீக்கிரமாய் டாக்டரையும், இரண்டு வக்கீல்களையும் மாஜிஸ்ட்ரேட் அவர்களையும் டெலிபோனில் உடனே வரும்படி வேண்டிக்கொள்ளுங்கள். மூன்றுபேர்கள் இந்தத் திறந்த மரப்பெட்டியை அப்படியே தூக்கி உள்ளேசெல்ல எனக்கு உதவிபுரியுங்கள்" என்றார். சுப்பய்யா வீட்டுக்குள் தூக்கிச்செல்லப்பட்டான். மரப்பெட்டியுமுள்ளே வந்துவிட்டது. அரைமணி நேரத்துக்குள் எல்லோரும் வந்துவிட்டார்கள். டாக்டர்வந்ததும் "இன்னும் அரைமணிக்குள் நினைவு தவறிவிடும். அநேகமாய்ப் பிழைக்கமாட்டான்" என்றார். மாஜிஸ்

ட்ரேட் வந்ததும் அவர் கையில் கடிதாசும்அட்டையுங் கொண்டுகொடுத்தான் சோமு. அவர் பையிலிருந்து மூக்குக்கண்ணுடியை எடுத்து அணிந்துகொண்டு பவுண்டன் பேனுவை எடுத்து எழுத ஆயத்தமானுர். வக்கீல்களும் டாக்டரும் சும்மா வீற்றிருந்தனர். மகாலிங்கந்தான் பேசினுர். "சுப்பய்யா! இறக்குமுன்னர் உண்மையை உரைத்தால் அடுத்த பிறப்பில் கிரம்ப கஷ்டப்படமாட்டாய். உன்பேரில் குற்றத்தை ஸ்தாபிக்கத்தக்க துப்புகளெல்லாமிருக்கின்றன. நடந்ததை எல்லாம் சொல்லிவிடு" என்ருர்.

சுப்பய்யா கண்களிலிருந்து நீர் பெருகிற்று, பேச நாவும் உடனே துணிந்தது. "என் ஊர் மாங்குடி, தஞ்சைஇல்லை. வைத்திலிங்கம் பிள்ளையின் தம்பியின் பெண்வயிற்றுப் பேரனுகிய தீவட்டி சுப்பய்யா நானே, எப்படியாவது வைத்திலிங்கம் பிள்ளையின் சொத்துக்களை நான் அடைந்துவிட வேண்டு மென்ற எண்ணத்துடன் இரண்டு வருஷம் மூன்று மாதங்களுக்கு முன்பு, மாங்குடியை விட்டுப் புறப்பட்டேன். என் உரு மாறும்படி செய்துகொள்ள ஆறு மாதங்கள் பிடித்தன. அதுவரை தஞ்சையிலிருந்தேன். சென்னைக்கு வந்து பதினைந்து மாதங்களாயின. வந்ததும் புஷ்பவல்லிக்கு விரோதி பூங்காவனமாயிருக்கலாமென ஊகித்தேன். அவளையும் அவள் தாயையும் கண்டு பேசியதும் என் ஊகங்களெல்லாஞ் சரியெனத்தோன்றியது. ஆனுல் பூங்காவனத்தினிடத்தில் எனக்குக் காதல் பிறந்தது. அவள் சொற்களைத் தட்டுவது முடியாதகாரியமெனத் தோன்றிவிட்டது. என் நோக்கங்களை அவளிடம் சொல்லவே இல்லை. அச்சமயம் எனக்கு பணத்தட்டு ஏற்பட்டது. ஆனுல் பாலய்யாவின் ஸ்நேஹமும் கிடைத்தது. அவனுக்குப் பெண்களிடம் சபலபுத்தி. அதற்கு நான் ஈடுகொடுத்துக்கொண்டு வந்தேன். அவனுக்காகப் பெண்களைத்தேடி இணங்கச்செய்வதைத் தொழிலாக கைக்கொண்டேன். அவன் எனக்கு சாப்பாடும் போட்டுஉடையும்உதவினுன். திடீரென்று பூங்காவனம் லோகநாதன்மீது காதல்கொண்டிருந்தாளென்று அறிந்தேன். அவள் காதலைப்பெற நான் பணக்காரன் ஆகவேண்டுமென்று தோன்றிற்று. பாலய்யாவும் விலைமாதருக்கு அப்போதப்போது பணங்கொடுக்க ரொக்கமில்லாமல் கடன்வாங்கவேண்டி யிருந்தது. ஒன்பது மாதங்களுக்கு முன்புதான் நாங்களிருவரும் போர்ஜரி நோட்டுக்கள் போடுவதெனத் தீர்மானித்தோம். சாமக்கிரியைகளைச் சேகரிக்க இரண்டு மூன்று மாதங்கள் பிடித்தன. அகப்பட்டுக்கொண்டால் தப்பித்துக்கொள்ளத் துப்பாக்கி வேண்டுமென்றும் பாலய்யா லைஸன்சுக்கு பிரயத்தினஞ்செய்தால் கிடைக்குமென்றுஞ் சொன்னேன். பாலய்யா லைஸன்ஸ் பெற்று ஒரு ஆறுதோட்டா ரிவால்வரும் வாங்கினுன். அவன் தாயின் நகைகள் வைத்திருந்த பெட்டிக்குச் சரியான பூட்டில்லை. ஒரே மாதிரியாக இரண்டு ஆலிகார் பூட்டுக்கள் வாங்கினுன். இரண்டுசாவிகள் இரண்டு பூட்டுகளுக்கும் கம்பெனியில் கொடுத்தார்கள். அப்பொழுதவனுக்கு ஞாபகமில்லை. வீட்டுக்கு வந்ததும துப்பாக்கி எனக்குந் தேவையாகையால், உடனே எனக்கொரு சாவிகொடுத்தான். நகைப்பெட்டிச் சாவியைத தானே வைத்துக்கொண்டான். அறையைத் திறக்குஞ் சாவியும் என்னிட மொன்றுண்டு. மாசிலாமணி பிள்ளை என் வாயில் மண்ணைப் போட்டுவிட நிலங்களை விற்க எண்ணிவிட்டார். நான் கூடிய விதத்தில் அந்தச் சொத்தை அடையவேண்டுமென் றெண்ணினேன். இதற்குள்ளாக பூங்காவனத்துக்கு அமிருதத்தின்மூலமாய் லோகனுதனும் புஷ்பவலலியும் பரஸ்பரங் காதல்கொண்டிருந்தார்களென்ற விஷயம் தெரிந்துவிட்டது. உடனே அவள் என்னைக் கூப்பிட்டு எப்படியாவது புஷ்பவல்லியை அவள் அறைக்குக் கொண்டுவந்தால் லோகனுதனிடங் காதல்கொள்வதில்லை என்று ஒரு சத்தியம்வாங்கிக் கொண்டு அவளை விட்டுவிடலாமென்ருள். நான் அவளை எப்படியாவது தூக்கிவந்து விடுகிறேனென்றேன். நிலங்களை வாங்கவேண்டுமென்று பாலய்யாவைத் தூண்டினேன். பாங்கிக்கு நகைகள்போனுல் கெடுதியாய்விடும். பின்னுல் பாலய்யாவுடன் கோர்ட்டில் நிலங்களுக்கு வாதிக்கலாமோ வென்ருல் நானும் சாஸனத்தில ஒருசாக்ஷி போட்டுவிட்டேன். ஆகையால் அன்று இரவுக்குள் நகைகளையும் பணததையுந் திருடிவிடுவதெனத் தீர்மானிதது ஓர் கூர்மையான உளியை எடுத்துக்கொண்டு தயிர்க்காரன் வேஷங்கொண்டு அங்குசென்று மறைந்திருந்தேன். மூன்றுமணிககு எல்லோரும் வெளியே போய்விட்டார்கள். மேஜைப்பலகையை உடை

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை யற்றே தவத்திற் குரு.

த்து சாவியை எடுத்தேன். இரும்புப்பெட்டியைத் திறந்து நகைகளைக் களவாடிவிட்டேன். வெளியில் காவற்காரர்கள் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். கட்டையாயுபயோகப்பட்ட ஸலவைக்கல் உடைந்துவிட்டது. அதை ஜன்னல்வழியாகக் கீழே எறிந்துவிட்டேன் மக்கை வைத்துப் பலகையை ஒட்டித் தேய்த்துவிட்டேன். பிறகு எல்லாவற்றையும் இருந்தது போல் வைத்துவிட்டு சிறிய அறைக்குட்போய் கதவைத் தாழ்ப்பாளிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். பசி யதிகமாயிருந்ததால் காசம் மாதிரி இழுக்கவாரம்பித்தது: சுருட்டொன்றை எடுத்துக் கொளுத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். இரண்டுமணிநேரத்துக்குப் பிறகுதான் மாசிலாமணிபிள்ளையும் பாலய்யாவும் வந்தனர். சுமார் ஆறுமணிக்கு மொட்டை மாடியில் சந்தடியே இல்லை. கீழே இறங்கினேன். வாசற்கதவு திறந்திருந்தது. காவற்காரனுமில்லை. வெகுவேகமாய் வெளியே போய்விட்டேன். ஆயிரவிளக்கண்டையில் புஷ்பவல்லி தனியாய் நடந்துவந்தாள். பூங்காவனத்தின் விருப்பம் ஞாபகம் வந்தது. புஷ்பவல்லியினிடம் உடனே நெருங்கிப் பஞ்சப்பாட்டுப் பாடினேன். அவள் இரக்கங் கொண்டாள். என் பெண்டாட்டி பிள்ளைகளின் குறைகளை யெல்லாஞ் சொன்னேன். அப்பொழுது ஒரு குடைக்கூலி கோச் வந்தது. கோச்மானிடம், "மூன்றுரூபாய் கொடுக்கிறேன். நில்" என்றேன். சந்தடியே இல்லை. அப்படியே அவளைத்தூக்கி வண்டியில் போட்டுக்கொண்டு கண்களைக் கட்டிவிட்டேன். பூங்காவனத்தின் வீட்டில் இறக்கி அங்கு வெளிச்சமே இல்லாத ஓர் இருட்டறையில் அவளை அடைத்துவிட்டோம். பூங்காவனத்தினிடம் பெட்டியைக் கொடுத்தேன். ஸுந்தரீவிலாஸத்துச் சிறு அறையிலேயே பெட்டியைத்திறந்து அதற்குள் நோட்டுக்களைத் திணித்திருந்தேன். பூங்காவனமும் அவள் தாயும் நானும் உடனே சாப்பிட்டுவிட்டு, ஒரு வண்டியிலேறி நுங்கம்பாக்கம் அடைந்தோம். மரகதாச்சியும் நானும் வெளியே நின்றோம். பூங்காவனம் எட்டுமணிக்கு வீட்டுக்குட் சென்றாள். அன்றிரவு அவள்தான் புஷ்பவல்லியாய் நடித்தாள். சுமார் பன்னிரண்டுமணிக்கு சுற்றுச்சுவர்மேல் ஏறிக்குதித்து வெளியே வந்தாள். இந்த தைரியச்செயலகளைக் கண்ணுற்றதும், என்காதல பித்தமாய்விட்டது. உடனே மூவருமாய்த் திருவல்லிக்கேணிக்குச் சென்றோம். நான்மறுபடியும் தயிர்க்காரனுடையைத் தரித்துக்கொண்டுதான் புஷ்பவல்லியுடன் பேசுவது. அவள் கவலையே கொள்ளவில்லை. உயிரை வெறுத்திருந்தாள். நான் கேட்டபடி சத்தியஞ் செய்யமுடியாதென்று விட்டாள். நான் வெளியே வந்ததும், இது ஒருபாவமும் தெரியாத பாலய்யாவின் ஞாபகம் வந்தது. அவன் ஏதாவது போய்க் கெடுத்து விடப் போகிறானென்று அங்கு ஓடினேன். நான் எதிர்பார்த்தபடியே அவன் புஷ்பவல்லி ஞாபகமாகவே உட்கார்ந்திருந்தான். என்னையும் அங்கேவா வென்று இழுத்தான். அவன் மனத்திலிருந்து புஷ்பவல்லியை அகற்றவேண்டுமென்று தோன்றிற்று. எனக்கும் பூங்காவனத்தை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லை. அவனைத் திருவல்லிக்கேணிக்கழைத்துச் சென்றேன். என்ன காரியஞ்செய்தேன். பூங்காவனம் லோகநாதனையும் மறந்தாள், என்னையும் மறந்தாள். பாலய்யாவினிடம் காதல் கொண்டாள். மறுநாளுக்கு மறுநாள், அதாவது கொலை நடந்ததினம், மூன்று மணிக்கு இருவருஞ் சந்திப்பதென ஏற்பாடாய்விட்டது. பாலய்யாவை மறுநாட்காலையில் வெகுபாடு பட்டுத் திருப்பப்பார்த்தேன். ஒன்றும் முடியவில்லை. ஓரே பிடிவாதமா யிருந்தான். ஐயோ! தலைகிறுகிறுக்குகிறது! உடனே போர்ஜரிநோட்டுக்களைப் பிரசுரஞ்செய்யச் செங்கற்பட்டுக்குப் புறப்பட்டான். அப்படியே அரக்கோணமும் போவதாய்ச் சொன்னான். என்னையுங் கூப்பிட்டான். பூங்காவனத்தை இழந்துவிட வேண்டுமென்ற பைத்தியம் தலைக்கேறிவிட்டது. நான் மறுத்துவிட்டேன். அவன் மாத்திரம் சென்றான். பூங்காவனத்தை மாற்றிவிடலாமென அவளுக்கு என் காதலை முதல் முதல் தெரிவித்தேன். அவள் பாலய்யா கிடைப்பாரென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தாள்; என் காதலை மறுத்துவிட்டாள். பெட்டியை எப்பொழுது வேண்டுமென்றாலும் வாங்கிக் கொள்ளலாமென்று எழுதியிருந்தாள். அன்றிரவே நான் போய்ப் புஷ்பவல்லியை அவள் வீட்டில் விட்டுவிட வேண்டுமென்று எழுதியிருந்தாள். உடனே போய் புஷ்பவல்லியிடம் நடந்ததை ஒருவரிடமுஞ் சொல்லக்கூடாதென்ற சத்தியம் மாத்

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை யஃதிலார் மேற்கொள் வது.

திரம் வாங்கிக்கொண்டு காலை ஆறு மணிக்கு அவளை யொரு ஜட்காவில்வைத்து வண்டிக் காரனிடம் எட்டு மணிக்கு நுங்கம்பாக்கத்தில் ஸுந்தரீ விலாசத்தினருகில் விட்டுவிடும்படி ஏற்பாடு செய்தேன். அன்று சாயங்காலம் மூன்று மணிக்குள் பாலய்யா புறப்பட முடியாமல் செய்துவிடவேண்டுமென்று வெகுதூரம் ஆலோசனை செய்து அவனைக் கொன்றுவிட்டேன். சரியாய் இரண்டு மணிக்குத் துப்பாக்கிக் குண்டின் சப்தத்தையும் டெலிபோனில் கேட்டபிறகே கீழேவைத்தேன். பாலய்யா இறந்தான். நான் கொன்றேன்! பூங்காவனம்! நீ என்னுடையவள்தான். கிட்டேவா. உனக்காக நான் என்னென்னவோ செய்தேன். புஷ்பவல்லியைக் கொன்றிருப்பேனே. மறுபடியுமா கொண்டுபோய்விட்டேன். தண்ணீர் கொண்டா, நா உலறுகிறது. யாரடா பாலய்யா தற்கொலை செஞ்சுகிண்டான்னு சொல்றது? பூங்காவனத்தைத்தான் மணப்பேன். சொன்னதை நான் கேட்டுக்கொண்டிருந்து சும்மா வாயிருப்பேன்? அவனைக் கொன்றுவிட்டேன். துப்பாக்கி தானகவா சுட்டுது. மகாலிங்கம் புளுகிறான். இல்லே, நான் அல்லவா சுட்டேன். நான்தான் சுட்டேன்............உற்க.........'' இப்படியே பேச்சு நின்றுவிட்டது.

எல்லோரும் மகாலிங்கத்தின் முகத்தை நோக்கினர்.

“இவனா சுட்டான்? அல்லது துப்பாக்கி தானா?''

“பாலய்யாவைக் கொல்லவெண்ணியது சுப்பய்யாதான். கொலை நடந்த இடத்தில் ஆனால் சுப்பய்யா இல்லை. நாளை பன்னிரண்டு மணிக்கு எல்லோரும் மாடியறையில் கூடுவோம். இந்த விசித்திரமான கேசை முடிவுசெய்வோம். ஆனால், இன்ஸ்பெக்டர்வாள்! அதோ இருக்கிறது மாசிலாமணிபிள்ளை வீட்டு நகைப்பெட்டி. அதற்குள் பணமுமிருக்கிறது. அந்த மரப்பெட்டியில் நிரம்ப போர்ஜரி நோட்டுக்கள் இருக்கவேண்டும். கீழே என்ன பார்ப்போம்?'' என்றார். எல்லோரும் கீழே நோட்டுக்களை எல்லாமெடுத்துப் பார்த்தபொழுது போர்ஜரி செய்ய உதவியாகும் சாமக்கிரியைகளெல்லாமிருந்தன. பையிலிருந்து சுப்பய்யா ஒருவஸ்துவை யெடுத்துக் கையில் வைத்துக்கொண்டு அங்குமிங்கும் பார்த்தது ஞாபகமிருக்குமே, அதை மறுபடியும் பையிலேயே போட்டுகொண்டான் போலும்! மகாலிங்கம் அவன் பைகளில் கையைவிட்டுத் தேடினர். ஓர் சாதாரணக் கண்ணாடி பில்லையை எடுத்தார். அது ஒரு சைகிள் விளக்கின் முன்னிருக்கும் கண்ணாடி வில்லை. “அதெதற்கு?'' என்று மாஜிஸ்ட்ரேட் வினவினர். “அவனிடமிருந்துகிடைக்கும் ஓர் சாக்ஷியம்'' என்றார். “எதற்குச்சாக்ஷியம்?'' “அவனே செய்தான் என்பதற்கு.''

டாக்டரிடம் சுப்பய்யாவை ஒப்புவித்துவிட்டு, மறுநாள் அந்த வீட்டிலேயே பன்னிரண்டு மணிக்குச் சந்திப்பதெனத் தீர்மானஞ் செய்துகொண்டு, எல்லோரும் அவரவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

பதினைந்தாம் அத்தியாயம்

துப்பு விவரித்தல்

மறுநாள் பதினொன்றேமுக்கால் மணிக்கே எல்லோரும் கொலை நடந்த அறையில் கூடிவிட்டனர். சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு மாசிலாமணிபிள்ளையும் லோகநாதனும் மகாலிங்கமும் உள்ளே வந்தனர். சோமு முந்தியே வந்து பாலய்யாவினது துப்பாக்கியில் மருந்தடைத்துக் கொண்டிருந்தான்.

மகாலிங்கம் வந்ததும் மாஜிஸ்ட்ரேட்டினிடமிருந்து இரவில் சுப்பய்யாவின் பையிலிருந்தெடுத்த சைகிள் விளக்கின் கண்ணாடி வில்லையை வாங்கி, சாற்றியிருந்த ஜன்னலண்டையிற் சென்றார். கதவண்டையில் கதவோடு சேர்த்து வில்லையை வைத்துவிட்டு அறைக்குள்ளே எதையோ தேடினர். சற்றுநேரத்திற்கெல்லாம் கண்ணாடி வில்லையை நகர்த்தினர். பின்னர் சுவரின்பேரில் எல்லோரும் ஒரு கோழிமுட்டை வடிவமாய் பிரகாசமான வெளிச்சந் தங்குவதைக் கண்டனர். மகாலிங்கம் மெதுவாய் அந்த வில்லையை நகர்த்தியபடியே வெளிச்சத்தை அறைகொண்ட மரப்பெட்டிமீது தோன்றும்படிசெய்தார். பெட்டியின்மேற்பலகையின் மீது வெளிச்சம் வந்ததும், ஓரத்தில் படும்படியாய் வில்லையை நகர்த்தினர். பின்னர் கடிகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வெளிச்சத்தைப் பார்த்த வண்ணமே அரைமணி நேரம் நின்றார். பையிலிருந்து ஒரு நாடாவை எடுத்து எதையோ அளந்தார். பின்னர் மரப்பெட்டியின் மேற்பலகைமீது பென்சிலால் ஒரு குறி

செய்துகொண்டார். குறியின்மேல் துப்பாக்கியை வைத்தார். டெலிபோன் பக்கத்திலிருந்தவரை நகர்ந்து தூரத்தில் உட்காரும்படி சொல்லிவிட்டுத் துப்பாக்கியின் ஜன்னியக்குழாயை டெலிபோன் பக்கம் திருப்பிவிட்டார். துப்பாக்கி மரப்பெட்டியின் ஓரத்தில் இருந்தது. வெகு கவனத்துடன் பார்த்தால்தான் தெரியும். மகாலிங்கம் எல்லோரையும் வம்புக்கிழுத்தார். இன்ஸ்பெக்டர்தான் இணங்கினார். ஒன்றே முக்கால் மணிவரை பேசிக்கொண்டிருந்துவிட்டு கடிகாரத்தைப் பார்த்த வண்ணமே பத்து நிமிஷநேரம் நின்றார். திடீரென்று 'டப்' என்ற சப்தமுண்டாகியது. டெலிபோனில் காதில் வைத்துக்கொள்ளும் குழாய் கீழே விழுந்துவிட்டது. ஒரு குண்டு சுவரில் பட்டுக் கீழே விழுந்து கிடந்தது. துப்பாக்கியும் பெட்டிமேலிருந்து கீழே விழுந்துவிட்டது. எல்லோரும், "இதுவென்ன ஆச்சரியம்?" என்று எழுந்தார்கள். இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு மகாலிங்கம் துப்பாக்கியை எடுத்துக் காட்டினார். மருந்தறையும் குண்டறையும் காலியாயிருந்தன. மகாலிங்கம் உடனே எல்லோர் காதிலும் விழும்படி சொன்னார். "பாலய்யா அன்று தற்கொலை செய்து கொள்ளவில்லை. துப்பாக்கிப் பெட்டியைத் திறக்குந்திறவுகோலே அவரிடமில்லை. நகைப்பெட்டியின் திறவுகோலும் துப்பாக்கிப் பெட்டியின் திறவுகோலுமொன்றே. ஆதலால், நகைப்பெட்டித் திறவுகோலை மாசிலாமணிபிள்ளையினிடம் அவர் கொடுத்த பின் துப்பாக்கிப் பெட்டியை அவர் திறக்கவே முடியாது. பூங்காவனத்தின் வீட்டுக்குப் புறப்பட ஒன்றேமுக்கால் மணிக்கு சிங்காரித்துக் கொண்டார். இப்பொழுது நான் வைத்த மாதிரியே துப்பாக்கியை வெளியே எடுத்துச் சரியான இடத்தில் மரப்பெட்டியின்மீது வைத்திருந்த சுப்பய்யா டெலிபோனில் கூப்பிட்டான். போர்ஜரி நோட்டுக்களின் விஷயத்தைப் பற்றி பேசி யிருக்கலாம். அது வெகு இரகசியமான விஷயம். வண்டிக்காரனைக் கூப்பிடப் போன காவற்காரன் நடுவில் வந்துவிடக்கூடாதென்றே பாலய்யா கதவைச் சாத்திக்கொண்டார். சரியாய் இரண்டு மணிவரைப் பேசிக்கொண்டிருந்தார்கள். துப்பாக்கி சுட்டது. குண்டின் சப்தம் அவன் காதில் விழுந்த பிறகுதான் அவன் டெலிபோனின் குழாயைக் காஸ்மாபாலிடன் கிளப்பில் கீழே வைத்தான். இது விஷயத்தையே அவன் நேற்று ஒப்புக்கொண்டான். கொலையாளி சுப்பய்யாவே!" என்றார்.

"இந்த அறையிலிருந்த வில்லை அவனிடம் எப்படிப் போயிற்று?" என்று மாஜிஸ்ட்ரேட் கேட்டார்.

"டாக்டரும் இன்ஸ்பெக்டரும் வந்ததும் இதைப்பற்றி யோஜிக்கவே இல்லை. ஜன்னலில் வில்லையைக் காணவேண்டுமென்ற எண்ணமே அவருக்கில்லை. சுப்பய்யா வந்ததும் ஜன்னலண்டையிலேயே நின்றான். வைத்தவனாகையால் எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு விட்டான். சைகிள் விளக்கு இருக்கும் பக்ஷத்தில் கண்ணாடி எங்கே என்ற சந்தேகமுண்டாகுமாகையால் விளக்கே உடையும்படி ஏற்பாடு செய்துவிட்டான். உடைந்த விளக்கில் கண்ணாடித்தூள் ஒன்றுமே இல்லை என்பதுதான் நான் இது விஷயத்தில் கண்ட முதல் துப்பு" என்று சொல்லிக்கொண்டே அறையில் முறத்தின்மேல் சேகரித்துவைத்திருந்த சைகிள் விளக்கின் பின்னங்களைக் காட்டினார். அதில் கண்ணாடித் தூள்களில்லாததைக் கண்டு எல்லோரும் வியந்தனர். மாஜிஸ்ரேட், "உடனேயே, நீர் நகையைத்திருடினதும் புஷ்பவல்லியைக் கொண்டு போனதுமவனே, போர்ஜரியிற் கலந்ததுமவனே என்று கண்டுபிடித்துவிட்டீரா?" என்று கேட்டார்.

"ஆம், நிச்சயமாய்க் கண்டுபிடித்த பிறகுதான் இன்ஸ்பெக்டருக்கு கையெழுத்தில்லாத கடிதத்தை எழுதினேன். என் நண்பரென்றே நினைத்துச் சரியாய் எழுதியிருப்பேன். அன்று வாக்குமூலங் கொடுத்ததில் உண்மை சொன்னேனென்ற குற்றத்திற்காக போலீஸார் உதவியே கிடைக்காதென்றார்கள். உடனே நான் அவரையே ஏமாற்றிக்கொண்டு உண்மையை அறிய வேண்டியதாயிற்று. நான் கண்டுபிடித்த பிறகு அவனை இன்ஸ்பெக்டர் கையுங்களவுமாய்ச் சாக்ஷியங்களுடன் பிடிக்கவேண்டுமென அவருக்குக் கடிதமெழுதினேன்."

"இதெல்லாம் எப்படிக் கண்டுபிடித்தீர்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டேபுன்னகையுடன் கையை நீட்டினார். மகாலிங்கம் அவர் கையைப் பற்றிக்கொண்டு "எனக்கு எவரிடமும் பகைகிடையாது. நீர் எனக்கு எவ்வள

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு மெண்ணிற் றவத்தான் வரும்.

வோ உதவிபுரிந்திருக்கிறீர். ஆகையால் உமது வேண்டுகோளை நிறைவேற்றுகிறேன். நான் உண்மை கண்டுபிடித்த விதத்தை முழுதுஞ் சொல்லிவிடுகிறேன். எல்லோரும் கேளுங்கள்.”

“நான் மாசிலாமணி பிள்ளையின் வீட்டுக்குட் சென்றதும், புஷ்பவல்லி காணமற்போய் விட்டாளெனக் கேள்விப்பட்டேன். என்ன எண்ணத்துடன் கொண்டு போகப்பட்டாள் என்றறிவது முக்கியமல்லவா? கொஞ்சநேரத்திற்குள், எட்டுமணிக்குத் திரும்பி வந்தது புஷ்பவல்லியல்ல, வேறொரு பெண்ணென்று கண்டு கொண்டேன். பிளாட்டிங் பேபரில் லோகநாதன் என்று பச்சை மையில் எழுதப்பட்டிருந்தது. புஷ்பவல்லியின் கையெழுத்து கம்பராமாயணத்தி லிருந்தது. பச்சை மை அன்று மூன்றுமணிக்குத்தான் அறைக்கு வந்தது. புஷ்பவல்லி ஐந்தரைமணி வரை கடிதமெழுதிக் கொண்டிருந்தாள். அதைப் போஸ்டு செய்யத் தனியே வெளியே போனாள். அவள் திரும்பி வரவே இல்லை. அவள் நாலரை அடி உயரமுள்ள சிறு பெண். இரவில் வந்திருந்தவள் ஐந்தேகாலடியாவது உயரமிருந்தால்தான் சப்தஞ் செய்யாமல் ஜன்னலிலிருந்து கீழே குதிக்கமுடியும். ஆகையால் இரவில் வந்திருந்தது புஷ்பவல்லி இல்லை என்று நிச்சயமாகிவிட்டது. புஷ்பவல்லியைக் கொலைசெய்ய வேண்டுமென்ற எண்ணமில்லை. வந்தவளுக்கு லோகநாதன்மீது காதலுண்டென்று தோன்றியது. புஷ்பவல்லி இரண்டரை மணிநேரம் ஒரு கடிதமெழுதியதால் அவளிடம் ஒரு இரகசியமிருக்கவேண்டும். அமிர்தம்மை லோகநாதனுடையதென்றதும் புஷ்பவல்லி சிரித்தாளென்றாள். அது லோகநாதனிடம் அன்பை விளக்கியது. அவனுக்குக் கடிதமெழுத லோகநாதனின் மையே உபயோகப்பட்டால், அது வெகு அழகா இல்லையா? சிரித்திருப்பாள். ஆனால் வந்தவளுக்கு அந்த இரகசியந் தெரிந்திருக்க வேண்டும். அவளுக்கும் லோகநாதனிடம் காதலிருக்கிறது. புஷ்பவல்லியை அடைத்துவைத்து லோகநாதனைக் கலியாணஞ்செய்துகொள்ளாதபடி செய்வதுதான் நோக்கமென்று கண்டுகொண்டேன். காவற்காரன் அறையில் தயிர்க்கூடையைக் கண்டதும், தயிர்க்காரக்கன்னடியன் புஷ்பவல்லியைத் தூக்கிச் சென்றிருப்பான் என்று நினைத்துவிட்டேன்.

“மாடியில் சிறிய அறை, முதனாள் முழுவதுந் தாளிடப்பட்டிருந்ததென்றதனாலும் கொஞ்சம் சந்தேகமுண்டாயிற்று. அறைக்குள் இந்த சாம்பலைத் திரட்டி எடுத்தேன். இது சுருட்டுச் சாம்பல்; அது ஓர் உயர்ந்த சுருட்டு. இந்த அழுக்கடைந்த துணியை எடுத்து மோந்து பார்த்ததில் மக்கு நாற்றமடித்தது. பின்னர் தான் மேஜையில் துவாரஞ்செய்திருக்கலாமென்று தோன்றியது. மேஜையில் துவாரமிருக்குமிடத்தைக்கண்டு குத்தினதும், மக்கினால் ஒட்டப்பட்ட துண்டு அறைக்குள் விழுந்துவிட்டது. ஆனால் நான் இங்குவந்து திருடியவன் தயிர்க்காரன்தானென்று ஊகிக்கக்கூடவில்லை. ‘ஒரு பெரியமனிதன் திருடினான். வேலைசெய்ய சுமார் ஒருமணிநேரம் பிடித்திருக்கும். மூன்று மணியிலிருந்து ஐந்து மணிவரையில் வேலை செய்திருக்க வேண்டும்’ என ஊகித்துக்கொண்டேன்.

அன்று மத்தியானம் முழுதும் ஆலோசனை செய்ததில் புஷ்பவல்லியின் இரகசியத்தைப் பற்றி உறுதியான சமாசாரந்தெரியாதவரையில் எல்லாம் கற்பனையாகிவிடும் என்று தோன்றிற்று. உறுதியாய் உண்மையைச் சொல்லக்கூடியவள் லோகநாதனது தாயே. அன்று சாயங்காலம் நீலாயதாக்ஷியைக் கண்டேன். லோகநாதனும் புஷ்பவல்லியும் ஒருவர்மீது ஒருவர்காதல் கொண்டிருந்தனரென்றும் புஷ்பவல்லியின் இரகசியம் லோகநாதனுக்குத் தெரியாதென்றுஞ்சொன்னாள். புஷ்பவல்லியின் வரலாறு முழுவதுங்கேட்டேன். மாற்றாந்தாயும் அவள் பெண்ணும் உயிருடனிருக்கின்றனரென்றும், அவர்களின் கொடுமைக்கு அஞ்சியே புஷ்பவல்லியின் தந்தை அவளை மாசிலாமணி பிள்ளையிடம் ஒப்புவித்து இறந்ததாகவுஞ் சொன்னாள். நிலத்தை விற்பானேன் என்று கேட்டதற்கு வைத்திலிங்கம் பிள்ளைக்கு ஓர் அனந்தரவார்சு இருப்பதாயும் புஷ்பவல்லிக்குச் சொத்து நிலைப்பிக்கவேண்டியே நிலங்களை விற்றதாயும் அவள் சொன்னாள். அமிர்தம் என்னும் வேலைக்காரி சற்று வம்பில் பிரியமுள்ளவள். புஷ்பவல்லியின் மாற்றாந்தாயாகிய மரகதாச்சிவீட்டுப் பக்கத்தில் அவளுக்கும்வீடென்று அறிந்துகொண்டேன். உடனே மாங்குடி கிராமமுனிசீப்புக்கு, வைத்திலிங்கம் பிள்ளையின் அனந்தரவார்சின் வரலாற்றைப்பற்றி எல்லா சமாசாரமும் உட

னே எழுதும்படி ஒரு கார்டு எழுதினேன். மறுநாளுக்கு மறுநாள், அதாவது, கொலைநடந்த தினம் காலையில், இக்கடிதம் கிராமமுனிசீப்பிடமிருந்து வந்தது'' என சொல்லிக்கொண்டே பையிலிருந்து கிராம முனிசீப்பின் கடிதத்தை எடுத்து எல்லோருக்குங் காண்பித்தார்.

“இதற்குள்ளாகப் புஷ்பவல்லியைக் கண்டுபிடிக்கவேண்டி வெகு சிரமப்பட்டேன். ஜட்கா வண்டியில் தயிர்க்காரன் அவளைத் தூக்கிச்சென்றிருக்கமுடியாது. ஏனென்றால் பன்னிரண்டு வயதுப் பெண்ணைப் பட்டப்பகலில் கண்ணைக் கட்டித் தெருவோடு கொண்டுபோனால் அபாயம் நேரிடும். ஆகையால் அது கோச்சுவண்டியாக இருக்கவேண்டுமென ஊகித்துக்கொண்டு ஆயிரவிளக்கின் அருகிலிருந்த தச்சுவாடுகளிலெல்லாம் விசாரித்தேன். திருட்டுப்போன தினம்இரவு எட்டுமணிக்குத் திரும்பிவந்ததாய் ஒரு கோச்மேனைக் காட்டினார்கள். அவனைப் பின்பற்றியே கொஞ்சதூரம் அவனறியாமல் நடந்தேன். திடீரென்று சந்தடியே இல்லாத ஓரிடத்தில் அவன்முன்னே தோன்றி பயமுறுத்தினேன். ஒரு பெண்ணை வீட்டிலிருந்து தூக்கிச் சென்ற குற்றத்துக்கு உடந்தையாய் இருந்த குற்றத்துக்கு அவன் ஆளாகி விட்டான் என்றும், அவன் உண்மையைச் சொல்லாவிடில் அப்படியே போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றுவிடுவதாகவும் பயமுறுத்தினேன். உண்மையை ஒப்புக்கொண்டான். ஆனால் அது வெகுதூரம் உதவவில்லை. தயிர்க்காரனையும் பெண்ணையும் கடற்கரையில் இரவு ஏழு மணிக்கு போர்டாபீஸ் பக்கத்தில் விட்டதாகச் சொன்னான். மறுநாட்காலையில் எனக்கு வேறு விதமாய் யோசனை போய்விட்டது. திருடப்பட்ட நகைகள் விற்பனைக்கு வருமென்றெண்ணி தங்கசாலைத் தெருவிலும், சௌகார்ப்பேட்டையிலும் கடை கடையாய் ஏறி இறங்கினேன். பத்துமணி சுமாருக்கு ஒரு ஜவுளிக் கடையில் ஒரு விசித்திரம் கண்டேன். புதுமாதிரியாய் ஒரு பத்துரூபாய்நோட் இருந்தது. பத்துரூபாயும் இரண்டணாவும் சில்லறைகொடுத்து நோட்டைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்குவந்தேன். கிராமமுனிசீப் கடிதமும், புஷ்பவல்லி திரும்பிவந்து விட்டாளென்று இன்ஸ்பெக்டர் எழுதிய கடிதமும் வந்திருந்தன. நான் கொண்டுவந்த நோட்டையும் ஒரு சாதாரண நோட்டையும் பக்கத்திலே பக்கத்திலே வைத்துக்கொண்டு பூதக்கண்ணாடியின் உதவியால் வெகுகூர்மையாய்ச் சோதனை செய்தேன். நான்கு வித்தியாசங்கள் புலப்பட்டன. உடனே சோமுவைக்கூப்பிட்டு வித்தியாசங்களைச் சொன்னேன். கடையின் விலாஸத்தை எழுதிக்கொடுத்து, தப்புநோட்டுகள் எங்கிருந்து கிளம்பின என்பதை அறியும்படி சொல்லி யனுப்பினேன். பாலய்யா கொலைவிஷயமாய் என்னைக் கூப்பிட கான்ஸ்டேபில் வந்தான். 'புஷ்பவல்லி திரும்பியதும் பாலய்யா இறப்பானேன்?' என்ற சம்சயம் சற்று என் மனதில் குடிகொண்டது. இரண்டுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டோவென்று சந்தேகிக்கலானேன். பாலய்யாவின் நண்பன் சுப்பய்யாவல்லவா? அவன்கிராமமுனிசீப்கடிதத்திற்கண்ட தீவட்டி சுப்பய்யாவாக இருப்பானோவென்று சந்தேகிக்கலானேன். கொலைநடந்த அறைக்கு வந்ததும், விளக்கு உடைந்து கிடந்தது. வெகுநாளாகக் கண்ணாடி இல்லாமலிருந்தபடியால் உபயோகிக்கப்பட்டிராதென நினைத்தேன். சுப்பய்யாவே அதை மறுத்துவிட்டான். உபயோகப்பட்டுக்கொண்டிருந்த விளக்குத்தான். ஆனால் கண்ணாடி வில்லையை மட்டில் காணவில்லை என்று நினைத்துக்கொண்டு உள்ளேபோனேன். 'ஹௌலர்' கேட்டதும் இன்ஸ்பெக்டர் யாராவது டெலிபோனை உபயோகப்படுத்தி இருப்பாரோவென்ற சந்தேகம் ஜனித்தது. அவர்களொருவரும் உபயோகப்படுத்தவில்லை. பாலய்யாதான் உபயோகப்படுத்தி இருக்கவேண்டும். ஏன் முடிந்துவிட்டதென்று ஆபீஸுக்குத் தெரிவிக்கவில்லை என்று ஆலோசித்தேன். பாலய்யா தெரியாதவரல்ல. வெகுகாலமாய் டெலிபோனில் பழகிவருகிறார். ஆகையால் அவர் தடுக்கப்பட்டிருக்கவேண்டும். சவத்தைப் பார்த்தேன். அது குனிந்தவண்ணமே கிடந்தது. கால்கள் டெலிபோனுக்குச் சரியாயிருந்தன. கைகள் நீட்டப்படவில்லை. டெலிபோன் பலகையில் கைகள் ஊன்றியபடியே சவமாயிருப்பார். சுடப்பட்டதால் அதிர்ச்சி தாங்காமல் கீழே விழுந்துவிட்டார். ஜன்னலுக்கு வெளியே இருந்து டெலிபோன் பக்கத்தில் சுடவேமுடியாது. ஜன்னலின் வழியாய்ச் சுட்டவன் தப்பிப்போயிருந்தால் ஜன்னலின் உட்பக்கம் தாளிடப்பட்டிருப்பது அசாத்தியம். ஒரு புதிய மனிதன்

உள்ளேவந்து சுடவில்லை. அறைக் கதவைத் தாளிடவேண்டிய அவசியமில்லையே என்று சற்றுததியங்கினேன். நாம் சாதாரணமாய் இரகசிய சமாசாரம் டெலிபோனில் பேச நேர்ந்தால் கதவை அடைத்துக்கொள்வோம் அல்லவா? ஆகையால் யாருடனோ வெகு இரகசிய சமாசாரத்தைப்பற்றிப் பேசி இருக்க வேண்டும்! அப்பொழுது சுடப்பட்டிருக்கிறார். ஆனால் எப்படி சுடப்பட்டார் என்பது மட்டில் விளங்கவேயில்லை. வெளியே புறப்பட ஆயத்தமாயிருந்தவர், சாவைப்பற்றி எள்ளளவு கூட நினைக்கவே இல்லை. தற்கொலை செய்து கொள்ள யத்தனிப்பவர் மின்சார விசிறியைக் கூட நிறுத்தாமல் இருப்பரோ? கொலைதான் என்று தீர்மானித்துவிட்டேன். துப்பாக்கி சொல்லும் கதை என்னவென்று துப்பாக்கியை எடுத்தேன். விசை இழுக்காமல் சுட்டுவிட்டது துப்பாக்கி. யதிர்ச்சையாய்த் துப்பாக்கியை எடுத்து வெளியே வைத்துவிட்டாரோவென்ற சந்தேகத்துடன் பெட்டியைப்பார்த்தேன். அது பூட்டியிருந்தது. பூட்டுமட்டில் ஒருகதை சொல்லிற்று. மாசிலாமணிபிள்ளையினிடமிருந்தகைப் பெட்டிச் சாவி துப்பாக்கிப்பெட்டிக்குச் சரியாயிருக்குமோ வென்று சந்தேகித்தேன். கொத்துச் சாவியில் துப்பாக்கிப் பெட்டிச் சாவியுமிருக்குமென்று சுப்பய்யா சொன்னதும் கொத்துச் சாவியை எடுத்துப்பார்த்தேன். அதில் துப்பாக்கிப்பெட்டிச் சாவி மட்டில் இல்லை. கொத்துசாவி எப்பொழுதும் பாலய்யாவிடமிருந்ததால், அவர் கொடுக்காமல் ஒருவரும் அந்தச் சாவியை எடுத்துக்கொள்ளமுடியாது. சாவி அவரிடமில்லை யாகையால், துப்பாக்கிப் பெட்டியை அவர் திறக்கவே இல்லை. பெட்டியினின்று துப்பாக்கி வெளியேவந்து அவர் யாருடனோ டெலிபோன் வழியாய் இரகசியம் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவரைச் சுட்டுவிட்டது. இதுதான்நான்கண்டஉண்மை. இதைத்தான் விசாரணையில் சொன்னேன். இன்ஸ்பெக்டருக்கு என்மீது மிகுந்த கோபமுண்டாகிவிட்டது. ஆனால் நான் அப்படியே துப்பாக்கி பெட்டியிலிருந்து வெளியேவந்தது என நம்பவில்லை. பெட்டியை யாரோ திறந்து எடுத்து வெளியே வைத்திருக்கவேண்டுமென்றுதான் நம்பினேன். ஆனால் அது பாலய்யாவல்ல. பாலய்யாவினிடம் ஏதோ இரகசியமுமிருந்தது. அதை அறிய அறை முழுவதும் தேடினேன். எல்லோருமறிந்த இரகசியத்தை உறுதி பண்ண ஒரு சாக்ஷியமகப்பட்டது. அரக்கோணம் ஜானகி என்பவளின் புகைப்படம் ஒன்றிருந்தது. பாலய்யாவுக்கே புகைப்படம் எடுக்கத் தெரியுமென்று சுப்பய்யா சொன்னான். ஒரு பூதக்கண்ணாடி அகப்பட்டது. பெண்களின் கைரேகை பார்ப்பதற்காகவென்று சுப்பய்யா பொய் சொன்னான். அது போர்ஜரி நோட்டுக்களையும் சரியான நோட்டுக்களையும் ஒப்பிட்டுப்பார்க்கவென்று பின்னால்அறிந்துகொண்டேன். ஆனால் அப்பொழுதொன்றும் தோன்றவில்லை. தற்கொலை இல்லை. ஆனால் மரப்பெட்டியின்மீது வெகு அழகாய்ப் படிந்த சுருட்டுச்சாம்பலிருந்தது. அதை எடுத்துக்கொண்டேன். கொலைதான்என்பதற்குச்சாக்ஷியமில்லை. மறுநாள்விசாரணை என்று இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டார். விசாரணையன்று காலை நுங்கம்பாக்கம் போனேன். லோகநாதன் புஷ்பவல்லியினிடமிருந்து உண்மையை அறிந்திருப்பானென்று எண்ணினேன். அவனிடம் அவள் உண்மையைச் சொல்லவில்லை. நானே அறிந்துகொள்ளவேண்டுமென்றே லோகநாதன் அறையினுட் சென்று நாடோடிசுப்பராயன் என்ற மாறுவேடத்துடன் வெளியேவந்து அமிருதத்தைக்கண்டு வெருட்டினேன். அவள் உண்மையைச் சொல்லிவிட்டாள். புஷ்பவல்லியின் மாற்றாந்தாயிடமும் பூங்காவனத்தினிடமும் லோகநாதனுக்கும் புஷ்பவல்லிக்கு மிருந்த இரகசியத்தைச் சொல்லிவிட்டாள். புஷ்பவல்லியினிடம் அவனுக்கு அவ்வளவு பற்றில்லை. பூங்காவனத்தின்மீது மிக்க அன்பு. பின்னர் ஒரு சமாசாரஞ் சொன்னாள். பாலய்யா பூங்காவனத்தை மணக்க இருந்தானாம். அவனும் இறந்துவிட்டபடியால் அவர்கள் வீட்டில் துக்கத்துக்குமேல் துக்கம் வந்துகொண்டிருந்தபடியால் ஏவல் வைத்திருப்பார்களென சந்தேகமாம். அமிருதத்தினிடம் மந்திரவாதி யகப்பட்டா லழைத்துவரும்படி மரகதாச்சி சொல்லி இருந்தாளாம். அமிருதமும் நாடோடி சுப்பராயனாகிய என்னிடம் அந்தப் பொறுப்பை ஒப்புவித்தாள்.

அங்கேயே சாப்பிட்டுவிட்டு விசாரணை வந்தேன். விசாரணையில் கொஞ்சம் உண்[illegible] அகப்பட்டது. சுப்பய்யா கொலையன்றுகாலை[illegible] அறைக்கு வந்திருந்தான். அவனிடம் அறை

யைத் திறக்கும் மற்றோர் திறவுகோல் இருந்தது. துப்பாக்கிப்பெட்டியைத் திறக்கும் மற்றோர் திறவுகோலுமிருந்ததோ? வெளியேபோக இருந்த பாலய்யா சுடப்பட்டால் அவன் வெளியேபோவதைத்தடுப்பதற்குச் சுருட்டுச்சாம்பல் ஞாபகம் வந்தது. சுப்பய்யா சுருட்டுப் பிடிப்பானா ?''

“விசாரணை வெகு அழகாய் முடிவுபெற்றதல்லவா ? என்னை இன்ஸ்பெக்டர் சாக்ஷிபோட்டிருக்கக்கூடாது. போட்டபிறகு அதிருப்திப்பட்டால் அது என் குற்றமல்ல. வீடுவந்ததும் போலீஸ் உதவி கிடைக்காதென்று இன்ஸ்பெக்டர் எழுதியிருந்தார். சோமுவும் திரும்பிவந்துவிட்டான். நோட்டுகள் அரக்கோணம் ஜானகியினிடமிருந்து ஜவுளிக்கடைக்குவந்தன. ஜானகிக்கு பாலய்யா முதல் நாள் ஐந்நூறு ரூபாய்கள் பத்து ரூபாய் நோட்டாகவே கொடுத்தார். கொலை நடந்த தினத்திற்கு முந்தியதினம், இன்ஸ்பெக்டர்வாள் உங்களுக்குத்தான் சொல்லுகிறேன், புஷ்பவல்லியை பாலய்யா காணவில்லை. செங்கற்பட்டிலுள்ள தாசி யொருத்திக்கும், அரக்கோணம் ஜானகிக்கும் ஐந்நூறு ரூபாய் போர்ஜரி நோட்டுகளாகவே கொடுத்து பழைய பாக்கியைத் தீர்த்துக்கொண்டார். பாலய்யாவின் இரகசியம் எனக்குத் தெரியும். பூதக்கண்ணாடியின் உபயோகம் எனக்குத் தெரியும். துப்பாக்கியின் பிரயோஜனம் எனக்குத் தெரியும். ஆனால் கொலைசெய்தது யார் ? எதற்காகச் செய்யவேண்டும்? போர்ஜரி நோட்டுக்களைத் தனியாகவே தயார்செய்தாரா? அல்லது சுப்பய்யாவின் உதவியுண்டா ? இவைகளை அறிந்துகொள்ளவேண்டும். அன்றிரவேசோமுவுக்குபாலய்யாவைப்போல்வேஷம் போட்டுவித்தேன். பேய்க்குக் கால்களில்லை என்றோர் நம்பிக்கையுண்டல்லவா ? கால் பக்கம் முழுவதும் ஒரு வெண்பட்டால் மறைத்தேன். நான் ஒரு பிச்சைக்காரன்போல் வேஷந்தரித்தேன். இருவரும் வெளியே புறப்பட்டோம். எதிர்பார்த்தபடி சுப்பய்யாவைக் கண்டேன். நங்கபுரத்தில் பண்ணை வேலை செய்யும் ஆளென்றும் எஜமானைக் காணவந்தபோது அவர் தற்கொலை செய்துகொண்டுவிட்டபடியால் அவரைக் காணக்கூடவில்லை என்றும் பஞ்சப்பாட்டுப் பாடினேன். ஒரு சுருட்டு வேண்டுமென்று வேண்டினேன். சுருட்டை இரண்டு முறை வாயில் வைக்குமுன்னர் மாரடைத்து இருமுவது போலெல்லாம்பாசாங்குசெய்து சுருட்டை அணைத்து எறிந்துவிட்டேன். பின்னால் வந்த சோமு எடுத்துக்கொண்டான். என்னை பாலய்யா வீட்டுக்கழைத்துச்சென்று அங்கே பரிசாரகனைக் கூப்பிட்டு எனக்கு அன்னமிடச் சொல்லிவிட்டு அவனும் அங்கேயே அன்றிரவு இரகசியமாய்த் தங்குவதாய்ச்சொன்னான். இருவரும் கதவைத் திறந்துவைத்துவிட்டு உள்ளே சென்றனர். சோமுவும் திறந்த கதவின் வழியாய் உள்ளே போய்விட்டான். சுப்பய்யாவும் வீட்டிலேயே தங்கினான். அன்றிரவு போலீஸார் கண்ட பேய் சோமு; அறைக்குட் பூட்டப்பட்டான். பன்னிரண்டு மணிக்கு சுப்பய்யா எழுந்திருந்து மாடிக்கு ஏறினான். அவனுக்குப் பணத்தட்டு. போர்ஜரி நோட்டுக்கள் பரவிவிட்டன ; கண்டுபிடிக்கப் படவில்லை. ஆகையால் இன்னுங்கொஞ்சம் பணமெடுக்கவந்தான். மறுசாவி அவனிடமே இருந்தது. போலீஸாரெல்லாம் பேய்க்குப்பயந்து கீழேபடுத்துக்கொண்டனர். பூதக்கண்ணாடியையுமெடுத்துக் கொண்டான். அறைக்கதவைத் திறந்து வைத்துவிட்டு மூலையில் போய் மண்வெட்டி எடுத்துவந்தான். இதற்குள் சோமு அறையை விட்டு வெளியே வந்துவிட்டான். அறையை மூடிப் பூட்டிக்கொண்டு கீழே சென்றான். வீட்டுப் பின்பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு நாம் நேற்றுச்சென்ற இடத்திற்குப்போய் வெட்டி மண்ணை விலக்கி இந்த மரப்பெட்டியைத் திறந்து நோட்டுக்களைஎடுத்து நிலவுவெளிச்சத்தில் பூதக்கண்ணாடி வழியே பார்த்தான். பின்னர் நோட்டுக்களைப் பையில் போட்டுக்கொண்டு, பெட்டியைப் பூட்டிவிட்டு குழியையும் மூடிவிட்டு வீட்டுக்குள் போய் பின்பக்கக் கதவைத் தாளிட்டுக்கொண்டான். இதுவரை அவனைப் பின்தொடர்ந்த சோமு வீட்டுக்குள் போகவில்லை. என்னைவந்து எழுப்பினான். நாங்களிருவரும் என் வீட்டுக்கு வந்துவிட்டோம். வெகுநேரம் யோஜித்துவிட்டு, டெலிபோன் ஆபீஸில் போய் விசாரித்தேன். காஸ்மாபாலிடன் கிளப்பில் இருந்து ஒருவர், பாலய்யாவுடன் பேசியதாயும், பாலய்யாவின்மீது அபராதம் போடும்படி சிபார்சு செய்திருப்பதாயும் டெலிபோன் உத்தியோகஸ்தர் சொன்னார். அங்கிருந்தபடியே நேராய் மாசிலாமணிபிள்ளை

தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய மன்னுயி ரெல்லாந் தொழும்.

வீட்டுக்குச் சென்றேன். நகைப்பெட்டியின் திறவுகோலைப் பெற்றுக்கொண்டு காலை ஆறு மணிக்குத் திரும்பி வீடுவந்து சேர்ந்ததும் சுப்பய்யாவைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி சோமுவை அனுப்பினேன். சுமார் ஒன்பது மணிவரையில் சுப்பய்யா ஏன் கொலை செய்திருக்கவேண்டுமென்று யோசித்தேன். பத்மநாபன் தம்பி என வேஷம் மாறிக்கொண்டு சுப்பய்யாவைச் சுமார் பத்துமணிக்குக் கண்டேன். அவனை அறையிலிருந்து அனுப்பிவிட்டு அறையைச் சோதித்தேன். அவன் ஜேப்பியில் ஸைகிள் விளக்கின் கண்ணாடி பில்லையைக் கண்டேன். துப்பாக்கியைக் கோபம்மூட்டியது அதுதான் என்று தோன்றிற்று. திறவுகோலை எடுத்துப்பார்த்தேன். நகைப்பெட்டித் திறவுகோல்என்ஜேப்பியிலிருந்தது. ஒப்பிட்டுப்பார்த்தேன். இரண்டும் ஒரேமாதிரி இருந்தன. ஜேப்பியில் இரண்டையும் போட்டுக்கொண்டேன். கண்ணாடி பில்லையைச் சுப்பய்யாவின் ஜேப்பியிலேயே வைத்துவிட்டேன். ஒருகடிதங் கண்டேனென்று சொன்னேனலல்லவா? அதுதான் எனக்குப் பெரிய துப்பு. இதோ இருக்கிறது. நான் மாசிலாமணிபிள்ளை வீட்டில் பிளாட்டிங்கின்மேல் கண்ட எழுத்தும் இந்தக் கடிதத்திலிருக்கிற எழுத்தும் ஒன்றே."

"அன்புள்ள சுப்பய்யா அவர்களுக்கு.

தாங்கள் எழுதியகடிதம்கிடைத்தது. உங்கள் மீது எனக்கு காதலிருக்கிறதோ இல்லையோ யான் யோசிக்கத் தயாராயில்லை. பாலய்யா எனக்குக் கட்டாயம் கிடைக்கிறார். அவரென்னைக் கலியாணஞ் செய்துகொள்ளுவார். பாவியாகிய நான்நேற்றுத்தான் அவரைப் பார்க்கக்கொடுத்துவைத்தேன். நேற்று அவர் சொல்லியபடி நாளைக்குக்கட்டாயம் வருவார். அவர் கிடைக்கும்பொழுது நான் பழைய விஷயங்களை எல்லாம் மறந்துவிடுகிறேன். இன்றிரவு வந்து அவளைக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள். நாளைக்குக் கட்டாயமாய் பாலய்யாவைப் பார்ப்பேன். அவரையே நான் மணந்துகொள்வேன். பெட்டியை எப்பொழுது வேண்டுமென்றாலும் வந்து வாங்கிக்கொண்டு போங்கள். பாலய்யா எனக்குக் கிடைக்கும்வரை மற்றெவருடைய காதலைப் பற்றியும் நான் தொந்தரவு செய்துகொள்ளப் போகிறதில்லை. ஞாபகமாய் இராத்திரி வாருங்கள். இல்லாவிடில்உங்களுக்குத்தான்அபாயம்."

"கையொப்பமில்லை. நான் பிளாட்டிங் பேப்பரில் கண்ட எழுத்தைப்போலவே இந்த எழுத்து மிருந்ததால் இதை எழுதிய பெண்தான் அன்றிரவு புஷ்பவல்லியின் அறையில் தங்கினவளெனத் தோன்றியது. பூங்காவனமும் புஷ்பவல்லியும் ஒரே தந்தைக்குப் பிறந்தவர்களாகையால் எளிதில் சாயல் வித்தியாசங் கண்டுபிடிக்க இயலாது. அன்றிரவு அமிர்தம் புஷ்பவல்லியின் அறையில்வெகுநேரம் தங்கவில்லை. ஆகையால் கடிதத்தைகையிலெடுத்துக்கொண்டேன். அவனுடன் பேசியபோது பூங்காவனத்தினிடம் அவன் காதல் கொண்டிருந்தானென்றறிருந்தேன். இப்பொழுது முகாந்திரம் ஏற்பட்டுவிட்டது. கொலைசெய்த வழியுந் தெரிந்துவிட்டது. நேராய்க் காஸ்மாபாலிடன் கிளப்புக்குச் சென்றுடெலிபோனண்டையில்நிற்குஞ்சேவகனை வெருட்டினேன். அவன் கொலை நடந்ததினம் சுப்பய்யா டெலிபோனில் ஒன்றே முக்கால் மணியிலிருந்து இரண்டு மணிவரை பேசிக்கொண்டிருந்ததாயும், அந்தவிஷயத்தை வெளியே சொலலாமலிருக்க ஒரு ரூபாய் இனும் பெற்றதாயுஞ் சொன்னான். அனறு சாயங்காலம் சுப்பய்யா பூங்காவனத்தைக்கண்டு நகைப்பெட்டியைப் பெற்றான். வழியில் ரிக்ஷா இழுத்துக்கொண்டிருந்த சோமுவின் ரிக்ஷாவில் ஏறிக்கொண்ட பிறகுதான் சாவியையும் கடிதத்தையுங் காணவில்லை என்று கண்டுகொண்டான். சோமு உடனே எனக்கு விஷயத்தைத் தெரிவித்துவிட்டான். உடனே சுப்பய்யாவுக்கும் இன்ஸ்பெக்டருக்கும் கையொப்ப மில்லாமல் கடிதங்களெழுதினேன். சுப்பய்யாவின் அறைகளைப் போலீஸார் தேடலாமென்றும், போர்ஜரி நோட்டுக்களொன்று மில்லாமல் அவன் எச்சரிக்கையாயிருப்பது நலமென்றும் எழுதியிருந்தேன். சோமுவைச் சுப்பய்யாவை விடாமல் தொடரும்படி அனுப்பிவிட்டேன்.

"அன்றிரவு ஒரு மலையாளத்து மந்திரவாதியாய் அமிர்ததத்தின்முன் தோன்றி, இரவு பன்னிரண்டு மணிக்கு பூங்காவனத்தின் வீட்டில் ஜபஞ்செய்தால எவ்விதமான ஏவலும் போய்விடுமென்று சொன்னேன். அவள் பூங்காவனத்தின் வீட்டுக்கு என்னை அழைத்துசசென்றாள். மரகதாச்சியினிடமிருந்து உண்மையெல்லாந் தெரிந்துகொண்டேன். பாலய்யா முதல்

தடவை அவர்கள் வீட்டுக்குவந்தது, சாஸனத்
துக்கு மறுநாள் சாயங்காலந்தா னென்றும்,
அன்றே பூங்காவனத்தை மணந்துகொள்வ
தாய் வாக்களித்துவிட்டதாயும், கொலைநடந்த
தினம் மூன்று மணிக்கு வருவதாய் வாக்களி
த்துச் சென்றதாயும் இரண்டு மணிக்கே துப
்பாக்கி தானாகவே சுட்டு அவர் இறந்துவிட்டதா
யும் அவள் சொன்னாள். நான் ஏவல நிச்சயமென்
றும் மாடியில்போய ஜபிக்கவேண்டுமென்றும்
சொல்லிவிட்டு மாடிக்குச் சென்று வழிக் கத
வைத் தாளிட்டுக்கொண்டேன். மாடியிலொரு
மூலையில சுருட்டுச்சாம்பல் அகப்பட்டது. ஒரு
சந்தேகந் தோன்றியது. கீழே இருந்து பார்க்
கும்பொழுது மாடியறை வெகு நீளமாயிருந்
தது. மாடிககுப்போனால் சிறிதா யிருந்தது. கிழ
க்குப்பக்கத்துச் சுவா முடிந்திருந்தாலும் பின
னால ஒரு அறை இருக்கலாமோவெனச் சந்தே
கித்தேன். சுவரில ஒன்றன்கீழ் ஒன்றாய்
மூன்று ஆணிகள் அடிக்கப்பட்டிருந்தன. ஒவ
வொன்றாய மூனறு ஆணிகளையும் அசைத்துப்
பார்த்தேன். கீழ் ஆணியை அசைத்ததும் சுவ
ரில ஒரு கதவு திறந்தது. அதுமரக்கதவுதான்.
ஆனால இரண்டு பக்கங்களிலும் வெள்ளையடிக்
கப்பட்டிருந்தது. அறை ஆறு அடி நீளம், 13-
அடி அகலம்; ஜன்னலே இல்லை. அறை முழு
வதும் இருட்டாயிருக்கும். கீழே தேடினேன.
புஷ்பவல்லி அந்த அறையில் அடைக்கப்பட்
டிருந்தாளெனத் தோன்றக் கூடிய சாக்ஷியங்
களைக் கண்டேன். இந்த அழுக்கு வேஷ்டியும்,
இந்த அழுக்குக் கோட்டும் அதன் பையில இந்
தச் சிற்றுளியும், புஷ்பவல்லி லோகநாதனுக்கெ
ழுதியகடிதமும், தலைப்பாகையாய் உபயோக
பட்ட இந்த அழுக்குத துப்பட்டியும் அகப்பட்
டன. பச்சைமையில புஷ்பவல்லி எழுத்தில
விலாஸமிருக்கிறது. சுருட்டுச சாம்பல சுப்பய்
யா வந்ததாகத தெரிகிறது. கடிதமெழுதி
போஸ்டு செய்யப்போன புஷ்பவல்லியைத தயி
ர்க்காரன தூக்கிச்சென்றான். சிற்றுளி அவனை
திருடியதாக ருசுப்படுத்துகிறது. பெட்டியைப
பூங்காவனத்துனிடமிருந்து சுப்பய்யாபெற்றான.
நான்கண்டவஸ்துக்களை இப்பயில இறுக்கிக்கட்
டிக்கொண்டு, அதன்மேல வேஷ்டியைக கட்டிக்
கொண்டு கையில சாம்பலை வைத்துக்கொண்டு
பிரசன்னமான முகத்துடன இறங்கியதால,
ஏவல தீர்ந்துபோயவிட்ட தென்று அவர்கள

நம்பினார்கள். நான் வெளியே வந்துவிட்டேன்.
நான் நினைத்தபடியே நேற்றிரவு எல்லாவற்றை
யும் மறைக்க சுப்பய்யா வந்தான். பாலய்யாவின்
பிசாசுபோல் நான் வேஷம் போட்டுக்கொண்டு
அவனைப் பயமுறச்செய்தேன். என்னை ஈட்டி
யால் குத்திக்கொல்ல ஓடிவந்தான். சோமு போ
லீஸ் விஸிலால் ஊதினான். நான் ரிவால்வர்
களை எடுத்துக்கொண்டு அவன் பக்கம் திரும்பி
னேன். தற்கொலை செய்துகொள்ளத் துணிந்து
விட்டான். போலீஸார் வரவில்லை யாகையால்
சோமு தடுத்தான். மார்பில் பாயவேண்டிய
ஈட்டி விலாவில் பாய்ந்தது. பிறகு எல்லாவற்
றையும் நேற்றே உங்கள் முன்னிலையில் அவன்
ஒப்புக்கொண்டுவிட்டான். குற்றவாளி சுப்பய்
யா தான் என்பதற்கு சந்தேகமுண்டோ?"

வெகு ஆச்சரியத்துடன் எல்லோரும் கேட்
டுக்கொண்டிருந்தனர். மகாலிங்கம் முடித்த
தும், இன்ஸ்பெக்டர் சுப்பண்ணா புன்சிரிப்பு
டன் மகாலிங்கத்தினிடம் கையை நீட்டினார்.
"உமது சாமர்த்தியம் வெகு விசேஷமானது.
உம்மிடத்தில் நம்பிக்கையுமில்லை. அன்பு
மில்லை ; ஆகையால் நான் விசாரணை யன்று
சாயங்காலம் அம்மாதிரி கடித மெழுதிவிட்
டேன். நான் எழுதியதை நீர் மறந்துவிட
வேண்டும். என்னையும் மன்னிக்கவேண்டும்.
சென்னையில் என்ன நடந்தபோதிலும் நாம்
இனி நண்பர்களே" என்று சொன்னார்.

"எனக்குப் பகையே இல்லை. நீர் கடிதமெழு
தியதை நான் பாராட்டவே இல்லை. இனி உண்
மை அறியவேண்டு மென்றால் நாம் சேர்ந்து
உழைத்தால் எளிதில் அறிந்து கொள்ளலாம்.
இந்த விஷயத்திற்கூட உமது புத்திநுட்பத்
தால வெகு விஷயங்கள் தெரிந்தன. போர்ஜரி
நோட்டுக்கள் அதிகமாய்ப் பரவாமல் தடுத்து
விடுங்கள். நாம் குற்றவாளியாகிய பூங்காவனத்
தையும் அவள் தாயையும் தப்பவிடக்கூடாது.
ஆனால அவர்கள் செய்த குற்றத்தை நன்றாயறி
ந்து கொள்ளவேண்டும். பொறாமையும் பகை
யும் மட்டில குற்றமாகா. அறியாமல் திருட்டுச்
சொத்தைத்தங்களிடம் வைத்துக்கொண்டிருந்
தது குற்றமாகாது. புஷ்பவல்லியைத் தங்களி
டம் வைத்திருந்ததொன்றுதான் குற்றம். புஷ்ப
வல்லியைப்போலநடித்த குற்றமுமிருக்கிறது.
இதற்குத் தக்க தண்டனை விதிக்கவேண்டும்.

(இதன் தொடர்ச்சி 279-ம் பக்கம் பார்க்க.)

இலர்பல ராகிய காரண நோற்பார் சிலர்பலர் நோலா தவர்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
CHILDREN'S & LADIES' PAGES
II

ராபினுடைய மனிதர்களில் பிரபலமானவர்கள் வில்லியம், ஜியார்ஜ், டக்குச்சாமி எனும் மூவர்.

இவர்களில் டக்குச்சாமி என்பவன் யார்க்குஷயரில் ஒரு மடாதிபதியாக இருந்தவன்.

மரியம் என்னும் ஒரு பெண்ணும் இவர்களை அடிக்கடி காணவருவாள். அவள் ஒரு பெரிய சீமான் மகள். ஆனாலும் இவர்களோடு கலந்து நாட்கழிப்பதில் அவளுக்கு மிகப்பிரியம்.

ராபினுடைய வீரர்கள் பெயர்பெற்ற வில்லாளிகள். அவர்களது புகழ் நாடுமுழுதும் பரவிற்று. கிராமாந்தரங்களிலுள்ள ஜனங்களெல்லோரும் அவர்களுடைய வீரச்செயல்களையே எப்பொழுதும் பாராட்டிப் பேசினார்கள்.

கடைசியாக இவர்களுடைய பிரதாபம் விட்பி மடாதிபதிக்கும் எட்டிற்று. அவர் மிகுந்த செல்வமும் செல்வாக்கும் உடையவர். ராபினுடைய வீரர்கள் திறமையை நேரிற்பார்த்து மகிழும்பொருட்டு அவர்களை யெல்லாம் ஒருநாள் விட்பி மடாதிபதி விருந்துக்கழைத்தார்.

விருந்து முடிந்தபிறகு மடாதிபதி அவர்களை யெல்லாம் மடத்தின் முன்பக்கமுள்ள கோபுத்திரன்மேல் அழைத்துச்சென்று "வீரர்களே! நீங்கள் வில்வித்தையில் தேர்ந்தவர்கள் என்று பலர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். உங்கள் கைலாவண்யத்தை நேரிற்கண்டு களிக்கும் பொருட்டே விருந்துக்கழைத்தேன்" என்றார்.

உடனே யாவரும் வில்லில் நாணேற்றினர். முதலில் ராபின் ஒரு அம்பு விட்டான். அது வெகுதூரம் பாய்ந்துசென்று ஒருவயல் நடுவே குத்திநின்றது. (அந்த வயலுக்கு இப்பொழுதும் ராபின் வயல் எனப் பெயர் வழங்கிவருகிறது.) மற்ற வீரர்களும் எய்தார்கள். ஆனால் ராபின் எய்த அம்பு சென்ற தூரம் அவர்கள் அம்பு போகவில்லை. அளந்து பார்த்ததில் ராபினுடைய அம்பு ஒரு மைலுக்கப்பால் பாய்ந்திருந்தது. மடாதிபதி யாவர்க்கும் பரிசுகொடுத்தனுப்பினர்.

நாட்டுப்புறவாசிகளெல்லோரும் ராபினை ஒரு வீரனாக மதித்துக்கொண்டாடினார்கள். ராபினும் அவர்களிடத்து மிகுந்த கருணை காட்டிவந்தான். அவனுக்குப் தேவையான வெண்ணெய், முட்டை, ரொட்டி முதலியவற்றை ஜனங்கள் சந்தோஷமாகக் கொடுத்துவந்தார்கள்.

ஆகவே உணவுப்பொருள்கள் ராபின் கூட்டத்தாருக்கு ஏராளமாய்க் கிடைத்துவந்தன. ஆனால் உடைக்கு என்ன செய்வது? தன் வீரர்கள் எல்லாம் எப்போதும் பச்சைச்சொக்காய் அணியவேண்டு மென்பது ராபினுடைய ஏற்பாடு.

அந்தப் பச்சைச்சொக்காய்த் துணியோ மிகவும் விலைபெற்றது. பணம் கொடுக்காவிட்டால் துணி எப்படிக் கிடைக்கும்?

ஆகையினால் ராபினும் அவனுடைய வீரர்களும் மறைவிலிருந்து, காட்டுவழியாக வரும் சீமான்களை வழிமறித்து, அவர்கள் கையிலுள்ள பணங்களைத் தட்டிப்பறிக்கத் தலைப்பட்டார்கள்.

ஆனால் அவர்கள் ஏழைகளைக் கொள்ளையடிப்பதில்லை. உலோபிகளும் துஷ்டர்களுமான சீமான்களையே அவர்கள் சூறையாடிவந்தார்கள். சீமான்களிடத்திலும் மடாதிபதிகளிடத்திலும் ராபினுக்கும் இயல்பாகவேபெரும்பகை. ஆகையால் அவர்கள் முதலைப் பறிப்பதில் அவனுக்குப் பேரானந்தம். அவன் சொத்துக்களை அபகரிக்க எண்ணி மடாதிபதிகளும் பிரபுக்களும் கோட்சொல்லி வந்ததனால் அரசன் வெகுண்டு ராபினை நாட்டைவிட்டு ஓட்டியதனால், அது முதல் ராபினுக்கு மடாதிபதிகளிடத்தும் பிரபுக்களிடத்தும் வெறுப்பு ஏற்பட்டதாம்.

ஒருநாள் ராபின் கூட்டத்தார் ஒருகாட்டின் ஓரமாகச் சென்றுகொண்டிருந்தபொழுது ஒரு கூட்டப் பிரயாணிகள் காலடிச்சத்தம் அவர்கள் செவியில் விழுந்தது. உடனே யாவரும் புதர்மறைவில் பதுங்கி, பிரயாணிகள் இன்னாரென அறிய ஆவலோடு காத்திருந்தனர்.

அவர்கள் மறைந்திருந்த இடத்தைப் பிரயாணிகள் அடையவே, தன் பகைவனான மடாதிபதி தன் பரிவாரங்களுடன் பிரயாணம் செய்வதை ராபின் கண்டான்; அடங்கா ஆநந்தம் கொண்டான்; தன் காளத்தை எடுத்து உரக்க ஊதினான்.

"தோழர்களே! விரைவாக வாருங்கள். என்னைக் குடிகெடுத்த பாதகச்சாமி இதோவருகின்ரான். இவன் கையில் என்ன இருக்கின்றது

பார்ப்போம்'' எனக்கூறி, ராபின்மடாதிபதியை வழிமறித்தான். வீரர்களும் பிரயாணிகளைச் சூழ்ந்துகொண்டனர்.

"ராபினே! நீ மிகவும் நல்லவன்; பெயர்பெற்ற வீரன்; ஒப்பற்ற தைரியசாலி; ஆகையால் நிராயுதபாணிகளாய் இருக்கிற எங்களை விட்டுவிடு. என் பணத்தையும் பறிக்காதே: நான் ஏழையென்று நீ அறிவாய். என் கையிலிருக்கும் சொற்பத் தொகைக்கு எனக்கு மிகுந்த செலவிருக்கிறது'' என்று பணிவாய்க் கூறினார் மடாதிபதி.

"பணத்துக்கு உமக்கு எவ்வளவு தேவையிருக்கிறதோ அதைவிடப் பதின்மடங்கு தேவை எங்களுக்குண்டு. பணமில்லாமல் எனக்கும் என் வீரர்களுக்கும் இக்கொடுங்காட்டில் எப்படி வாழமுடியும்? நீரோ தம்பிரான் தோழன், செல்வாக்குடைய மடாதிபதி. உம் நாவசைந்தால் நாடசையும். ஆகையால் கையில் உள்ளதைத் தடையின்றிக் கொடுத்துவிடும்'' என்று ராபின் அதட்டிக் கூறினான்.

அவன் எவ்வளவோ அதட்டியும் மடாதிபதி இச்சகம் பாடிக்கொண்டே இருந்தார். ராபினுக்குக் கோபம் வந்துவிட்டது.

"வீரர்களே! உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்'' என்றான் ராபின்.

பிரயாணிகள் கையிலிருந்த பதினாயிரம் பவுனும் உடனே பிடுங்கப்பட்டன.

மடாதிபதி பின்னும் பல்லைக்காட்டிக் கெஞ்சிக்கொண்டே நின்றார்.

"ஸ்ரீலஸ்ரீ சுவாமி அவர்களே! தேவரீர் இன்னும் ஒரு கருணை புரியவேண்டும். அதாவது, நானும் என் வீரர்களும் சுகமாக வாழும்படி முழங்காற்படியிட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும்'' என்றான் ராபின்.

"இந்தக் காட்டிலா பிரார்த்தனை செய்வது?'' என்றார் மடாதிபதி.

"அந்த மரத்தின் கீழே முழங்காற்படியிடும். நீர் செய்த துரோகத்தினாலே எங்களுக்கு ஆலயத்துக்கு வரமுடியாதென்று உமக்குத் தெரியாதா?'' என்றான் ராபின்.

ஏனென்றால் ராபினையும் அவன் வீரர்களையும் அரசன் தேசப்ரஷ்டர் ஆக்கியிருந்தான்.

"என்னவானாலும் சரி! மரத்தின் கீழ் முழங்காற்படியிட்டு வணங்கமாட்டேன். அது தெய்வத் துரோகமான செயல். வேண்டுமானால் ஒரு ஆலயந்தேடிப் போவோம்'' என்றார் மடாதிபதி.

"ஆனால் நீர் நிற்கிற இடத்திலேயே முழங்காற்படியிடும். என் வார்த்தையைத் தட்டினால் உம்மை இப்பொழுதே சிரச்சேதம் செய்வேன்'' என்றான் ராபின்.

ஐயோ பாவம்! என்செய்வார்? அப்படியே முழங்காற்படியிட்டு வானத்தை நோக்கிப் பிரார்த்தனைசெய்தார்.

பிரார்த்தனை முடிந்ததும், "பெரியவரே! தேவரீர் இனி மடத்துக்கு எழுந்தருளலாம்! நீர் உமது பணத்தையெல்லாம் இழந்து விட்டீர் என்பது உண்மையே. ஆனால் அந்தப் பணம் தரும விஷயமாகச் செலவு செய்யப்படும் என்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்'' என்று கூறி, போக விடை கொடுத்தான்.

"தப்பினோம்! பிழைத்தோம்!! என்று மடாதிபதியும் பரிவாரங்களும் ஓடினர்.

III

ஒருநாள் காலையில், ராபின் ஷேர்வுட் வனத்தண்டையுள்ள ரஸ்தாவழியாக நடந்துகொண்டிருந்தபொழுது **ஆலன்டேல்** என்னும் ஒரு இளைஞனைச் சந்தித்தான். அவன் ஒரு பெரிய பிரபுவின் மகன். அவன் சிவப்புச் சொக்காய் அணிந்து உல்லாசமாகப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் நடந்தான். அவனுடைய ஆனந்தக் கோலத்தைக்கண்டு ராபினும் மிக மகிழ்ச்சிகொண்டான்.

ஏனெனில் பிறர் களிப்படைவதைக் காண்பதில் ராபினுக்குப் பெரிய ஆசை.

மறுநாள் **சின்ன** ஜானும், மச் என்னும் வேறொரு வீரனும் **ஆலன்டேலைச்** சந்தித்தார்கள். ஆனால் அவன் தலைநாள் கண்ட **ஆலன்டேலாய்** இருக்கவில்லை. சிவப்புச் சொக்காய்க்குப் பதிலாக இன்று ஒருஅழுக்கடைந்த வெள்ளைச் சொக்காய் அணிந்திருந்தான். முகம் வாடி வெளுத்திருந்தது.

சின்னஜான் அவனண்டை சென்று, அவன் கையைப்பிடித்து—"இளைஞனே! நீ யார்? ஏன் கவலையோடு நடக்கிறாய்? எங்கள் தலைவர் **ராபின்ஹூட்** அண்டை போவோம் வா. உன் சங்கடமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்'' என்றான்.

ஆலன்டேலும் அதற்கு இசைந்தான். மூவரும் ராபின்ஹூட் இருக்கும் இடத்தை அடைந்தார்கள்.

"நான் நேற்று உன்னைப் பார்த்தேன் அல்லவா? அப்பொழுது நீ மிகக் களிப்போடு நடந்தாயே? இப்பொழுது உன் முகம் வாடியிருக்கக் காரணம் என்ன?" எனக் கேட்டான் ராபின்.

இளைஞனை பிரபு பதிலுரையாமல் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு நின்றான்.

"நல்லது! உன் ஜேப்பில் என்ன இருக்கிறது பார்ப்போம்" எனக் கூறி, ராபின் அவன் பக்கத்தில் சென்றான்.

"நற்குணமுடைய வீரரே! என் ஜேப்பில் 5-ஷில்லிங் கிடக்கின்றது. மற்றும் ஏழு வருஷ காலமாக நான் வைத்துக்கொண்டிருக்கிற ஒரு விவாக மோதிரமும் இருக்கிறது" என்று கூறி இளைஞன் பெருமூச்சுவிட்டான்.

"அப்படியானால் மிகக்கஷ்டமே. சரி! உட்கார். நீ மிகக் களைத்திருக்கிறாய். ஏதோ மன வருத்தமுடையவனாகவும் தோன்றுகிறாய். உன் வரலாறு முழுவதும் மறையாமல் சொல். முடியுமானால் என்னாலான உதவியை நான் செய்கிறேன்" என்றான் ராபின்.

சாதுக்களுக்கு உதவிபுரிவதில் ராபினுக்குப் பரமானந்தம்.

"ஐயா! என் வரலாறு முழுவதும் சொல்லுகிறேன் கேளும். என் பெயர் ஆலன்டேல். நேற்று என் விவாக தினமாக இருந்தது. அதனால்தான் அழகிய உடைதரித்து உல்லாசமாக நடந்தேன். டேல் ஆபி மாளிகையில் வாழும் கிறிஸ்தபல் சீமாட்டியைப்பற்றி நீர் கேட்டிருப்பீரே. அவளை நான் சென்ற ஏழுவருஷகாலமாக நேசித்துவருகிறேன். அவளுடைய பெற்றோரும் அவளை எனக்கு விவாகஞ் செய்து தருவதாகச் சம்மதித்து, நேற்று விவாகஞ் செய்யவும் நாள் குறிப்பிட்டிருந்தது. விவாகத்துக்காக நேற்று நான் சென்றேன். அவர்கள் வாக்கு மாறிவிட்டார்கள். என்னைவிடச் சீமானான ஒரு கிழவனுக்கு கிறிஸ்தபலை விவாகம் செய்து கொடுக்க ஏற்பாடு நடக்கிறது. இதுதான் என் கவலைக்குக் காரணம்" என்றான் ஆலன்டேல்.

"இவ்வாறு வாக்கு மாறப்பட்டவளுக்காக நீ கவலையடைவது வீணே!" என்றான் ராபின்.

"ஐயோ! அப்படியல்ல. கிறிஸ்தபலுக்கு அந்தக்கிழவனை மணஞ்செய்துகொள்ளச் சம்மதமே இல்லை. பேராசையுடைய அவளது பெற்றோரே இவ்விஷயத்தில் குற்றவாளிகள்" என்றான் ஆலன்டேல்.

"சரி! அவளை உனக்குக் கலியாணஞ்செய்து வைத்தால் எனக்கு என்ன கொடுப்பாய்?" என்றான் ராபின்.

"கொடுக்க என்னிடம் என்ன இருக்கிறது. நான் பிரபுக் குடும்பத்தில் பிறந்தவனானாலும், தற்காலம் பரம ஏழையாய் இருக்கிறேன். ஒரு காரியம் மட்டும் என்னால் செய்யமுடியும். நானும் உமது வீரர்களில் ஒருவனாகி ஆயுள் பரியந்தம் உமக்கு உண்மையாக உழைப்பேன்" என்றான் இளைஞன்.

உருக்கமான இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் ஈர நெஞ்சனான ராபின் மனம் உருகி விட்டது.

"உன் மனக்கவலையை அடியோடே விட்டுவிடு. நாளை உனக்கு மங்களமாகக் கலியாணம் நடத்திவைக்கிறேன்" என்றான் ராபின்.

மறுநாள் சூரியோதயமாயிற்று. ராபின் தன் வீரர்களை அழைத்தான்.

"வீரர்களே! நமது தோழனான ஆலன்டேலுக்கு கிறிஸ்தபல் சீமாட்டியை இன்று விவாகம் செய்துவைப்பதாக வாக்குக் கொடுத்து விட்டேன்."

"நான் இதோ முன்னே போகிறேன். சின்ன ஜானும் இருபது பொறுக்கு வீரர்களும் ஆலன்டேலை அழைத்துக்கொண்டு என் பின்னாலே வாருங்கள். கலியாணச் சடங்கு நிறைவேற்ற டக்குச்சாமியும் கூடவரட்டும். யாவரும் டேல் ஆபி மாளிகையின் பக்கத்திலுள்ள குற்றிக் காட்டிலே மறைந்திருங்கள். நான் காளம் ஊதினவுடனே மாளிகைக்கு வாருங்கள்" என்று ஏற்பாடுசெய்து, ராபின் ஒரு கிழப்பாணன் வேடந்தரித்து, கையில் ஒரு யாழுடன் டேல்ஆபி மாளிகைக்குச் சென்றான்.

மாளிகையில் பெருங் கூட்டமும் கோலாகலமுமாக இருந்தது. மணமகனான ஹேர் போர்டு பிரபு அழகிய மணவுடைதரித்து, மணமகளின் வருகைக்காக ஆத்திரத்தோடு மாளிகை முற்றத்தில் காத்துக்கொண்டு நின்றார். மணமகள் மணக்கோலங்கொண்டு வர மிகத் தாமதமாயிற்று. பொழுது போகப்போக மணவாளனுக்கு ஆத்திரம் பெருகிற்று. பரபரப்போடு அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்

தார். நடக்கையில், கிழப்பாணனான ராபின் கையில் ஒரு யாழுடன் அங்கே ஒரு மூலையில் நிற்பதைக் கண்டார்.

தற்பெருமைக்காரனான பிரபுவுக்கு ஏழைப் பாணன் நிற்பதைக் காணப் பொறுக்கவில்லை.

"இவனை யார் இங்கே விட்டது? மங்கள கரமான இந்நாளில் ஆண்டிகளுக்கு இங்கே இடமேது? உடனே இவனை அப்புறப்படுத் துங்கள்" என முழங்கினர் பிரபு.

"பிரபுவே! நான் ஒரு ஏழைப்பாணன். தங்கள் விவாக மஹோத்ஸவத்தைக் கண்டு களிக்கும்பொருட்டு இவ்விடம் வந்தேன். உத் தரவு கொடுத்தால் சுவைபொருந்திய பாடல் கள் பாடிக் கலியாணக் கூட்டத்தாரை மகிழ் விக்கிறேன்" என்றான் ராபின்.

ராபின் பேச்சைக்கேட்டு திருமணச்சடங்கு நடத்தவந்திருக்கும் அத்தியட்ச குருவும் அங் கே வந்தார்.

"எனக்குச் சங்கீதத்தில் மிகப் பிரியம். யாழி சை கேட்டு வெகு நாளாயிற்று. பாணரே! ஒரு நல்ல பாடல் பாடும்" என்று அத்தியட்ச குரு, ராபினைப் பார்த்துக் கூறினர்.

ராபினும் உடன்பட்டான்.

"விவாகம் முடிந்தபின், யாழிசை கேட்க லாம். இவர் பாடத் தொடங்கினல் இன்னும் தாமதம் உண்டாகும்" என்றார் மணமகனான பிரபு.

உடனே அத்தியட்ச குரு ராபினை நோக்கி, "பாணரே! நீர் ஆலயத்தில் சென்று காத் திரும்; நாங்கள் இதோ வருகிறோம். மணம் முடிந்த பிறகு, உமது பாடலைக் கேட்கிறோம்" எனக் கூறினர்.

ராபினும் அப்படியே ஆலயத்துட் சென்று வசதியான ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். சிறிது நேரம் சென்றபின், திருமணக்கூட் டத்தார் ஆலயத்துட் பிரவேசித்தனர்.

மணமகளான கிறிஸ்தபல் சீமாட்டியைப் பார்த்தவர்கள் எல்லோரும் முகம் வாடினர்.

கிறிஸ்தபல் சீமாட்டி ஒருபொருளினும் பதி யாத பார்வையோடும், இமை கொட்டா விழி யோடும் ஏங்கிய முகமும் நீங்கிய இதழும் உடையவளாய் உயிரிலா நிலையும் உணர்விலா நடையும் கொண்டு சூத்திரப்பாவைபோல் தோன்றினள்.

மணமகள் நிலைமை இவ்வாறாய் இருந்ததெ னினும், மணமகன் தன் கிழப்பருவத்தை முற்றிலும் மறந்து தற்கால நிலைமைக்கேற்ற படி குமரவேடந்தாங்கி நடித்தார். அவருடைய சிநேகிதர்களும் பரிசனரும் ஆநந்த சாகரத் தில் மூழ்கியிருந்தனர்.

ஆயினும் ஊர்வாயை மூட உலைமூடி யுண் டா? விவாகக்காட்சியைக் கண்டு களிக்க வந்த ஊரார், "கிறிஸ்தபல் சீமாட்டி இந்தப் படு கிழவனுக்குப் பலியாகும்படியா தெய்வச் சித் தம் இருந்தது? ஆலன்டேல் சீராளனுக்கு இம் மாதரசியை மனைவியாக்கத் திருவருள்புரியாத கடவுள் கல் நெஞ்சனே யாவன். கிறிஸ்தபல் சீமாட்டி இக்கிழவனை மணந்து எங்ஙனம் உயிர்தரிப்பாள்?" எனப் பலவாறு கூறி வம் பளந்தார்கள்.

முகூர்த்த சமயமும் குறுகிற்று. மணமக ளின் பிதா அவளைப் பீடத்தின்முன் கொண்டு வந்து நிறுத்தினர். அத்தியட்சரும் கல்யா ணச்சடங்கை ஆரம்பித்தார். இதுகாறும் மூலை யில் பதுங்கியிருந்த கிழப்பாணன் பரபரப் பாய் நடந்துவந்து பீடத்தின்முன் நின்றான்.

ஆலயத்தில் நின்றவர்கள் யாவரும் பெரும் வியப்படைந்தனர். அமைதி எங்கும் குடிகொ ண்டது. ஹேர்போர்டு பிரபு கண்களில தீப் பொறி பறக்க விழித்தார்; மேலும்கீழும் பார்த் தார்; உதட்டைக் கடித்தார்; பெருமூச்செறிந் தார்; கைக் கெட்டினது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ என ஐயுற்றார்.

"நான் இந்த அநீதியான விவாகத்தைத் தடுக்கிறேன்" என இடி இடித்தாற்போல் பாணக்கிழவன் கூறினான்.

"நீ யாவன்? இந்தப் புனிதத் திருமணத்தைத் தடுக்க உனக்கு என்ன உரிமை?" எனக் கேட் டார் அத்தியட்சர்.

இதற்குள் ராபின்ஹுட் பாணவேடத்துக் காக அணிந்திருந்த அழுக்குப்படிந்த கந்தைச் சொக்காயைக் கழற்றித் தூர எறிந்தான். போர்முனையில் சேனைத்தலைமை வகித்தற்குரிய தன் மெய்வண்ணத்தோடு யாவரும் திடுக்கிட வெளிப்பட்டான். வெளிப்பட்டதும், தன் கா ளத்தை எடுத்து உரக்க ஊதினான்.

"இவன் யார்?" என்றாள் மணமகள் தாயார்.

"இவனைப் பிடியுங்கள்! கட்டுங்கள்!" என அலறினர் மணமகன்.

"தேவாலயத்துக்குள் பலவந்தமாக நுழைந்த இந்தப்பாவி யார்? சாத்தன்தான் இவ்வடிவெடுத்து வந்தானோ?" எனக் கதறினர் அத்தியட்சர்.

மணமகள் பிரக்ஞையற்று உயிர்ப்பிணமாய் நின்றாள்.

இதற்குள் ராபினுடைய வீரர்கள் ஆலயத்தினுள் நுழைந்தனர். ஆலன்டேல் சீமானும் அவர்கள் நடுவே நின்றான்.

அவனைக் கண்டதும் சூரியனைக் கண்ட செந்தாமரை மலர்போல் கிறிஸ்தபல் முகம் பொலிவுற்றது. அவள் முகத்தில் அதியற்புதமான காதற்சோதி ஒளிவீசிற்று.

"இனிமேல் விவாகச்சடங்கு தொடங்கலாம். இதோமணமகள் நிற்கிறாள். அவளை மாலைசூட்ட இருவர் வந்திருக்கிறார்கள். மணமகளுக்குத் தேவையான புருஷனுக்கு அவள் தடையின்றி மாலைசூட்டலாம்" என்றான் ராபின்.

ஆலன்டேல் கிறிஸ்தபல்முன் வந்துநின்றான்.

ஹேர்போர்டு பிரபு தன் கையிலிருக்கும் அப்பத்தைப் பறிகொடுக்கப்போகும் சிறுவனைப்போல் விழித்தார்.

கிறிஸ்தபல் சீமாட்டி தன் ஆருயிர்க்காதலனைக் கண்டதும் மனவுறுதி பெற்றாள். தன் அன்பன் வீரர்களான துணைவர்களுடன் வந்திருப்பதையும் உணர்ந்தாள். இனித் தன் வாழ்நாள் வீணாகாதெனவும் கருதி மகிழ்ந்தாள். ஆலன்டேல் பக்கத்தில் வந்து அவனது பருத்துயர்ந்த புஜங்களில் சாய்ந்தாள்.

"அத்தியட்சரே! நேரம் வீணாகிறது. விவாகச்சடங்கைத் தொடங்கும்" என்றான் ராபின்.

"நில்! நில்! தேசச் சட்டப்படி இவ்விவாகம் நடைபெறவில்லை. ஆகையால் எனக்கு இந்த விவாகம் நடத்தமுடியாது" என்றார் அத்தியட்சர்.

"முடியாதானால் போம்" என்று கூறி, டக்குச்சாமியை அழைத்தான் ராபின்.

டக்குச்சாமி உச்சிமுதல் உள்ளங்கால் வரை வெள்ளையங்கிதரித்து பீடத்தின்முன் தோன்றினர். யாவரும் இந்த வேடிக்கையைப் பார்த்து கைகொட்டி யார்த்தனர்.

டக்குச்சாமி ஒன்றையும் சட்டைபண்ணவில்லை. விவாகச் சடங்கைக் கம்பீரமாக ஆரம்பித்தார். மூன்று முறைக்குப் பதிலாக ஏழு முறை சொல்லி—"இந்தப் பெண்ணை இந்தப் புருஷனுக்குக் கைப்பிடித்துக் கொடுப்பது யார்?" என்றார்.

ராபின்ஹுட் முன்வந்து "நான் கைப்பிடித்துக் கொடுப்பேன்" என்றான்.

கிறிஸ்தபலின் தகப்பனார் கோபத்தால் நடுங்கிக்கொண்டு நின்றார். ராபினையும் டக்குச்சாமியையும் ஒரே அறையாய் அறைந்து கொல்ல அவருக்கு மனமுண்டானாலும், ராபினுடைய இரண்டு வீரர்கள் அவருடைய கைகள் இரண்டையும் பிடித்து அசைய வொட்டாமல் தடுத்துக்கொண் டிருந்ததனால், பாவம்! வாய்திறக்கவும் சக்தியற்று நின்றார்.

மணமகனை ஹேர்போர்டு பிரபு நிலைமையும் அப்படித்தான். அவரும் இரண்டு வீரர்கள் கையில் சிக்கிக்கொண்டிருந்தார்.

ஆலன்டேலுக்கும் கிறிஸ்தபல் சீமாட்டிக்கும் மங்களமாக விவாகம் நிறைவேறியது.

விவாகம் முடிந்தவுடன், கணவனும் மனைவியும் ராபினைநோக்கி "ஐயா! நீர்செய்த நன்றிக்கு நாங்கள் எவ்வாறு பிரதிநன்றி செலுத்துவோம். நாங்களும் உம்மோடுகூட வாழ்ந்து களிப்படைய விரும்புகிறோம்" என்றனர்.

ராபினும் அதற்கு இணங்கினான். யாவரும் வனத்தில்சென்று சுகமாக வாழலாயினர்.

IV

ஒருநாள் ராபின் வனத்தில் உலாவிக்கொண்டிருந்தபொழுது ஒரு கொழுத்த ஆட்டு வாணிகன் ஒரு நேர்த்தியான குதிரைமீது இரண்டு பொதிகளை ஏற்றிக்கொண்டு சந்தைக்குப் போவதைக் கண்டான்.

விநோதப்பிரியனான ராபின் ஆட்டுவாணிகனைப் பார்த்து, "ஐயா! உம்மிடம் என்ன சாமான்கள் விற்பனைக்கு இருக்கின்றன. சாமான்களின் விலை என்ன?" என்று கேட்டான்.

"நான் ஆட்டிறைச்சி விற்கச் சந்தைக்குப் போகிறேன். இறைச்சிக்கும் குதிரைக்குமாக 200-ரூபா விலை" என்றான் ஆட்டுவாணிகன்.

ராபின் 200-ரூபா கொடுப்பதாகச் சம்மதித்தான்.

அதிக அலைச்சல் இல்லாமல் காலைப்பொழுதிலேயே தன்சரக்குக்கு நல்லவிலைகிடைத்ததைப் பற்றி ஆட்டுவாணிகன் மகிழ்ச்சியடைந்தான்.

ராபின் ரூபாயை எண்ணிக் கொடுத்தான். ஆட்டுவாணிகனும் இறைச்சியையும் குதிரையையும் ராபினுக்குக் கொடுத்தான்.

ராபின் பின்னும் 5-ரூபா கொடுத்து ஆட்டு வாணிகனுடைய சொக்காயையும் பெற்றுக் கொண்டான்.

உடனே ராபின் ஆட்டுவாணிகன் உடை தரித்து குதிரையேறி இறைச்சிப் பொதியோடு சந்தைக்குப் புறப்பட்டான். அவன் சந்தையை அடைந்தபொழுது அங்கே விற்போரும் வாங்குவோருமாகத் திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் குதிரைமேல் சென்ற புது ஆட்டுவாணிகனைக் கண்டு மிகக் களிப்படைந்தார்கள்.

ராபின் இறைச்சிப்பொதியை ஒருமரநிழலில் இறக்கி வியாபாரஞ் செய்யத் தொடங்கினன். மற்றவர்களைவிட இவன் மிக நயமாகக்கொடுத்ததனால் ஜனங்களெல்லோரும் இவனிடமே திரண்டுவந்தார்கள்.

“இவன்என்ன கிறுக்கனு? இராத்தல் ஒன்றுக்கு 4அணு விலையுள்ள இறைச்சியை 1அணுவுக்குக் கொடுக்கிறுனே!” என்றூர்கள் சிலர்.

“இவன் பரம்பரையாக இறைச்சி விற்பனை செய்யும் ஆட்டுவாணிகனல்ல. எங்கேயோ ஆடுகளைத் திருடி இப்படி மனம்போனபடி விற்கிறுன். தான்தேடாப் பொன்னுக்கு மாற்றுண்டா? உரையுண்டா?” என்றனர் வேறு சிலர்.

யார் என்னசொன்னுல் என்ன? ஒருமணி நேரத்துக்குள் ராபின் இறைச்சிமுழுவதும் விற்றுவிட்டான்.

அன்று அவ்வூர் நாட்டாண்மைக்காரன் சந்தை வியாபாரிகளுக்கு ஒரு விருந்தளிப்பதாய்ப் பறைசாற்றி யிருந்தான். ஆகவே வியாபாரம் முடிந்தவுடன் வியாபாரிகள் பலர் விருந்து வீட்டுக்குப்போகப் புறப்பட்டார்கள். ராபினும் அவர்கள் கூடச் சென்றுன். இதற்குள் ராபினுடைய உற்சாகப் போக்கையும் விகடப் பிரியத்தையும்ஊராரெல்லாரும் அறிந்துகொண்டனர். ஆதலால் நாட்டாண்மைத்தலைவன் ராபினை விசேஷமாக உபசரித்தான்.

ராபின் மிக மனங்களித்து “இன்றைய விருந்துச் செலவெல்லாம் என்னைப் பொறுத்தது. என்ன செலவென்று சொல்லும்! இதோ கொடுக்கிறேன்” என்று நாட்டாண்மைத்தலைவனைப் பார்த்துக் கேட்டான்.

நாட்டாண்மைக்காரன் செலவைப் பெறுவதற்குஒப்புக்கொள்ளவில்லையாயினும், ராபின் பெரிய சீமானுயிருக்க வேண்டுமென்றும், அவனிடம் கால்நடைகள் மிகுதியாக இருக்குமென்றும், உதாரசீலனை அவனிடத்தில் சொற்பப்பொருள் கொடுத்து, மிகுதியான கால்நடைகளைத் தந்திரமாக விலைக்கு வாங்கிக் கொள்ளவேண்டுமென்றும் தன்னுள்ளே எண்ணிக்கொண்டான்.

விருந்து வெகு விமரிசையாக நடந்தது. யாவரும் உண்டு களித்து உல்லாசமாக இருந்தார்கள். நாட்டாண்மைக்காரன் ராபினைத் தனியிடத்துக்கு அழைத்துக்கொண்டு போய், “நண்பரே! நீர் பெரிய சீமான்போல் தோற்றுகிறீர். உம்மிடம் எவ்வளவு கால்நடைகள் இருக்கின்றன?” என்று நயமாகக் கேட்டான்.

உடனே ராபின் அலட்சியமாக, “கால்நடையா? நாலைந்து மந்தைகளுண்டு” என்று கூறினுன்.

“மந்தை ஒன்றுக்கு எத்தனை கால்நடைகள் இருக்கும்?” என்றுன் நாட்டாண்மைக்காரன்.

“யார் எண்ணிப்பார்த்தார்கள்? ஐந்நூறு, ஆறுநூறு இருக்கலாம்” என்றுன் ராபின்.

நாட்டாண்மைக்காரன் மனம் பூரித்து, “எனக்கு 30-பசுவும், 20-எருதும், 50-ஆடும் வேண்டும். அவற்றிற்கு என்ன கிரயம் ஆகும்?” என்று ஆவலாய்க் கேட்டான்.

“கிரயமா? அதற்கென்ன? இஷ்டமுள்ளதைக் கொடுக்கிறதுதானே!” என்றுன் ராபின்.

நாட்டாண்மைக்காரன் தன் கையிலுள்ள முதலையெல்லாம் அரித்துப்பொறுக்கி எண்ணினன். கிட்டத்தட்ட 300-ரூபா இருந்தது.

“ஐயா! என்னிடம் 300-ரூபா இருக்கிறது. இதைப் பெற்றுக்கொண்டு நான் கேட்ட கால்நடைகளைக் கொடுப்பீரா?” என்றுன் நாட்டாண்மைக்காரன்.

“நீர் கேட்டதற்கு இரட்டிப்பாகத் தருகிறேன்” என்றுன் ராபின்.

பேராசைப் பித்தனை நாட்டாண்மைக்காரன் ஆனந்தக்கடலில் ஆழ்ந்துபோனுன்.

மறுநாட்காலையில் இருவரும் இரண்டு குதிரைகளில் ஏறிப் புறப்பட்டார்கள். பெருத்த இலாபகரமான வர்த்தகம் பண்ணப்போவதையெண்ணி நாட்டாண்மைத் தலைவன் மட்டற்ற மகிழ்ச்சிகொண்டான்.

இருவரும் வழிநெடுக உற்சாகமாக வார்த்தையாடிக்கொண்டு சென்றூர்கள்.

ஷேர்வுட் வனத்தின் பக்கத்தை அடைந்தவுடனே நாட்டாண்மைக்காரனுக்குக் கிலி உண்டாயிற்று.

"ஐயோ! இது படுபாவியான ராபின்ஹூட் வசிக்கும்படியான வனமாயிற்றே. உம்முடைய வீடு எங்கே இருக்கிறது? இந்த வழியே இனி நாம் போகவேண்டாம்" என்றான் நாட்டாண்மைக்காரன்.

"நீர் என்ன? பெரும் கோழையா யிருக்கிறீரே! ராபின்ஹூட் நம்மைப்போல் மனிதன் தானே. வந்தால் நாமும் ஒரு கை பார்ப்போம்" என்றான் ராபின்.

"நன்றாகச் சொன்னீர்! அவனோடு யாரால் எதிர்க்கமுடியும்? வீணாக நாம் தருமசங்கடத்துக்குள்ளாக வேண்டாம். வேறு வழியாகப் போவது நல்லது" என்றான் நாட்டாண்மைக்காரன்.

ராபின் அவன் வார்த்தைக்குச் செவிகொடுக்காமல் குதிரையைச் செலுத்தினான்.

பாதையின் இருபக்கங்களிலும் கலைமான்கள் கூட்டங் கூட்டமாய் மேய்ந்துகொண்டு நின்றன.

ராபின் அவைகளைத் தன் கூட்டாளிக் நச் சுட்டிக்காட்டி, "என்னுடைய கால்நடைகள் எவ்வளவு நேர்த்தியானவை பாரும்" என்றான்

நாட்டாண்மைக்காரன் பெரும் திகிலடைந்தான். முழுமோசத்தில் அகப்பட்டுக்கொண்டோமே என் மனம் நொந்து, "ஐபா! எனக்குக் கால்நடைகள் வேண்டாம். நான் திரும்பிப் போய்விடுகிறேன். தயவுசெய்து விடைகொடும்" என்று கெஞ்சினான்.

"திரும்பிப்போகிறீரா? நல்ல வேடிக்கை!" என்று சொல்லிக் காளத்தை எடுத்து ஊதினான்.

உடனே ராபினுடைய வீரர்கள் டக்குச்சாமி சகிதம் பிரசன்னமாயினர்.

அப்பொழுதுதான் ராபினுடைய கையில் சிக்கிக்கொண்ட விவரம் நாட்டாண்மைக்காரனுக்குத் தெரியவந்தது.

"புண்ணிய சீலரே! நாட்டிங்ஹாம் ஷயர் நாட்டாண்மைத்தலைவர் நம்மிடம் விருந்துக்கு வந்திருக்கிறார். அவர் கையிலுள்ளதைப் பெற்றுக்கொண்டு வயிறுபுடைக்க விருந்து கொடுத்தனுப்பும்" என்று ராபின் டக்குச்சாமியைப் பார்த்துச் சொன்னான்.

உடனே நாட்டாண்மைத்தலைவர் கையிலுள்ள ரூபாய் முந்நூறும் டக்குச்சாமி கையில் வந்தது. நாட்டாண்மைக்காரர் வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு கூப்பாடுபோடத் தொடங்கினார்.

ராபினும் வீரர்களும் மாயமாய் மறைந்துவிட்டனர்.

நாட்டாண்மைத்தலைவர் வெறுங் கையாய் வீடுநோக்கித் திரும்பினார்.

V

நாட்டிங்ஹாம் நாட்டாண்மைத்தலைவர் ஒரு விற்போட்டி விழா நடத்த ஏற்பாடுசெய்தார். இச்செய்தி ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு நாடெங்கும் பரவிற்று. ஷேர்வுட் வனத்திலிருந்த ராபினும் அவனுடைய வீரர்களுங் கூட அறிந்தார்கள்.

அக்காலங்களில் விற்போட்டி விழாவைப் போல் நாட்டுப்புற ஜனங்களுக்கு உற்சாகத்தையும் பரபரப்பையும் விளைவிக்கக்கூடியது வேறொன்றுமில்லை. ஆகவே ஆடவர் பெண்டிர் பாலர் விருத்தர் ஆகிய சமஸ்தரும் இவ்விழா நாளை வெகு ஆவலோடு எதிர்பார்த்து அதற்கு வேண்டிய யத்தனங்கள் எல்லாம் செய்யத் தலைப்பட்டனர்.

ராபின் கூட்டத்தாரும் சும்மா இருக்கவில்லை.

"நாமும் போட்டிக்குப் போகவேண்டும். நாட்டு வேடிக்கைகளைப் பார்க்காமல் எத்தனை நாள் வனவாசம் செய்வது" என்று வீரர்கள் எல்லோரும் ஆர்ப்பரித்துக் கூறினார்கள்.

ஆனால் ஒருவன்மட்டும் அதற்கு உடன்படவில்லை. "நாட்டாண்மைத்தலைவன் மிகத்துஷ்டன். அவனிடத்து எனக்குச் சிறிதளவும் நம்பிக்கையில்லை. ஒருவேளை நம்மைக் கண்ணியில் விழத்தட்டுவதற்கென்றே இவ்விற்போட்டி விழாவை அவன் ஏற்படுத்தியிருக்கவுங்கூடும்" என்று அவன் கூறினான்.

"அடே! நீ இவ்வளவு கோழையா? என்ன வந்தாலும் வரட்டும். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. நாமும் போகத்தான் வேண்டும்" என்றான் ராபின்.

"கட்டாயம் நாம் போகத்தான்வேண்டும். ஆனால் நாட்டாண்மைத்தலைவன் கையில் சிக்கிக்கொள்ளாமலிருக்க நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன். நாம் வழக்கமாக அணியும் பச்

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி மூக்கிற் கரியா ருடைத்து.

சைச் சொக்காய் அணிந்து போகக்கூடாது. ஒவ்வொருவனும் ஒவ்வொருநிறச் சட்டையணிந்துபோகவேண்டும்'' என்றான் சின்னஜான்.

“நீ சொன்னதே சரி. உன் யுக்தியை நான் மிக மெச்சுகிறேன்'' என்றான் ராபின்.

ஆகவே பன்னிறச் சட்டைகள் தயார்செய்ய உடனே ஏற்பாடுசெய்யப்பட்டது.

கடைசியாக அத்திருநாளும் வந்தது. நாற்றிசையிலுமிருந்து ஜனங்கள் திரள் திரளாக வந்து நாடிங்ஹாம் பட்டணத்தில் கூடினர். யாவரும் விழாநாளுக்குரிய அலங்காரப் புத்துடை தரித்திருந்தனர். நாட்டாண்மைத்தலைவனும் அவர்மனைவியும், அரசனும் இராணியும் போல் பந்தயஅரங்கத்தின் நடுவே ஒரு உயர்ந்த ஆசனத்தில் மிக ஒய்யாரமாக வீற்றிருந்தனர்.

விற்போட்டியில் பங்கு கொள்ள 200-வீரர்களுக்குமேல் முன்வந்தனர். ராபின் வீரர்களும் பற்பல உடைதரித்து அவ்வீரர் கூட்டத்துக்குள் நின்றார்கள். ராபின் ஒரு சிவப்புச் சொக்காய் தரித்து நாட்டாண்மைத் தலைவன் பக்கத்தில் நின்றான்.

அவ்வீரர் கூட்டத்தில் பச்சைச் சொக்காய் தரித்தவர்களைக் காணாது நாட்டாண்மைத்தலைவன் ஏமாந்துபோனான்.

“ராபினையாவது அவனது வீரர்களையாவது காணவில்லையே! அவன் ஒரு சுத்தவீரனென்று எண்ணியிருந்தேன். அவன் வெறும் கோழையென்று இப்பொழுதுதான் தெரிந்தது'' என்றான் நாட்டாண்மைத்தலைவன்.

அவன் பக்கத்தில்நின்ற ராபின் தன் நகைப்பை அடக்கமுடியாது மறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

முடிவில் விற்போட்டி தொடங்கிற்று. வீரர்கள் எல்லோரும் அம்பும் வில்லும் ஏந்தி வரிசை வரிசையாய் நின்றனர்.

சுமார் அரைமைல் தூரத்தில் பல தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அத்தூண்களின்மேல் வட்டவடிவமான தகரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தகரத்திலும் ஒவ்வொரு நிறச் சாயம் பூசப்பட்டிருந்தது. அத்தகரங்களின் நடுவே கால்ரூபாய் அளவில் வெள்ளைச் சாயம் பூசப்பட்டிருந்தது. அந்த வெள்ளை வட்டத்தல் குறிவைத்து ஊடுருவிச் செலலும்படி அம்பு விடுபவனுக்குப் பொற்கொண்டையுடைய ஒரு வெள்ளி அம்பு பரிசுகொடுப்பதாய் நாட்டாண்மைத்தலைவன் ஏற்பாடு செய்திருந்தான்.

ஒருவன் ஒரு காளத்தை ஊதினவுடனே விற்போட்டி தொடங்கிற்று.

ஒவ்வொரு வீரனாக முன்வந்து அம்புவிடத் தொடங்கினான். ஜனங்களெல்லோரும் கைகொட்டி ஆர்த்தனர். சிலருடைய அம்புகள் தகரங்களைத் தாக்கின. சிலருடைய அம்புகள் தகரங்களைத் தாக்காமலே சென்றன. அவ்வாறு செல்லும்போது ஜனங்கள் எல்லாரும் கைகொட்டி நகைத்தார்கள். எங்குபார்த்தாலும் கூப்பாடும் கொந்தளிப்படம் கைகொட்டும் ஆர்ப்பும் இடி இடித்தாற்போன்ற நகைப்புமாகவே இருந்தது.

நூறுவீரர்கள்வரை எய்தார்களாயினும், ஒருவன் அம்பாவது லட்சியத்தில் தாக்கவில்லை. வில்லாளிகளும் மனம் தளர்ந்தார்கள். காட்சி பார்க்க வந்தவர்களும் நகைத்தும் ஆர்ப்பரித்தும் அலுத்தார்கள்.

கடைசியாகச் சிவப்புச் சட்டைக்காரனை ராபின் முன்வந்தான். அதுவரையிலும் வந்தவர்களைவிட அவன் கம்பீரத் தோற்றமுடையவனாகக் காணப்பட்டமையால் யாவரும் அவனையே வியப்புடன் நோக்கிநின்றனர்.

“இவன் நிச்சயமாகப் பரிசு பெறுவான்'' என்றனர் சிலர்.

“இவன் ஜயம்பெறுவிட்டால் இப்பரிசை இனி யார் வாங்கப்போகிறார்கள் ?'' என்றனர் வேறு சிலர்.

“அவனது நீண்ட கைகளைப்பார்! உயர்ந்த புஜங்களைப்பார்!பரந்த நெஞ்சைப்பார்! இவனே சுத்தவீரன்'' என்றனர் பின்னும் சிலர்.

இவ்வாறாக ஜனங்கள் மதிப்பைப் பெற்ற ராபின் வில்லைவளைத்து நாணேறிட்டு அம்பு தொடுக்க முயன்றபொழுது, அங்கு கூடிநின்றவர்கள் எல்லோரும் ஒரே முகமாக “ஜே! ஜே!'' என்று முழங்கினர்.

ராபினுடைய அம்பு லட்சியத்தில் தாக்கி ஊடுருவிச் சென்றது.

அப்பொழுது அங்குண்டான ஆர்ப்பரிப்பையும் ஆனந்தகூத்தாட்டத்தையும் யாரால் வருணிக்கமுடியும் ?

பரிசு பெறும்பொருட்டு ராபின் நாட்டாண்மைத் தலைவன்முன் சென்றான். எங்கும் ஆநந்தமுழக்கமாகவே இருந்தது. “ஜே!'' என்ற பேரொலி வானமண்டலத்திலும் தாவிற்று.

"வீரனே! நீ வாழ்வாயாக!" உன்னை இதற்கு முன் பார்த்த ஞாபகம் இருக்கிறது. எந்த இடத்தில் என்று விளங்கவில்லை" என்று முகமன் கூறி நாட்டாண்மைத்தலைவன் மனைவி வெள்ளி அம்பை ராபினுக்குப் பரிசளித்தாள்.

ராபினும் பூமிமட்டும் தலைவணங்கி அதைப் பெற்றுக்கொண்டான்.

கூட்டம் கலையத் தொடங்கிற்று.

அங்கும் இங்கும் சிதறிநின்ற ராபினுடைய வீரர்கள் ஒவ்வொருவராக அவனைச் சேர்ந்து கொண்டார்கள். தங்கள் தலைவன் பரிசுபெற்றதை எண்ணி யாவரும் களிப்படைந்தார்கள்.

"பரிசுபெற்றவன் இன்னானென்று நாட்டாண்மைத் தலைவனுக்குத் தெரிவிக்கவேண்டுமே. அதற்கு என்ன வழி?" என்றான் ராபின்.

"அதற்கா வழியில்லை! ஒரு கடிதம் எழுதி அவனுக்கு அனுப்பினால் போதுமே" என்றான் சின்னஜான்.

"நல்ல யோசனை தான். கடிதத்தை யார் கொண்டுபோய்க் கொடுப்பார்கள். உங்களில் ஒருவரையும் அத்துஷ்டன் கையில் சிக்கிக்கொள்ளும்படிவிட எனக்கு மனமில்லை" என்றான் ராபின்.

"ஸபாஷ்! ஸபாஷ்!! கடிதத்தை எழுதும். அதை நாட்டாண்மைத்தலைவன் கையில் சேர்ப்பது என்னைப் பொறுத்த வேலை. கடிதத்தை ஒரு அம்புமுனையில்கட்டி, அவன் வீட்டுக்குள் விழும்படி எய்துவிட்டு ஒருவருக்கும் பிடிகொடுக்காமல் தப்பிவந்துவிடுவேன்" என்றான் சின்னஜான்.

"சந்தோஷம்! மெத்தச் சந்தோஷம்!! நீயே மதியூகி" என்று கொண்டாடினான் ராபின்.

கடிதமும் எழுதிக்கொடுக்கப்பட்டது. தான் கூறியபடியே அக்கடிதத்தை அம்பிற்கட்டி எய்துவிட்டு சின்னஜான் ராபினண்டை வந்தான்.

ராபின் பரிசுபெற்ற சமாசாரம்அறிந்து நாட்டாண்மைத்தலைவன் கோபத்தாலும் பொறாமையாலும் மனம்நொந்தான். தன் வாழ்நாள் முழுவதும்வீணானதாகதுக்கங்கொண்டான்.

V

இங்கிலாந்தில் அரசாண்ட முதலாவது ரிச்சேர்டு ஒரு பெயர்பெற்ற வீரன். ஆகையால் தன்னைப்போன்ற வீரர்களிடத்து அவன் மிகக் கருணையும் மதிப்பும் காட்டிவந்தான்.

ராபினுடைய பகைவர்கள் ராபினைப்பற்றி அரசனிடம் பலவாறாகக் கோட்சொன்னார்கள். "ராபின் மஹா துஷ்டன். ஆலயங்களையெல்லாம் கொள்ளையடிக்கிறான். அத்தியட்சர்களையும் பிரபுக்களையும் வழிமறித்து வருத்துகிறான். ஏழைகளுடைய ஆடுமாடு கோழிகளைப் பிடித்துக் கொன்று தின்கிறான். ஆதரவற்ற பெண்களை அவமானப்படுத்துகிறான்" என்றிப்படியெல்லாம் அரசனிடம் குற்றங் கூறினார்கள்.

ராபின் ஒரு பெயர்பெற்ற வில்லாளியென்றும், வீரனென்றும் அரசன் கேள்விப்பட்டிருந்தான். ஆகையால் ராபினை நேரிற்கண்டு உண்மையை அறிய எண்ணி அரசன் தானே பரிவாரங்களுடன் புறப்பட்டு நாட்டிங்ஹாம் பட்டணத்தை அடைந்தான்.

நாட்டிங்ஹாம் நாட்டாண்மைத் தலைவனோடு யோசனைசெய்து ராபின் வழக்கமாக நடமாடும் சந்துபொந்துகளிலெல்லாம் வீரர்களை நிறுத்தி, ராபினைச் சந்தித்தால் அவனைத் தொந்தரவு செய்யாமல் பிடித்துக்கொண்டு செல்லும்படி அரசன் ஏற்பாடுசெய்திருந்தான்.

பலநாள் பார்த்தும், ராபினை ஒருவராலும் சந்திக்க முடியவில்லை.

ஒருநாள் ஒரு பிரபு அரசனண்டை சென்று, "நாமெல்லாம் குருமாரைப்போல் உடைதரித்து ஷேர்வுட் வனத்தண்டை செல்லவேண்டும். ராபினுக்கு இயல்பாகவே குருமாரிடம் பெரும் பகையுண்டாம். ஆகவே கட்டாயமாக வெளிப்படுவான். அப்போது நாம் பிடித்துக் கொள்ளலாம்" என்று சொன்னார். (பின்னும் வரும்.)

(270-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாங்கள் அவர்களைப் பிடித்து உண்மையை ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டும்."

"ஐயா, மாசிலாமணி பிள்ளை! தாங்கள் சீக்கிரமாய் லோகநாதனுக்கும் புஷ்பவல்லிக்கும் திருமணத்தை முடித்துவிடுங்கள். நாம் இனி இங்கொன்றும் செய்யவேண்டியதில்லை. நம் இருப்பிடங்களுக்குச் செல்லுவோம்" என்று சொன்னார்.

மாஜிஸ்ட்ரேட் மட்டில் தங்கி, பாலய்யாவின் சொத்து விபரங்களுக்கு ஜாப்தா தயார் செய்ய ஏற்பாடுகள் செய்தார். மற்றெல்லோரும் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர். அன்று சாயங்கால மித்திரனில் எல்லா விஷயங்களும் சாங்கோபாங்கமாக வர்ணிக்கப்பட்டிருந்தன.

(இ நாவல் அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

ஆச்சாரியார் ஸ்ரீமான் பி. சி. ராய்.—வங்காள மாகாண மகாநாடு, சிராஜ்கஞ்ச் என்ற இடத்தில் கூடியபோது, கதர் கண்காட்சி சாலையை ஸ்ரீமான் ராய் திறந்துவைத்து ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அப்போது அவர், நம் நாட்டின் நிலையைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தபோது, தம் உணர்ச்சியை அடக்க முடியாதவராகி, வாய்விட்டு அழ ஆரம்பித்து விட்டாராம். கடைசியில் அங்கிருந்த ஒவ்வொருவரையும் கதரைக் கட்டும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். இப்பெரியார், தமது சாஸ்திர ஆராய்ச்சியையெல்லாம் விடுத்து, இந்தியாவின் வறுமையைப் போக்குவது கைராட்டினமே என்பதை உணர்ந்து நாடெங்கும் கதர்ப்பிரசாரம் செய்து வருகிறார். இவரைப் போற்றாதாரும் உளரோ?

ரெயில்வே வருமானம்.—சென்ற 3 வருஷங்களில் கவர்ன்மெண்டு இருப்புப் பாதைகளிலும், கவர்ன்மெண்டார் உத்தரவாதம் பெற்றிருக்கும் இருப்புப் பாதைகளிலும் 1-வது 2-வது, 3-வது வகுப்புப் பிரயாணிகளுக்குள்ள டிக்கட்டுகளின் விற்பனை மூலமாக கிடைத்த தொகை பின்வருமாறு:—

வருஷம்	வகுப்பு	வருமானம் ஆயிரக்கணக்கில்
1920-21	1	12709
	2	21800
	3	278154
1921-22	1	13497
	2	22145
	3	275790
1922-23	1	13632
	2	20453
	3	309240

மின்சார சக்தியைக்கொண்டு வியாதியைக் கண்டறிதல்.—லண்டன் ஹாலி தெருவிலுள்ள நிபுணரான டாக்டர் எச். வுட்ஸ் என்பவர் மின்சார சக்தியின் துடிப்பைக்கொண்டு வியாதிகளின் தன்மையை உணர்ந்து குணப்படுத்தும் புதியதொரு யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இது சுகவாழ்வுச் சங்கத்தின் கூட்டத்தில் வைத்துக் காட்டப்பட்டது. இதனால் வியாதிகளைக் கண்டுபிடித்து மருந்துகள் மூலம் அவற்றைத் தீர்ப்பதற்கு தற்காலமுறை அடியோடு மாறிப் போய்விடுமென்று கூறப்படுகிறது. ஸான் பிரான்ஸிஸ்கோவைச் சேர்ந்த டாக்டர் ஆப்ரஹாம் கண்டுபிடித்த யந்திரம் மாதிரி, கிளாஸ்கோவைச் சேர்ந்த டாக்டர் பாய்டும் நூதனமாக, "எமானோ மீட்டர்" என்ற யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கின்றார். இந்த யந்திரமானது வியாதிகள், அவற்றிற்குரிய மருந்துகள் இவற்றை எடுத்துக் காட்டுகின்றது. இந்த யந்திரம் பரம்பரையாக இருந்துவரும் குணங்களையும், வியாதிகளைத் தடுக்க வியாதியஸ்தர்களுக்குள்ள சக்தியையும், வியாதிகளின் தன்மையையும் தெரிவிக்கின்றன. அவர் வியாதியஸ்தரைப் பார்க்காமலே, அவர் ஆண்பாலரா பெண்பாலரா என்பதையும் தமது யந்திரத்தின் உதவியால் கண்டுகொள்ள முடிகிறது.

சம்பள உயர்வு.—1901-02 முதல், 1921-22க்குள் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளம் மொத்தத்தில் ஒன்றுக்கு மூன்றுபங்காக உயர்ந்திருப்பதற்குப் புள்ளி விவரங்களைச் சொல்லி ஸ்ரீமான் வி. வி. வேங்கடரமணய்யங்கார் சமீபத்தில் நடந்த சட்டசபை மீட்டிங்கில் நிரூபித்தார். அவர் அறிவித்த புள்ளி விவரங்களாவது:—

	1900-01 லக்ஷம்	1920-21 லக்ஷம்
3000 ரூபாய்க்கு மேற்பட்டவர்கள்	6	14.92
2000 முதல் 3000 வரை	11	28
1500 முதல் 2000 வரை	3·1	16·20
1000 முதல் 1500 வரை	12·0	28·92
500 முதல் 1000 வரை	18·0	38·70
250 முதல் 500 வரை	19·0	33·27
100 முதல் 250 வரை	26	73·0

இந்தியாவின் ராணுவச் செலவு.—1884-ம் வருஷத்தில் இராணுவச் செலவு 17 கோடி ரூபாய்; 1904-ம் வருஷத்தில் 28½ கோடி ரூபாய்; 1924-ம் வருஷத்தில் 60 கோடி ரூபாய். இந்தியாவில் இப்போது 57 ஆயிரம் வெள்ளைக்காரத் துருப்புகளும், 140-ஆயிரம் இந்தியத் துருப்புகளும் இருக்கிறார்கள்.

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம் பழித்த தொழித்து விடின்.

1924 காலெண்டர் **1924**

"ராவணனுடைய வனத்தில்" "சீதை" யிருக்கும் படம்

பிரசித்திபெற்ற ஜெர்மன் சித்திர வேலைக்காரராகிய
முல்லரால் எழுதப்பட்ட சித்திரவேலை

விலை **1**-க்கு அணா **4**. தபாற்கூலி உள்பட அணா **6**.

மொத்த வியாபாரிகளுக்கு **25**-க்கு ரூ. **4—8**. **100**-க்கு ரூ. **15**.

அமிருதா

ஞ்சனம்

ஸர்வ நோய்க்கும் ஸித்தௌஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து. (விலை அணா பத்து) எல்லா**விட**த்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும். இரண்டு தடவை உபயோகித்தவுடன் எவ்வித படையும் போய் விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணா நான்கு.

தந்தசூரணம். — பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். தினந் தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முக வசீகரமுண்டாக்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,
நெ. 6, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,
சென்னப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்.)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை யுயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்தி செய்து தலையின் அடிபாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும், மிஸ்டர் பனலோஸ் எழுதுகிறுர்:—காமினியா தைல த்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்" தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1 0 0	வி. பி. தபால்	செலவு	ரூ. 0 5 0	பிரத்தியேகம்
3 புட்டிகள்	,, 2 10 0	,,	,,	,, 0 14 0	,,

☞ **எச்சரிக்கை:**—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனல் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினுல் அவர்கள் முயற்சிக்கு ஏமாருமல் எப்பொழுதும் இக்காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள்:— **ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,**
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the Commercial Press & published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore, Madras.

SCANNED